மாலை 48 மணி 2 பிப்ரவரி 2006 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

## பழநியில் தைப்பூசத் திருவிழா

ஸ்ரீமனோன்மணீஸ்வரம்

சிவராத்திரி புண்ணிய சேத்திரம்



மும்மூர்த்திகள் அருள்பாலிக்கும் உத்தமர் கோயில்

நாச்சியார் கோயில் கல்கருடன்

காலச்சுவடுகள் :

பெரியகுளம் ஸ்ரீபெரியக்கா திருக்கோயில் தோன்றிய வரலாறு

# அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்



## சமயபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

தொலைபேசி எண் : 0431 2670460 பேக்ஸ்:0431 - 2670657
website:www.samayapurammariamman.org

## தைப்பூசத் திருவிழா அழைப்பிதழ்

தமிழகத்தின் மிகச் சிறந்த பிரார்த்தனை ஸ்தலமாகவும், சக்தி ஸ்தலங்களில் ஆதி பீடமாகவும் சுயம்பு அருள்மிகு மாரியம்மன் எழுந்தருள்பாலிக்கும் இத்தலத்தில் தைப்பூசத் திருவிழா 02.02.2006 முதல் 12.02.2006 வரை வெகுவிமரிசையாக நிகழ்ச்சி நிரலில் காணும் விபரப்படி நடைபெற உள்ளது.

### நிகழ்ச்சி நிரல் விபரம்.

| தேதி | திருநாள் | கிழமை | உற்சவ விபரம் | நேரம் |
|---|---|---|---|---|
| 02.02.06 | முதல் திருநாள் | வியாழன் | கொடியேற்றம் | காலை 9.27 மணி முதல் 10.40 மணிக்குள் |
| 03.02.06 | இரண்டாம் திருநாள் | வெள்ளி | சிம்ம வாகனத்தில் புறப்பாடு | இரவு 8.30 மணி |
| 04.02.06 | மூன்றாம் திருநாள் | சனி | பூத வாகனத்தில் புறப்பாடு | இரவு 8.30 மணி |
| 05.02.06 | நான்காம் திருநாள் | ஞாயிறு | அன்ன வாகனத்தில் புறப்பாடு | இரவு 8.30 மணி |
| 06.02.06 | ஐந்தாம் திருநாள் | திங்கள் | ரிஷப வாகனத்தில் புறப்பாடு | இரவு 8.30 மணி |
| 07.02.06 | ஆறாம் திருநாள் | செவ்வாய் | யானை வாகனத்தில் புறப்பாடு | இரவு 8.30 மணி |
| 08.02.06 | ஏழாம் திருநாள் | புதன் | சேஷ வாகனத்தில் புறப்பாடு | இரவு 8.30 மணி |
| 09.02.06 | எட்டாம் திருநாள் | வியாழன் | வெள்ளிக்குதிரை வாகனத்தில் புறப்பாடு | இரவு 8.30 மணி |
| 10.02.06 | ஒன்பதாம் திருநாள் | வெள்ளி | தெப்பம் (அம்மன் தெப்பத்தில் காட்சியளித்தல்) | இரவு 8.00 மணி முதல் 10.00 மணி முடிய |
| 11.02.06 | பத்தாம் திருநாள் | சனி | தைப்பூசம் (அம்பாள் கண்ணாடி பல்லாக்கில் வடதிருக்காவேரிக்குப் புறப்பாடு) | காலை 8.30 மணி |
| | | | தீர்த்தவாரி கண்டருளல் | மாலை 6.00 மணி |
| | | | திருவரங்கம் கோயில் சீர் பெறுதல் | இரவு 9.00 மணி |
| 12.02.06 | பதினொன்றாம் திருநாள் | ஞாயிறு | அம்பாள் வடதிருக்காவேரியிலிருந்து புறப்பட்டுநொச்சியல், மண்ணச்சநல்லூர் வழியாக உபயங்கள் கண்டருளித் திருக்கோயில் சேர்தல் | |
| | | | துவஜா அவரோறணம் | இரவு 11,30 மணி |

11.2.2006 தைப்பூசநன்னாளில் அம்பாள் வடதிருக் காவேரியில் தீர்த்தவாரி கண்டருளித் தன் சகோதரான ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதரிடமிருந்து சீர் பெறும் சிறப்பு மிக்க வைபவத்தை முன்னிட்டு அன்றைய தினம் வடதிருக் காவேரியில் சிறப்புக் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இவ்விழாவில் பக்தர்கள் அனைவரும் பங்கேற்று அம்பாளின் திருவருள் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**எம்.கணேசன்**
அறங்காவலர் குழுத்தலைவர்

**பி.ஆர்.அசோக்**
துணை ஆணையர்/செயல் அலுவலர்

அறங்காவலர்கள்

**எம்.பரமேஸ்வரி, எஸ்.முருகானந்தம், எம்.கே.ராஜேந்திரன், எஸ்.சிங்கபெருமாள் உத்தமநம்பி**
சுழல்முறை அறங்காவலர்

திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2037 பார்த்திப - மாசி
மாலை 48 மணி 2 பிப்ரவரி 2006



## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

''தாளாற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு''

என்ற திருக்குறளுக்கு இலக்கணமாக நம் தமிழகத்தில் பொற்காலச் சாதனைகளைத் தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றார் **நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.**

அச்சாதனைகளில் ஒன்று தான் திருக்கோயில் பணியாளர்களின் நீண்டநாள் கனவான ஓய்வூதியத் திட்டத்தை நனவாக்கி வைத்துள்ள **நம் மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் அறிவிப்பாகும்.

வருமானம் குறைவாக உள்ள திருக்கோயில்களுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் இனி மின்சாரம் வழங்கப்படும் என்று நம் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் அறிவித்திருப்பதும் ஒரு வரப்பிரசாதமான திட்டமாகும்.

சுமார் முப்பதாயிரம் சிறு கோயில்களில் இனி ஆன்மிக தீபம் தங்குதடையின்றி எரியும் என்பது திருக்கோயில் நிர்வாக வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

தமிழர்த் திருநாளாம் பொங்கல் திருநாள் முதலாக மேலும் 180 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை விரிவுபடுத்தித் திருக்கோயில்களுக்கு வந்து வழிபடும் பல லட்சக்கணக்கான பக்தர்களின் உள்ளங்களையும் மகிழச் செய்துள்ளார் நம் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள்.

**''மண்ணினில் பிறந்தார் பெறும் பயன்
மதிசூடும் அண்ணலார்
அடியார் தமை அமுது செய்வித்தல்''**

என்ற தெய்வச் சேக்கிழாரின் திருவாக்கைத் திருக்கோயில் அன்னதானத் திட்டத்தின் வாயிலாகச் செயற்படுத்தி வரும் நம் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின்அற்புத அறச் செயலை நித்தமும் பக்தர்கள் பாராட்டி வாழ்த்தி வருவதற்கு என் மனம் நிறைந்த நன்றியினைக் காணிக்கை யாக்குகின்றேன்.

இத்தகைய அறநிலையத் துறையின் பொற்காலச் சாதனைகளை விவரிப்பதோடு, மெய்யன்பர்கள் பாராட்டும் வகையில் அரிய ஆன்மீகப் படைப்புகளையும் புதுப்பொலிவுடன் வழங்கித் தமிழ்கூறு நல்லுலகத்தின் பாராட்டுக்களைக் குவித்து வருகின்றது நம் **''திருக்கோயில்''** இதழ்.

பக்தர்கள் மனத்தில் எண்ணிய எல்லாம் உடன் நிறைவேறச் செய்யும் விஜய நாராயணம் அருள்மிகு மனோன்மணீஸ்வரம் ஆலயம் பற்றிய கட்டுரை மெய்யன்பர்களை மகிழச் செய்யும் என்பது திண்ணம்.

சிவராத்திரி புண்ணிய சேத்திரமான இத்திருத்தலம் பற்றிய கட்டுரை, சிவராத்திரிச் சிறப்புக் கட்டுரையாக இவ்விதழில் இடம் பெற்று உள்ளது.

அரியலூர் வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் தியாகராஜன் அவர்களின் ''எது பாடல் பெற்ற தலம்?'' என்ற ஆய்வுக் கட்டுரையும் உங்கள் சிந்தனைக்குப் பெருவிருந்தாய் அமையும் என்பது திண்ணம்.

முனியன் என்ற ஊர்க்காவலனின் உயிர்த் தியாகத்தால் உருவான பெரிய குளம் ஸ்ரீபெரியக்கா திருக்கோயில் வரலாறு உண்மையில் உங்களைப் பரவசப்படுத்தும்.

வழக்கம் போல் அத்தனைச் சிறப்பு அம்சங்களும் பொருந்தி உங்களை மகிழ்விக்க வருகின்றது இந்தத் திருக்கோயில் இதழ். படித்துப் பயன் பெற வேண்டுகின்றேன்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை
சிறப்பான எதிர்காலம் அமையும் வகையில்

# கோவில்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஓய்வு ஊதியம்

தமிழ்நாடு பல்வேறு துறைகளிலும் முழு வளர்ச்சி அடைந்து இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ வேண்டும் என்ற எனது குறிக்கோளை எய்த வேண்டி எனது தலைமையிலான அரசு அனைத்துத் துறைகளிலும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்ற முதுமொழிக்கு ஏற்ப தமிழகத்தில் உள்ள அனைத்துக் திருக்கோவில்களும் புதுப்பொலிவு பெற்று பூஜை முதலியன தினந்தோறும் தங்கு தடையின்றி நடைபெறுவதற்கும், பழுதடைந்த திருக்கோவில்களைப் புதுப்பித்து, திருப்பணி செய்வதற்கும், ஆன்மீகம் தழைத்துச் செழித்து ஓங்குவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை நான் எடுத்து வருகிறேன்.

திருக்கோவில்களுக்கு வரும் ஏழை எளிய பக்தர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கும் நோக்கத்துடன் அன்னதான திட்டம் 23.3.2002 அன்று என்னால் தொடங்கப்பட்டு தற்போது 180 திருக்கோவில்களில் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது. இந்த உன்னதமான திட்டத்தை வரும் 14-1-2006 முதல் மேலும் 180 திருக்கோவில்களுக்கு விரிவுபடுத்தி மொத்தம் 360 திருக்கோவில்களில் செயல்படுத்தப்பட நான் ஆணையிட்டு உள்ளேன்.

பாடல் பெற்றதும், மங்களாசாசனம் பெற்றதுமான திருக்கோவில்கள் பெற்றதுமான திருக்கோவில்கள் உள்பட பழமையான பழுதுபட்ட திருக்கோவில்கள் அனைத்தும் பழுது நீக்கப்பட்டு புதுப்பொலிவுடன் குடமுழுக்கு செய்யப்பட வேண்டும் என்ற எனது திட்டத்தின் அடிப்படையில் கடந்த நாலரை ஆண்டுகளில் 4,430



## இதழின் உள்ளே ....


| | | |
|---|---|---|
| 1. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை: சிறப்பான எதிர்காலம் அமையும் வகையில் கோயில்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் | 2 |
| 2. | அபிடேகப் பலன்கள் | 4 |
| 3. | பழநியில் தைப்பூசத் திருவிழா - அருள் செல்வி | 5 |
| 4. | சிவராத்திரி புண்ணிய சேத்திரம்: வடக்கு விஜயநாராயணம் ஸ்ரீமனோன்மணீஸ்வரம் | 7 |
| 5. | கேள்வி - பதில் | 9 |
| 6. | வைராக்கியம் - ''எழுத்துச் சித்தர்'' பாலகுமாரன் | 10 |
| 7. | சிவராத்திரியில் வாக்குறுதி தவறாத மான்கள் - பருத்தியூர் டாக்டர் கே. சந்தான ராமன் | 13 |
| 8. | தவத்திரு அப்பா பைத்தியம் சுவாமிகள் கவிஞர் - ஈரோடு ஆற்றலரசு | 15 |
| 9. | காலச்சுவடுகள்: பெரிய குளம் ஸ்ரீ பெரியக்கா திருக்கோயில் தோன்றிய வரலாறு - அ.நிறைமதி பி.எல் | 16 |
| 10. | மும்மூர்த்திகள் அருள்பாலிக்கும் உத்தமர் கோவில் | 17 |
| 11. | திருவிளையாடல் புராணம் - இரா. அரங்கசாமி | 20 |
| 12. | மகாபாரதம் - முனைவர் த.அமிர்தலிங்கம் | 22 |
| 13. | திருமந்திர உபதேசம் - திருமந்திரச் செல்வர் டி.வி.வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு) | 27 |
| 14 | நவதிருப்பதிகள் - (முன்தொடர்ச்சி) | 29 |
| 15. | பெரியது எது? - டாக்டர் பு.ஏ.இராமையா இ.ஆ.ப. | 30 |
| 16. | தமிழ் நாட்டுச் சித்தர் பரம்பரை - கொங்கணச் சித்தர் | 32 |
| 17. | நாச்சியார் கோயில் கல்கருடன் - ஏ.கிருஷ்ணன் | 34 |
| 18. | திருநீறு தந்த கைமேல் பலன் (நீதிக்கதை) | 36 |
| 19. | எது பாடல் பெற்ற தலம்? திருவிசய மங்கையா? கோவிந்தப் புத்தூரா? - டாக்டர் இல.தியாகராஜன் | 38 |

திருக்கோவில்களில் குடமுழுக்கு சிறப்பாக நடத்தப்பட்டு உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோவில்களின் வளர்ச்சிக்குத் திட்டமிட்டு செயல்பட்டு வரும் அதே நேரத்தில், திருக்கோவில்களில் பணி புரியும் ஊழியர்களின் நலனையும், ஓய்வு பெற்ற பின்பு அவர்களுக்கு ஒரு சிறப்பான எதிர்காலம் அமைய வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களை நான் செயல்படுத்தி வருகிறேன்.

நிதி வசதி குறைந்த திருக்கோவில்களில் பணி புரியும் ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்கவும் அகவிலைப்படி வழங்கவும் தேவையான நிதி உதவி வழங்கத் தனியாக ஒரு தொகுப்பு நிதியை நான் உருவாக்கி அந்தத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருக்கோவில்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓதுவார்கள், அரையர்கள், திவ்வியப் பிரபந்தம் பாடுவோர், அர்ச்சகர்கள், வேதபாராயணர்கள், இசைக் கலைஞர்கள் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத சிறு திருக்கோவில் பூசாரிகள் ஆகியோர் பெற்று வரும் ஓய்வு ஊதியத் தொகையை மாதந்தோறும் 500 ரூபாயில் இருந்து 750 ரூபாயாக உயர்த்தி வழங்கிட கடந்த 16-11-2005 அன்று நான் ஆணையிட்டு உள்ளேன்.

திருக்கோவில்களில் பணிபுரியும் கண்காணிப்பாளர்கள், எழுத்தர்கள், தட்டச்சர்கள், பாதுகாவலர்கள், மடப்பள்ளியில் பணிபுரிவோர், அலுவலக உதவியாளர்கள் போன்றோர் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின் ஓய்வு ஊதியம் எதுவும் இல்லாமல் வருந்தும் நிலையினை எனது கவனத்துக்கு கொண்டு வந்து அவர்களுக்கும் ஓய்வு ஊதியம் வழங்கும்படி திருக்கோவில் பணியாளர்கள் என்னிடம் வேண்டுகோள் விடுத்து உள்ளனர்.

இந்த வேண்டுகோளை ஏற்று, நிதி வசதி உள்ள திருக்கோவில்களில் பணிபுரியும் கண் காணிப்பாளர்கள், எழுத்தர்கள், தட்டச்சர்கள், பாதுகாவலர்கள், மடப்பள்ளியில் பணிபுரிவோர், அலுவலக உதவியாளர்கள் போன்ற அனைத்து நிரந்தரப் பணியாளர்களும் ஓய்வு ஊதியம் பெற்றிடும் வகையில் அவர்களைப் பணியாளர் சேமநல நிதித் திட்டத்தில் கொண்டு வர நான் ஆணையிட்டு உள்ளேன்.

இந்தத் திட்டத்தின்படி, திருக்கோவில்களில் பணியாளர்களுககுக் கீழ்க்காணும் பயன்கள் கிடைக்கும்.

குறைந்தபட்சம் 20 ஆண்டுக்காலம் பணி நிறைவடைந்து, ஓய்வு பெறும் பணியாளருக்கு ஓய்வு ஊதியமாக மாதந்தோறும குறைந்த பட்சம் 750 ரூபாய் கிடைக்கும்.

பணியாளர் பணியின் போது இறக்க நேரிட்டாலோ அல்லது ஓய்வூதியதாரர் இறந்த பின்போ, குடும்ப ஓய்வு ஊதியம் வழங்கப்படும்.

ஓய்வு ஊதியத்தின் ஒரு பகுதியை ஒப்படைத்து அந்தத் தொகையைப் போல 100 மடங்கு தொகையை ஓய்வு பெறும் போது ஒட்டுமொத்தமாகப் பெற முடியும்.

பணியின் போது இறந்தால் 60 ஆயிரம் ரூபாய் காப்பீடு (இன்சூரன்சு) உதவி வழங்கப்படும்.

## சந்தனக்காப்பின் சிறப்பு



இறைவன் திருமேனியில் சந்தனக்காப்பு பொருத்திக் குளிர்வித்தால் உலகில் உள்ள எல்லா உயிர்களையும் குளிர்வித்தல் போலாகும். இறைவருக்கு ஒரு முறை சந்தனக்காப்புச் செய்தவர் தேவ வருடத்தில் கோடி வருடம் சிவலோகத்தில் இன்புற்று இருப்பர்.

* 10 ஆண்டு பணி நிறைவடைந்த பின்பு, விருப்ப ஓய்வில் சென்றாலும் ஓய்வு ஊதியம் உண்டு.

* பணிக்காலத்தில் திருமணம், வீடு கட்டுதல், போன்றவற்றிற்காக கடன் வசதி பெற வழி உண்டு.

* பணிக்காலத்தில் நிரந்தர ஊனம் அடைந்து, பணியில் இருந்து விலக நேரிட்டாலும் ஓய்வு ஊதியம் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின்படி, திருக்கோவில் நிர்வாகமும், துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோவில்களில் பணிபுரியும் பணியாளரும் திட்டத்துக்கு உரிய பங்குத் தொகையை மாதந்தோறும் செலுத்த வேண்டும். இந்த திட்டத்தின் மூலம் 5,011 நிரந்தரப் பணியாளர்கள் பயன் பெறுவார்கள்.

இந்தத் திட்டத்தில் உறுப்பினராகச் சேர்ந்து 10 ஆண்டுகளுக்குள் ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு பணியாளர் சேம நல நிதி திட்டத்தின் கீழ் ஓய்வு ஊதியம் கிடைக்காது. ஆனால் இதர பயன்கள் கிடைக்கும். மேலும், நிதி வசதியில்லாத சிறிய திருக்கோவில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் பணியாளர் சேமநல நிதித் திட்டத்தின் கீழ் பங்குத் தொகை செலுத்துவது மிகவும் சிரமம் என்பதால் அவர்களுக்கு இந்தத் திட்டத்தை நீட்டிக்க இயலாது.

எனவே, இந்த இருவகைப்பிரிவினருக்கும், அவர்கள் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்பு, ஓய்வு ஊதியம் கிடைக்கும் வகையில் திருக்கோவில்களின் உபரிநிதியில் இருந்து ஒரு தொகுப்பு நிதி உருவாக்கி, அதில் இருந்து கிடைக்கும் வட்டி வருவாய் மூலம் அவர்களுக்கு மாதம் 750 ரூபாய் ஓய்வு ஊதியம் வழங்கும் வகையில் ஒரு புதிய திட்டத்தை வகுத்து, செயல்படுத்த நான் ஆணையிட்டு உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத்திட்டத்தின் மூலம் திருக்கோவில்களில் பணியாற்றும் 4,862 பணியாளர்கள் பயன் பெறுவார்கள்.

தமிழகத்தில் திருக்கோவில்களில் பணியாற்றும் நிரந்தரப் பணியாளர்களுக்கு, அவர்கள் ஓய்வு பெற்ற பின்பு, சிறப்பான எதிர்காலம் அமையும் வகையில் நான் தீட்டி உள்ள இந்த புதிய ஓய்வு ஊதியத் திட்டத்தின் மூலம் 9,873 பணியாளர்கள் பயன் அடைவார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தை உடனடியாக செயல் படுத்தும்படி அதிகாரிகளுக்கு நான் ஆணையிட்டு உள்ளேன்.


★★★


# அபிடேகப் பலன்கள்





| | |
|---|---|
| எண்ணெய் | சுகம் |
| மாப்பொடி | கடனைப் போக்கும் |
| நெல்லிமுள்ளிப் பொடி | நோய் போக்கும் |
| பஞ்சகவ்யம் | மனத்தூய்மை உண்டாகும் |
| பஞ்சாமிர்தம் | வெற்றியைத் தரும் |
| நெய் | வீடுபேறு |
| பால் | ஆயுளை வளர்க்கும் |
| தயிர் | மக்கட்பேறு நல்கும் |
| தேன் | சுகம் தரும் |
| கரும்புச்சாறு | பிணி நீங்கும் |
| சர்க்கரை | சத்துருவை அழிக்கும் |
| பழவர்க்கம் | கோபம் போக்கும் |
| எலுமிச்சம்பழம் | எமபயம் போக்கும் |
| இளநீர் | யோகம் தரும் |
| சந்தனம் | லட்சுமி கடாட்சம் |
| அன்னாபிஷேகம் | சாம்ராஜ்யம் |













# பழநியில் தைப்பூசத் திருவிழா

அருள் செல்வி

தைப்பூசம் என்றாலே மக்களுக்கு நினைவிற்கு வருவது பழநித் தைப்பூசத் திருவிழா தான்.

பல லட்சக்கணக்கான முருகபக்தர்கள் தைப்பூசநாளில் பழநிமுருகப் பெருமானைத் தரிசிக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டு பழநிக்குப் பாதயாத்திரையாகப் புறப்பட்டு வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.


பழநிமுருகனை வழிபடும் பக்தர்களுக்குத் தாயார் பார்வதியும், தந்தை பரமசிவனும் வேண்டிய எல்லாம் வாரிவழங்குவார்கள்.


பரமசிவனாரின் உற்ற தோழராம் குபேரனும் முருகனடியார்களுக்கே அளவிலாச் செல்வத்தை வாரி வாரி வழங்குவார்.

பாற்கடலில் பள்ளிக் கொண்டு விளங்கும் திருமாலும், அஷ்டலக்குமியரும் தம் மருகனார் முருகனார் அடியார்களுக்கே செல்வம் யாவும் குவிப்பர்.

தெய்வானையை மணம் செய்வித்துத் தந்து முருகப்பெருமானின் மாமனார் ஆகும் பேறு பெற்ற தேவேந்திரனும் கற்பகமரம், காமதேனு, சிந்தாமணி எனத் தம்மிடம் உள்ள, கேட்டதெல்லாம் வழங்கக் கூடிய அபூர்வ சக்திகளைக் கொண்டு அறுமுகனார் அடியார்களுக்கு வற்றாத செல்வத்தை வாரி வாரி வழங்குவார்.

இதனால் தான் பழநிக்குப் பாதயாத்திரையாகத் தைப்பூசத் திருவிழாவிற்கு குவியும் பக்தர்களின் கூட்டத்திற்கு அளவே இல்லை எனலாம்.





முருகப் பெருமானின் திருவடிகள் நமக்கு இகபரசுகங்கள் யாவும் வழங்கி முத்திப் பேற்றினையும் வழங்கிடும் என்பதால் பிறவிக்கடல் கடக்கப் பக்தர்கள் பற்றிக் கொள்ள வேண்டிய தோணி அவன் திருவடிகள் என்று போற்றுகின்றார் சிதம்பரசுவாமிகள்.

**''மயிலும் அயிலும் கொண்டு**
**வன்பகை தணிக்கலாம்**
**மலரடி தோணிக் கொண்டுன்**
**மாறாத பவ சலதி**
**ஏழும் கடக்கலாம்''**

என்பது திருப்போரூர் சந்நிதி முறை.

**''யாதும் நிலையற்று அலையும்**
**ஏழு பிறவிக் கடலை**
**ஏறவிடு நற்கருணை ஓடக்காரன்''**

என்பது அருணகிரிநாதரின் வேளைக்காரன் வகுப்பு.

முத்தியின்பம் பெற வேண்டுமானால் முருகன் திருவடியாகிய தெப்பத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்திடும் வகையில் தான் தைப்பூசநன்னாளில் தெப்போற்சவங்கள் மிகச் சிறப்பாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் தைப்பூசத் திருவிழா மிகச் சிறப்பாக நிகழ்ந்த சிறப்பினைத் திருஞானசம்பந்தர்

**''மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலை**
**கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**நெய்ப்பூசு ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்**
**தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்''**

என்று பாடியுள்ளார்.

திருவிடைமரூதூர் திருத்தலத்தில் தைப்பூசவிழா மிச் சிறப்பாக நடைபெற்ற சிறப்பைத் திருநாவுக்கரசரும், மாணிக்கவாசகரும் தத்தம் அருட்பாக்களில் விவரித்துள்ளார்கள்.

தைப்பூசவிழா சிவாலயங்கள், அம்மன் திருத்தலங்கள், முருகப் பெருமான் ஆலயங்கள் அனைத்திலும் சிறப்புறக் கொண்டாடப்பட்டு வருகின்றது. பழநியில் தைப்பூசவிழா காணக் கண்கோடி வேண்டும் ஒப்பில்லா ஒருபெரும் விழாவாகும்.

**''தண்டாயுதப் பழநிதங்குவடி வேலவரைக்**
**கண்டார் பெருவாழ்வு கண்டாரே''**

என்பது பழநித் தலபுராணம்.

பழநியில் தைப்பூசவிழாவன்று பழநிமுருகப் பெருமானைக் கண்டு ஒரு நாள் பூசை செய்து வழிபட்டாலே இப்பூவுலகமெங்கும் உள்ள புண்ணிய தலங்கள் அனைத்தையும் நாம் வாழ்நாள் முழுதும் வழிபட்டுப் பெறக்கூடிய பலன்கள் யாவும் பெற்று இன்புறலாம் என்றும் தலபுராணம் போற்றுகின்றது.

**''சகல உலகினரும் அடிபரவ**

**ஒரு பொருள் உதவும்**

**தண்டபாணித் தெய்வமே!''**

என்று தண்டபாணிப் பதிகத்தில் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் பழநிமுருகப் பெருமானைக் கொண்டாடுகின்றார்.

அருணகிரிநாதர் பாடியுள்ள ஒவ்வொரு திருப்புகழும் முருகப் பெருமானைப் போற்றும் வகையில் ''பெருமாளே!'' என முடியும் சிறப்புடையது. நாலுமுறை ''பெருமாளே!'' என்று விளித்துப் பழநிமுருகனையே ஒரு திருப்புகழில் போற்றியுள்ளார்.

அப்பாடற்பகுதி பின்வருமாறு:

**''துரிதமிடு நிருதர்புரச் சூறைக்காரப் பெருமாளே!**
**தொழுது வழிபடும் அடியர் காவற்காரப் பெருமாளே!**
**விருதுகவி விதரண விநோதக்காரப் பெருமாளே!**
**விறல்மறவர் சிறுமி திரு வேளைக்காரப் பெருமாளே!''**


அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பெரும் செல்வங்களையும் நல்கி, ஞாலம் கொண்டாட அடியார்களை வாழச் செய்வது பழநிமுருகப் பெருமானின் திருவருளே ஆகும்.

தைப்பூசத் திருநாளில் பழநித் திருத்தலம் சென்று ஞானதண்டாயுதபாணி சுவாமியை வழிபட்டு, சகல செல்வங்களும் நாம் பெற்று இன்புறுவோமாக!

## திருப்பணி செய்தால் திருக்கயிலை சேரலாம்

திருக்கோயில் திருப்பணி செய்தோர் திருக்கயிலை சேர்வர் என்பதைக் குறிக்கும் பாடல் இது.

புல்லினால் ஐந்து கோடி
புதுமண்ணால் பத்து கோடி
செல்லுமா ஞாலம் தன்னில்
செங்கல்லால் நூறு கோடி
அல்லியங்கோதை
கேளாய்
அரனுறை ஆலயத்தைக்
கல்லினால் செய்வித்
தோர்கள்
கயிலைவிட்டு அகலார்
அன்றே.



## சிவராத்திரி புண்ணிய சேத்திரம்:

# வடக்கு விஜயநாராயணம் ஸ்ரீமனோன்மணீஸ்வரம்



திருநெல்வேலியில் அமைந்துள்ள விஜயநாராயணம் மிகவும் புனிதமும், தொன்மையும் மிக்க திருநகரமாகும். இங்கு மூன்று திருக்கோவில்கள் உள்ளன.

1. ஸ்ரீ ஆதிநாராயணசாமி திருக்கோவில்:

அர்ச்சுனனுக்கு மகாபாரதப் போரில் வெற்றி பெறுவோமா? என்ற தயக்கம் ஏற்பட்ட போது ஸ்ரீவியாசரின் கூற்றுப்படி இங்கு வந்து தவமிருந்து ஸ்ரீநாராயணரின் அருள் பெற்று பாரதப் போரில் வெற்றி பெற்றான். பின் இவ்விடம் வந்து இக்கோவிலைக் கட்டி 1008அந்தணர்களைக் குடிஅமர்த்தி இவ்வூரை உருவாக்கினார். அர்ச்சுனனாகிய விஜயன் நாராயணருக்குக் கோவில் கட்டியதால் இவ்வூர் விஜயநாராயணம் என்று பெயர்பெற்றது. பெரிய திருமேனியுடன் பெருமாள் காட்சி அளிக்கிறார்.

2. ஸ்ரீ இராஜகோபால சுவாமித் திருக்கோவில்:

பிரம்மதேவர் ஸ்ரீ நாராயணரிடம் தாம் பூஜை செய்வதற்காக நேரில் பெற்ற பெருமாள் இங்கு எழுந்தருளியுள்ளார். மிகவும் அழகுமிக்க திருமேனியுடன் அருட்சக்தி மிக்கவராகக் காட்சியளித்து வருகிறார்.

3. ஸ்ரீமனோன்மணீஸ்வரர் திருக்கோவில்:

அளப்பரிய பெருமை வாய்ந்தது இத்திருக்கோவில்.

விஜயநாராயணம் இந்துக்களின் மெக்கா. ஒவ்வொரு இந்துவும் வாழ்வில் ஒரு முறையேனும் விஜயநாராயணம் காண வேண்டும் என்று சான்றோர்கள் கூறுகின்றனர்.

ஸ்ரீமனோன்மணீச்வர சிவன் கோவில்:

'பௌர்ணமி, சிவராத்திரி நாட்களில் இங்கு வந்து வணங்குகின்றவர்களுக்குத் திருக் கைலாயத்தில் அருளுவது போல திருவருள் புரிகிறேன் என்று சிவபெருமான் பார்வதி தேவிக்குக் கூறிய திருத்தலம் விஜயநாராயணத்திலுள்ள மனோன்மணீச்வரத் திருக்கோவில் ஆகும். இத்திருக்கோவில் 1008 சிவஷேத்திரங்களில் 74-வது திருக்கோவில் ஆகும். பஞ்சகைலாயத்தில் கடைசித் திருக்கோவிலும் ஆகும். சிவராத்திரி அன்று வேடன் முக்தி பெற்ற திருத்தலம் இதுவே ஆகும்.

இங்கு எழுந்தருளி அருள்புரியும் சிவபெருமானின் திருநாமம் மனோன்மணீச்வரர் என்பதாகும். மனோன்மணி என்றால் 'மனதில் நினைத்ததை அருள்கின்றவர்' என்று பொருள். தெய்வீக லோகங்களில் உள்ள காமதேனு சிந்தாமணி, கற்பக விருட்சம் போல இங்கு வருகின்ற அனைத்து உலக மக்களுக்கும் நினைத்ததை அருளுவதால் மனோன்மணீஸ்வரர் என்ற திருநாமத்துடன் சிவபெருமான எழுந்தருளியுள்ளார்.

| | |
|---|---|
| இறைவன் | - மனோன்மணீச்வரர் |
| இறைவி | - மனோன்மணீச்வரி |
| விமானம் | - மனோன்மணி விமானம் |
| தீர்த்தம் | - மனோன்மணி தீர்த்தம் என்ற சிவகங்கைத் தீர்த்தம் |
| ஷேத்திரம் | - மனோன்மணீச்வரம் |

என்று உள்ளதால் இத்தலம் பஞ்சமனோன்


திருக்கோயில்
திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச்சந்தா | ரூ 120/ |
| பத்து ஆண்டுச்சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச்சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :

| | |
|---|---|
| 1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

மணீச்வரம் என வழங்கப்படுகிறது. இப்படி இந்தியாவில் உள்ள ஒரே திருக்கோவில் இது மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவபெருமான் பௌர்ணமி அன்று இங்கு தோன்றியதால் பௌர்ணமி பூஜை, ஷேத்திரவலம் மிகவும் விசேஷமானதாகும். பௌர்ணமியன்று இரவில் சப்தரிஷிகள் இன்றும் பூஜை செய்வதாக ஐதீகம், 21 சித்தர்கள் கோவிலைச் சுற்றித் தவமிருப்பதாகவும், பௌர்ணமி, சிவராத்திரி ஆகிய நாட்களில் இரவு முழுவதும் இக்கோவிலை வலம் வந்து வணங்குவதாகவும் ஸ்தலபுராணம் கூறுகிறது.

இத்திருத்தலத்தின் தெய்வீக வரலாறு பின்வருமாறு:

திருக்கைலாயத்தில் பார்வதி தேவி உலக நலத்திற்காகச் சிவபெருமானைத் தியானித்து 1008 தேவ தாமரைப் புஷ்பங்களைத் தூவினாள். அப்புஷ்பங்களைச் சிவபெருமான் 1008 இடங்களில் லிங்க வடிவில் தோன்றி ஏற்றார். அவ்விடங்கள் 1008 சிவஷேத்திரங்கள் ஆகின. இதில் மனோன்மணி லிங்கம் தோன்றியது விஜயநாராயணத்தில் ஆகும். எனவே மனோன்மணீச்வரம் என அழைக்கப்படுகிறது. இது 1008 ஷேத்திரங்களில் 74-வது ஷேத்திரமாகும்.

ஆதியில் இத்திருக்கோவில் இருக்குமிடம் வில்வமரங்களும், மருதாணி மரங்களும் நிறைந்த காடாக இருந்தது. இதன் நடுவே ஒரு பொய்கையும் இருந்தது. இதன் கரையில் நின்ற வில்வ மரத்தினடியில் தோன்றிய அந்தச் சிவலிங்கத்தைச் சப்தரிஷிகள் பூஜித்து அருள் பெற்றுச் சென்றனர். மேலும் பௌர்ணமி தோறும் அவர்கள் இரவில் பிறர் கண்களுக்குத் தெரியாமல் வந்து பூஜித்துச் சென்று கொண்டிருந்தனர்.

ஒரு வேடன் இவ்வனத்திற்கு வேட்டையாட வந்தான். பகலில் எதுவும் கிடைக்கவில்லை. இரவு வந்ததும் பொய்கைக் கரையில் நின்ற வில்வ மரத்தில் ஏறி அமர்ந்தபடி தண்ணீர் அருந்தவரும் மிருகங்களை எதிர்பார்த்து இருந்தான். அப்போது தூக்கம் வரவே வில்வ இலைகளைப் பறித்து ஒவ்வொன்றாகக் கீழே போட்டுக் கொண்டே இருந்தான். அது அடியிலிருந்த சிவலிங்கத்தின் மீது விழுந்து கொண்டிருந்தது. விடியும் நேரம் நெருங்கியது. அப்போது பார்வதி தேவியுடன் சிவபெருமான் அவனுக்குக் காட்சியளித்தார். வேடன் ஆச்சரியத்துடன் இறங்கி வந்து கீழே விழுந்து வணங்கி, ''நான் ஒரு பாவி! தேவர்களுக்கும் கிட்டாத தரிசனம் இப்போது எனக்கு கிடைத்தது. நான் செய்த புண்ணியம் தான் என்ன?'' என வியப்புடன் கேட்டான்.

அப்பொழுது சிவபெருமான், ''வேடனே, இன்று சிவராத்திரி, இரவு முழுவதும் பசியுடன் விழித்திருந்து வில்வ இலைகளால் என்னை அர்ச்சித்தாய். உனக்கு மோட்சம் அளிக்கவே வந்தேன். மகனே, உனக்கு வேறென்ன வேண்டும்? கேள்!'' என்றார். சிவதரிசனத்தால் ஞானம் பெற்ற வேடன், ''அறியாமையால் செய்தவற்றுக்கும் அருள் செய்த வள்ளலே! இந்த இடத்தில் நிலையாக எழுந்தருளி உன்னை வணங்குகிறவர்களுக்கெல்லாம் நல்லருள் புரிய வேண்டும்'' என்று வேண்டினான். சிவபெருமானும், ''திருக்கைலாயத்தில் அருள் புரிவது போல சிவராத்திரி, பௌர்ணமி போன்ற நாட்களில் இங்கு வந்து வணங்குபவர்களின் துன்பங்களைத் துடைத்துக் காரியங்களைச் சித்தி யாக்குகின்றேன்'' எனக் கூறி இன்றும் அருள் பாலித்து வருகின்றார்.

ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் ஆயிரக்கணக்கான மக்களும், சாமியார்களும், சித்தர்களும் வலம் வந்து வணங்குகின்றார்கள். அவர்களுடைய வேண்டுதல்கள் நிறைவேற்றப் படுவதாகத் திடமான நம்பிக்கை உள்ளது.

பௌர்ணமியன்று இத்திருக்கோவிலை ஷேத்திர வலம் வருவதால் கடன் தொல்லைகள், திருமணத் தடைகள், நோய் நொடிகள், கிரக தோஷங்கள் போன்றவைகள் நீங்குகின்றன என்றும், செல்வம், கல்வி , பதவி, புத்திர பாக்கியம் போன்றவைகள் கிட்டுகின்றன என்றும் கூறப்படுகிறது.

நீங்கள் பௌர்ணமியன்று சேத்திர வலம் வந்து மனோன்மணீஸ்வரரை வணங்கி வளமும் நலமும் பெற்று வாழ அன்போடு அழைக்கின்றோம்.

மனோன்மணி தீர்த்தம் என்ற சிவகங்கைத் தீர்த்தம்:

இங்குள்ள புனித தீர்த்தமானது. சிவகங்கைத் தீர்த்தம் அல்லது மனோன்மணி தீர்த்தம் என வழங்கப்படுகிறது. கங்கையின் நேரடி ஊற்று இங்கு உள்ளது. நோய் நொடிகளைத் தீர்க்கும் சக்தியுடையது என்று வல்லநாடு சித்தர் சுவாமிகள் கூறினார். ஒரு பிராமணப் பெண் கணவனோடு கங்கைக்குச் சென்றபோது கணவனைக் கங்கையில் பறிகொடுத்தாள். அவள் இங்கு வந்து சிவபெருமானைப் பூஜித்து வணங்கியபோது இத்தீர்த்தத்திலிருந்து கணவனை மீண்டும் பெற்றாள். அதாவது கங்கையில் மூழ்கி இறந்தவன், விஜயநாராயணம் சிவகங்கை தீர்த்தத்தில் உயிர்த்து எழுந்தான் என்று இத்தீர்த்தப் பெருமையை அபிதான சிந்தாமணி (பக். 1280) கூறுகிறது.

நீங்களும் வாருங்கள்! வழிபட்டு வளம் பெறுங்கள்.

## சிவபெருமானின் எட்டு வீரத்தலங்கள்



| | |
|---|---|
| சிவபெருமான் திரிபுரம் எரித்த திருத்தலம் | - திருவதிகை |
| சலந்தரனை அழித்த திருத்தலம் | - திருவிற்குடி |
| தக்கன் யாகம் அழித்த திருத்தலம் | - திருப்பறியல் |
| மன்மதனை எரித்த திருத்தலம் | - திருக்குறுக்கை |
| யமனை உதைத்த திருத்தலம் | - திருக்கடவூர் |
| கயாசுரனை அழித்த திருத்தலம் | - திருவழுவூர் |
| அந்தகாசுரனை அழித்த திருத்தலம் | - திருக்கோவலூர் |
| பிரம்மன் தலை கொய்த திருத்தலம் | - திருக்கண்டியூர் |

இவை எட்டுத் திருத்தலங்களும் அட்ட வீரட்டத்தலங்கள் எனச் சிறப்பிக்கப்படுகின்றன.

# பதில்





(இந்த இதழில் வாசகர்களின் வினாக்களுக்கு தமிழ்ப் பெரும் பேராசிரியர், சமயச் சான்றோர் கலைமாமணி அ.ச.ஞா அவர்களின் படைப்புக்களிலிருந்து விடைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்)

★★★ இனியவன், திருச்சி

கேள்வி : பணிமிகுதியாலும், பணியாட்களின் ஒத்துழைப்பு இன்மையாலும் மனஇறுக்கம் **(Mental Tension)** என்னை நித்தமும் வாட்டி வதைக்கின்றது. என் பித்தம் தெளிய என்ன வழியென்று கூறவேண்டும்?

பதில் : இன்றைய இயந்திர உலகில் அனைவரையும் வாட்டி வதைக்கும் கொடிய நோய்தான் மனஇறுக்கம்.

கற்றவர், கல்லாதவர் ஆகிய அனைவரையும் வாட்டிவதைக்கும் இம்மன இறுக்கநோய், இன்றைய நாளில் குழந்தைகளையும் கூட விட்டு வைக்கவில்லை என்பது வேதனையான விஷயமாகும்.

அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் ஏழு வயது நிறைந்த பாலகன் ஒருவன் கைத் துப்பாக்கி எடுத்துத் தன் தந்தையையே பலமுறை சுட்டுக் கொன்று விட்ட கொடுமைக்குக் காரணமானதும் இம்மன இறுக்க நோய்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மன இறுக்கநோய் தீர வேண்டுமானால் நம் முன்னோர்கள் அறிவுறுத்தியுள்ள வழியில் நம் மனம் அடங்கக்கற்க வேண்டும்.

காலை, மாலை இரு வேளைகளிலும் குறைந்தது பத்துநிமிடங்களாவது தனி இடத்தில் அமர்ந்து ஓம் நமச்சிவாய, ஓம் நமோ நாராயணய, ஓம் சரவணபவ, ஓம் சக்தி பராசக்தி போன்ற மந்திரங்களில் யாருக்கு எதில் விருப்பமோ அந்த மந்திரத்தை ஜெபிக்க வேண்டும்.

★★★ தூயவன், மதுரை.

கேள்வி : சித்தர்கள் என்று யாரைக் குறிப்பிடுகிறார்கள்? சித்தர்களால் நம் சமயத்திற்கு உண்டாகும் பெருமை என்ன என்பதைத் தெளிவுபடுத்தவும்.

பதில் : சிலர் ''சித்துக்களைச் செய்பவர்களைச் சித்தர்கள்'' என்று கூறுகிறார்கள். அது சரியன்று.

சித்தி அடைந்தவர்களே சித்தர்கள். மக்களிடம் தோன்றி வளர்ந்த சாதி பேதங்களைச் சாடியும், வெறும் சடங்கு சம்பிரதாயங்களையும் சாடியும் மக்களை நன்னெறிப்படுத்திய பெருமை சித்தர்களுக்கே உண்டு.

''சாதிப்பிரிவினிலே தீயை மூட்டுவோம்'' என்று பாடி மக்களை ஒற்றுமைப்படுத்தியவர்களே சித்தர்கள்.

★★★ கலா, சேலம்

கேள்வி : பக்திமான் கண்டது பிரசாதம், விஞ்ஞானி கண்டது மின்சாரம் என்பது உண்மையா? தெளிவுபடுத்தவும்.

பதில் : மிகச் சிறந்த விஞ்ஞானியான டாக்டர் ஐன்ஸ்டீனைச் சில பத்திரிகையாளர்கள் அணுகி ''உங்கள் வாழ்க்கையில் நீங்கள் மிகவும் பெரிதும் வியப்பது உங்கள் கண்டு பிடிப்புக்களைத் தானே!'' என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் உரைத்த பதில் இதுதான் : ''மிகவும் அழகான இரவு நேரத்தில் வெட்ட வெளியில் நின்று நிர்மலமான ஆகாயத்தைப் பின்னால் கையைக் கட்டிக் கொண்டு நிமிர்ந்து பார்ப்பேன். அப்போது என் கண்டுபிடிப்புகள் யாவும் சாதாரணம் என்பதை உணர்வேன். இறைவனே மிகப் பெரிய விஞ்ஞானி என்பதாக உணர்ந்து, அந்த இறைவன் உண்டாக்கிய இயற்கை இன்பத்தில் திளைத்து மகிழ்வேன்''.


மற்றொரு விஞ்ஞானி, ஆஸ்போர்ன் என்பவர். இவருக்கு ஏதாவது புதியதாகக் கண்டுபிடித்து விட்டால் தன்னைப் பற்றிய பெருமையால் இவருடைய தலை கனத்துப் போகுமாம். அப்போது அவர் வெளியே போய் வானத்தை அண்ணாந்து பார்ப்பாராம்.

பால்வெளி அவர்தம் பார்வையில் படுமாம். பால்வெளியைத் தியானம் செய்வாராம். அந்தப் பால்வெளியையும் விழுங்கக் கூடிய பேரண்டங்கள் உண்டு. அதனை எண்ணிப் பார்ப்பாராம். இந்தப் பால்வெளி சிறிய ஒரு பகுதி என்று தோன்றுமாம். அப் பால்வெளியில் நமது சூரிய மண்டலம் ஒரு சிறிய துகள் என்று நினைப்பாராம். சூரிய மண்டலத்தில் நமது பூமி மிகச் சிறியது என்று எண்ணுவாராம்.

அப்பூமியில் நமது நாடு மிகச் சிறியது என்று எண்ணுவாராம். அந்நாட்டில் நம் ஊர் மிகவும் சிறியது என்றும், அதிலும் தமது வீடு மிகவும் சிறியது என்றும், அந்த வீட்டிலும் தான் மிகவும் சிறியன் என்றும் எண்ணுவாராம்.

''சே! என் அகங்காரம் அழிந்தது. இனி உள்ளே போகலாம்'' என்று வீட்டினுள் போய் விடுவாராம்.

இந்த நாட்டில் சிலர் ''பக்திமான் கண்டது பிரசாதம்'' என்று கூறுகிறார்கள். அவனை நோக்கித் தான் மின்சாரம் கண்ட விஞ்ஞானியும் வருகிறான் என்பதனை நினைவுபடுத்துகின்றேன்.



# வைராக்கியம்

''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன்



அவருக்குக்கடுமையான சர்க்கரைநோய். அவர் பெயர் கண்ணப்பர் என்று வைத்துக் கொள்வோம். கண்ணப்பருக்கு இன்சுலின் என்கிற ஊசிமருந்து மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், கண்ணப்பருக்கு ஊசி குத்திக்கொள்ள பயம்.

எப்படி இருந்தவன் நான், இப்படி ஆகிவிட்டேன். ஊசி குத்திக் குத்தி என்னுடைய பொன்னான உடம்பை புண்ணாக்கிக் கொள்வதை விட இறந்து போவதே மேல் என்று அரற்றினார். ஆனால், இறந்து போவது என்பது அவ்வளவு எளிதான விஷயமல்ல. எவருக்கும் அதில் நெல்முனையளவும் விருப்பமில்லை. எப்பாடுபட்டேனும் உயிர்வாழ்தலே எல்லோருக்கும் விருப்பமான விஷயம்.

ஆளால், பேச்சு அலட்டலுக்காக மற்றவர் முன்பு தன் வேதனையை உரத்துச் சொல்வதற்காக, மற்றவர் பரிதாபத்தைப் பெறுவதற்காக இம்மாதிரி அதிகபட்சமாய் பேசுவது என்பது சிலருக்கு இயல்பாக இருக்கிறது.

காரணம் சகிப்புத்தன்மை இல்லாதது. சகிப்புத்தன்மைக்கு ஓர் அமைதி தேவைப்படுகிறது. அந்த அமைதிக்குத் தன்னைப் பற்றி ஆழ்ந்து ஆராய வேண்டியிருக்கிறது. அந்த ஆராய்ச்சியிலிருந்துதான் அந்த அமைதி வர வேண்டும்.

ஆனால், ஊசி குத்திக் கொள்ள வேண்டும் என்று சொன்னதுமே கண்ணப்பர் உரத்த குரலில் அரற்ற ஆரம்பித்து விட்டார். தன் உடல் நலம் குறித்து அவருக்கு அக்கரை குறைவாக இருந்தது.

ஊசி குத்திக் கொள்வது மட்டுமல்ல. இந்த் நீரழிவு நோய்க்கு அவர் உணவுக் கட்டுப் பாடோடும் இருக்க வேண்டும். நேரடியான இனிப்பு வகைகளையும் தவிர்க்க வேண்டும். அதிகமாக உண்ணுதலைத் தவிர்க்க வேண்டும். குறைந்த அளவு சோறும், நிறைய காய்கறிகளும் உண்ண வேண்டும்.

உருளைக்கிழங்கு மசாலா கறி போன்றவற்றோடு எண்ணெயில் பொறித்ததை விலக்க வேண்டும். ஒரு வயது வரைக்கும் ருசித்து ருசித்து சாப்பிட்டுவிட்ட நாக்கு சப்பென்று உப்பு குறைவாகவும், காரம் குறைவாகவும் தேர்ந்தெடுத்துச் சாப்பிடும் போது ஆத்திரம் கொள்கிறது.

எல்லோரும் உண்கிறார்களே! நம்மால் உண்ண முடியவில்லையே என்று மனம் பொரும ஆரம்பிக்கிறது. கோபம் வருகிறது. தன் உடல் நிலையைக் குறித்த அக்கரையை விட உணவின் ருசிபற்றிய ஆவல் அதிகமாகிவிட்டது. கட்டுப் பாட்டிற்கு வர மனம் விரும்பவில்லை. கட்டுப்பாட்டை ஒருநாள் இரண்டு நாள் கைக் கொண்டாலும் மூன்றாம் நாள் எங்கேயோ சறுக்கி விடுகிறது.

''சர்க்கரை தாங்க சாப்பிடக்கூடாது. கரும்பு சாப்பிடலாம்'' என்று ஒரு வெகுளியான கிராமத்துவாசி நீரிழிவு பற்றித் தனக்கு நன்றாகத் தெரியும் என்று பேசுவதைப் போல அவரும் நடந்து கொண்டார்.

''ஒரேயொரு சமோசாதாங்க சாப்பிட்டேன். அதிலேயா சர்க்கரை ஏறிடும். காப்பியில் சர்க்கரை போடாதீங்கன்னு சொன்னேன். கேட்கலை. எங்க கொழுந்தியாளுடைய மாமனார் வீட்ல கொஞ்சம் போல சர்க்கரை போட்டுக் கொடுத்தாங்க. குடிச்சிட்டேன். கிறுகிறுன்னு வந்திடுச்சு''.

அந்தக் கொஞ்சம் போல என்ற சொல்லுக்கு இரண்டு ஸ்பூன் என்று அர்த்தம். அந்தச் சர்க்கரை ஒரு நீரிழிவு நோயாளியை நிலைகுலைய வைப்பதற்குப் போதுமானது.

நீரிழிவு நோய் என்கிற விஷயத்திலேயே நிறைய பேருக்கு வைராக்கியம் இல்லை. இறந்து விடுவோம் என்று சொல்லப்படுகிறபொழுதே - உடல் சிதறிவிடும் என்று எச்சரிக்கப்படுகிற போதே உள்ளுக்குள் இருக்கின்ற சுரப்பிகள் பழுதாகும் என்று விலக்கப்பட்டபொழுதே கூடஅவர்கள் அலட்சியப்படுத்தி உணவு முறைகளை சீராகக் கைக்கொள்ளமல் சரியான படி மருந்து எடுத்துக் கொள்ளாமல் மிகப் பெரிய தவிப்புக்கு ஆளாகிறார்கள்.

கண்பார்வை போதலும், கைகால் விழுதலும், உடம்பில் தோல் மாறுதல் ஏற்படுவதும், சிறுநீரக பாதிப்பும், இதயத்தில் பலவீனமும் ஏற்பட்டுப் பிறகு சரி செய்ய முடியாது என்று எச்சரித்த பிறகும் கூட சரியான வழிகளைக் கைக்கொள்ள மறுக்கிறார்கள். வைராக்கியம் இன்றி அலைகிறார்கள்.

உயிர் போகும் விஷயங்களுக்கே வைராக்கியமற்றுத் திரிபவர்கள் மற்ற விஷயங்களில் வைராக்கியத்தோடு இருக்க முடியுமா? மனிதர்களில் பலர் வைராக்கியமற்றே வாழ்வதை நான் கவனித்திருக்கிறேன்.

சாதாரண உடல் ஒழுக்க வகைகளுக்கே வைராக்கியம் தேவைப்படுகிறபொழுது உள்ளத்தை நிலைநிறுத்துகின்ற, உயர்த்துகின்ற ஆன்மீக விஷயங்களுக்கு வைராக்கியம் இன்னும் கூடுதலாகத் தேவை.

''நான் வேதாத்ரி மகரிஷிகிட்ட போய் பத்து நாள் யோகா கத்துண்டேன்'' என்று விளம்பரமாகப் பேசுவார்கள். அப்படியா? இப்போது என்ன நிலையில் இருக்கிறீர்கள் என்று கேட்டால், ''அப்புறம் ஒரு மாசம் பண்ணேன். விட்டுட்டேன்''.

''விட்டு எத்தனை நாளாச்சு''

'' இருக்கும். ஒரு ரெண்டரை வருஷம். மூணு வருஷம் இருக்கும்''

பிறகு எதற்காக வேதாத்ரி மகரிஷியிடம் யோகா கற்றுக் கொண்டதாக சொல்ல வேண்டும் என்று எனக்கு விளங்குவதேயில்லை.

காரணம் கேட்டபோது இதெல்லாம் எனக்குத் தெரியும்னு உங்களுக்கு சொல்றதுக்காக முயற்சி பண்ணினேன் என்று கூசாமல் பேசுவார்கள்.

எனக்குச் சொல்வதற்காகவா இவர்கள் யோகாசனம் கற்றுக் கொண்டார்கள். அப்படியானால் இது எவ்வளவு பெரிய அபத்தம். மற்றவரிடம் தன்னை விளம்பரப் படுத்திக் கொள்ளவா அந்தக் கலை இருக்கிறது? பத்துநாள் கற்றுக்கொண்டு பிறகு பழக்கத்திற்கு ஆட்படுத்தாமல் வெறுமனே விட்டுவிடுவதற் காகவா இந்தப்படிப்பு இருக்கிறது?

## வாசகர் எண்ணங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியுடன், ''மேலும் 180 திருக்கோயில்களுக்கு அன்னதானத் திட்டம்'' எனும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தித்திப்பான அறிக்கையைத் தாங்கி வந்த 2006 ஜனவரி ''திருக்கோயில்'' இதழ் சர்க்கரைப் பொங்கலெனத் தித்தித்தது.

ஆணையாளர் அவர்கள் தலையங்கத்தில் கூறியிருந்ததுபோல் 'திருக்கோயில்'' அன்னதானத் திட்டம், ஆழ்வார்களும், நாயன்மார்களும், அருளாளர்களும் கண்ட கனவுகளை நனவாக்கும் மாபெரும் மனிதநேயத் திட்டம் என்பதில் ஐயமில்லை.

- பாலாஜி, சென்னை

தாமரபரணி நதி ஓரம் அமைந்திருக்கிற நவ திருப்பதிகள், நவ கயிலாயங்கள் - இவைகளைத் தரிசித்த பரவசத்தை, பிரமிப்பை அளித்த கட்டுரைகள் இரண்டுமே சைவ வைணவ சமயங்கள் ஆன்மீகத்தில் இருகண்களாய் இருப்பதை உணர்த்தி விட்டன.

மலைத்தலங்களில் சிறந்த தணிகைத் திருத்தலம் கட்டுரை, அந்தப் படைவீட்டின் புனித வரலாற்றையும், முருகப் பெருமானின் மகிமைகளையும் அழகாக விளக்கி, மலைப்பில் ஆழ்த்தி விட்டது.

- த. சத்தியநாராயணன். அயன்புரம்.

தமிழக மக்களுக்குக் கண்கண்ட தெய்வமாய் சுகப்பிரசவப் பேறு வழங்கும் திருச்சி அருள்மிகு தாயுமான சுவாமித் திருக்கோயில் கட்டுரையும், வண்ணப் படங்களும் வெகு சிறப்பாய் அமைந்திருந்தது.

-லதா, ஈரோடு

இது வைராக்கியமற்ற நிலை. தெளிவற்ற சிந்தனை. நல்லவிஷயத்தை உடும்புபோல பிடித்துக் கொள்ள வேண்டுமென்று அதிகம் பேருக்குத் தெரிவதில்லை.

திருவல்லிக்கேணியைச் சேர்ந்த ஜெய கோபால் என்பவரிடம் நான் மூச்சுப் பயிற்சியும் அதன் தொடர்பான சில உடற்பயிற்சிகளும் கற்றுக் கொண்டேன். நான் கற்றுக் கொண்டவை யோகசாத்திரத்தின் அடிப்படையான விதிகள்.

கை, கால்கள் நல்ல கட்டுப்பாட்டில் இருக்கவும், நுரையீரல்கள் ஆரோக்கியமாக திகழவும், ரத்தஓட்டம் சீராக அமையவும், மனம்

அமைதியாக இருக்கவும், அந்தப் பயிற்சிகள் எனக்கு உதவின. கற்றுக் கொண்ட நாள் முதல் இன்று வரை ஒருநாள் கூட இந்த மூச்சுப் பயிற்சியையும், அதைச் சார்ந்த உடற்பயிற்சி யையும் நான் செய்யாமல் விடுவதேயில்லை.

இன்னும் குறிப்பாகச் சொல்வதென்றால் என் தாயார் இறந்த அன்றும் நான் மூச்சுப் பயிற்சியைச் செய்தேன். மாலை ஐந்து மணிக்கு மிக அமைதியாய் என் தாயார் மரணமடைந்தார். மறுநாள் காலைதான் எடுக்க வேண்டுமென்று தீர்மானமாகியது. மறுநாள் காலை விடிந்ததும் உறவினர்கள் வருகை அதிகமாக இருந்தது. ஆயினும் இதற்கு நடுவே தனியறைக்குப் போய் தாழிட்டுக் கொண்டு மிக நிதானமாக மூச்சுப் பயிற்சியையும், தொடர்ந்த உடற்பயிற்சியையும் செய்து முடித்துவிட்டுத்தான் வந்தேன்.

தாயாரை இழந்தது துக்கம்தான். எதிர்பாராமல் நடந்தது தான். ஆயினும் அது குறித்து இடிந்து போகாமல் அடுத்தபடி என்ன என்று சிந்திப்பதற்கும், என்னை ஒரு நிலையில் நிறுத்துவதற்கும் அந்த உடற்பயிற்சிகள் தேவைப்பட்டன. அந்த நேரத்திலும் அமைதியாய் செய்தபோது, என் தாயின் அந்திம கிரியைகளை இன்னும் அக்கறையோடும், மலர்ந்த முகத்தோடும், உள்ளிருந்து பொங்கிய வாஞ்சையோடும் செய்ய முடிந்தது. உடற்பயிற்சி செய்வதை எந்தக் காரணம் கொண்டும் நான் நிறுத்த விரும்ப வில்லை. எந்தச் சாக்கும் எனக்குத் தேவைப்பட வில்லை.

ஆன்மீகத்தில் இந்த விடாமுயற்சி என்கிற வைராக்கியம் தேவைப்படுகிறது.

மது அருந்தக்கூடாது என்பதுதான் விரதம். மாமிசம் சாப்பிடக்கூடாது என்பது தான் வாழ்க்கை. நாள் தவறாது பூஜை செய்ய வேண்டும் என்பது தான் விதி என்று ஒரு வரைமுறைக்குள் ஆன்மீக வாழ்க்கையை கொண்டு வருவோம் என்றால் அதை நிச்சயம் கடைப்பிடித்தாக வேண்டும்.

தினசரி பூஜை செய்வதும், மந்திரஜபம் செய்வதும் ஒரு நியமத்திற்கு உட்படுகிறபோது மிகச் சந்துஷ்டியாக மாறுகிறது. திரும்பத் திரும்ப மிகுந்த அக்கறையோடு செய்யப்படுகிறபோது ஏதோ ஒரு நாளில் அதன் முழுகனமும் மனதிற்குப் புரிந்து விடுகிறது. அந்தப் பூஜையின் மூலம் பிடிபட்டுவிடுகிறது. அந்த மந்திர ஜபத்தின்அமைதி மனசுக்குள் வந்துவிடுகிறது.

வைராக்கியமின்மைக்கு விதம் விதமான காரணங்கள் நம் மனமே கற்பித்துக் கொள்ளும்.

''இன்று அலுவலகத்தில் வேலை அதிகம். அதனால் என்னால் தியானம் செய்ய முடியாமல் போகிறது. மகன் படிப்பில் நன்றாகத் தேர்ச்சி பெறவில்லை. அதனால் மனம் வேதனை யடைந்து விட்டது. என்னமோ ஒரு மந்தமாக இருக்கிறது. ஏதோ தவறாக சாப்பிட்டு விட்டேன் என்று நினைக்கிறேன். அதனால் மந்திரஜபம் செய்ய முடியவில்லை'' என்று விதம் விதமாக மனம் பொய் சொல்லும்.

''டிவியில் ஒரு நல்லபடம் போட்டான். பார்த்துகிட்டே உட்கார்ந்திருந்தேனா! அப்புறம் சாப்பிட்டேனா! அப்படியே தூங்கிட்டேனா! ஜபம் பண்ணணும்கிறதே மறந்து போச்சு''.

எளிமையான காரணத்தை மனம் முன் வந்து சொல்லும். உற்றுக்கவனித்தால் நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம் என்பது புரியும். உடற்கூறு சம்மந்தப்பட்ட நீரிழிவு நோய்க்கு கடும் வைராக்கியம் தேவைப்படுகிறது என்கிற போது மிகுந்த சிக்கலுள்ள மனம் பற்றித் தெளிவடைவதற்கு எவ்வளவு வைராக்கியம் தேவை. அதைச்யோசித்துப் பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல வைராக்கியம் என்பது இயல்பாக வேண்டும். பல்லைக் கடித்துக் கொண்டு, பதறித் துடித்துத் தன்னை நொந்து கொண்டு செய்வதில் அர்த்தமில்லை.

எங்கள் வீட்டில் இன்னொரு விஷயமும் தெளிவான உறுதியுடன் கடைப்பிடித்து வருகிறோம். எங்கள் குருநாதர் திருவண்ணாமலை மகான் யோகிராம் சுரத்குமார் அவர்கள் பெயரையும், ராமநாமத்தையும், குருநாதர் குறித்த சில பாடல்களையும் தினந்தோறும் வீட்டில் எல்லோரும் அமர்ந்து ஒரு குழுவாகப் பாடுவதை நாள் தவறாது செய்து வருகிறோம்.

வெளியூருக்குப் போயிருப்பினும் அங்கே அமர்ந்து மாலை வேளைகளில் இந்தப் பாடல்களைப் பாடுகிறோம். அதனால் வீட்டில் ஒரு தனித்த மலர்ச்சி ஏற்படுகிறது. எங்களுக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கிறது. பரஸ்பரம் ஒருவரையொருவர் மதித்தல் மிகுதியாகிறது. இந்தக் குழு மனப்பான்மை உயர்வானதால் தனிப்பட்ட தன்னம்பிக்கையும் பெரிதாகி வளர்கிறது.

உலகத்தில் எந்த விஷயமும் கடும் முயற்சி இன்றி நடைபெறாது. வெற்றி பெற வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு ஒழுக்கமும், முயற்சியும் மிக முக்கியம். ஒழுக்கமும் முயற்சியும் கலந்ததுதான் வைராக்கியம்.

## தாயின் பெருமை



சந்நியாசம் வாங்கிவிட்ட மகன் எதிரே
வந்தால் தந்தை வணங்க வேண்டும்.
ஆனால் சந்நியாசம் வாங்கி
விட்டாலும் அந்த சந்நியாசி தன்
தாயை வணங்க வேண்டும்.
அத்தனைச் சிறப்புக்கு
உரியவள் தாய்.

- அருளரசு திருமுருக கிருபானந்த
வாரியார் சுவாமிகள்

# சிவராத்திரியில் வாக்குறுதி தவறாத மான்கள்

பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A. D.Litt., Ph.D.,



''மானே! நீநென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போனதிசைபகராய்!''

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவெம்பாவையில் உள்ள இந்தப் பகுதி, வாக்குறுதிகளை எப்பாடுபட்டேனும் நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறது. மான் போன்ற சாயலும் பார்வையும் உடைய பெண்ணே! நீநேற்று நானே முன்னால் வந்து உங்களையெல்லாம் எழுப்புவேன் என்று கூறிய உனது வாக்குறுதி எந்தத் திசையில் போயிற்று? என்று வெளியில் நின்ற பெண்கள் கேட்கின்றனர்.

நீயோ மான் போன்றவள் ! சிவபுராணத்தில் குறிப்பிடப்படும் மான்கள் தங்கள் வாக்குறுதியைக் காப்பாற்ற உயிரையும் கொடுக்க முன்வந்த வரலாற்றை மறந்து விட்டாயா? என்று கேட்பது போல் அவர்களின் வினா அமைந்துள்ளது.

அது என்ன வரலாறு? அதுதான் சிவராத்திரி நாளில் நிகழ்ந்த வாக்குறுதி காத்த வரலாறு! வேடன் ஒருவன் தன்னையறியாமல் செய்த சிவ புண்ணிய வரலாறு!

குருத்ருகன் என்ற வேடன் விலங்குகளை வேட்டையாடி வாழ்க்கை நடத்தி வந்தான். ஒரு நாள் அவனுடைய குடும்பம் முழுவதும் உணவின்றி வாட நேர்ந்தது. அதனைக் கண்ட குருத்ருகன் வில்லை எடுத்துக் கொண்டு வேட்டைக்குப் புறப்பட்டான். காட்டில் விலங்குகளைத் தேடி அலைந்தான். அன்று பகல் முழுவதும் விலங்குகள் எதுவும் கிடைக்கவில்லை.

அந்தி சாயும் நேரத்தில் ஒரு தடாகத்தின் கரையை அடைந்தான். நீர் பருகி, தாகத்தைத் தீர்த்துக் கொண்டான். இரவு வேளையில் அத்தடாகத்தில் நீர் பருக எப்படியும் விலங்குகள் வரும் என்று நம்பினான். தன்னிடம் இருந்த ஒரு குடுவையில் நீரை எடுத்துக் கொண்டு, தடாகத்தின் கரையில் இருந்த ஒரு மரத்தின் மீது ஏறி அமர்ந்தான். விலங்குகளின் வருகைக்காகக் காத்திருந்தான்.

அவன் எதிர்பார்த்தபடி, முதல் யாமத்தில் ஒரு பெண்மான் நீர் பருக வந்தது. அதன் மீது அம்பு தொடுக்க முற்பட்டான். அந்த அசைவினால் மரத்தின் இலைகள் உதிர்ந்தன. குடுவை நீரில் ஒரு பகுதியும் கீழே சிந்தியது. தனக்கு வரவிருந்த ஆபத்தைப் பெண்மான் உணர்ந்தது.

வேடனை நோக்கி, ''ஐயா ! சற்று நான் சொல்வதைக் கேளுங்கள்'' என்றது. மானின் பேச்சைக் கேட்டவுடன் குருத்ருகன் அம்பு தொடுப்பதை நிறுத்தினான்.

''ஐயா! உங்கள் குடும்பத்தினரின் பசியைத் தீர்க்க எனது உடல் பயன்படப் போவதை எண்ணி மிக்க மகிழ்ச்சி. நீங்கள் எனக்குச் சிறிது நேரம் கொடுக்க வேண்டும். எனக்குக் குட்டிகள் உள்ளன. அவற்றைக் காப்பாற்றும் வகையில், மற்றொரு பெண்மானை எனது கணவருக்கு மனைவியாக்கிவிட்டு உடனே வந்து விடுகிறேன். அதன்பிறகு நீங்கள் என்னை வேட்டையாடலாம் என்றது அப்பெண்மான்.

முதலில் மானின் சொற்களை நம்ப மறுத்த வேடன், பிறகு மானின் உறுதிமொழியைக் கேட்டு, அதனைச் செல்ல விடுத்தான்.

இரண்டாவது யாமத்தில் அப்பெண்மானின் சகோதரியாகிய மற்றொரு மான் வந்தது. அதனை வேட்டையாட முற்பட்டான் வேடன். அப்போதும் மரத்தின் இலைகள் சில கீழே உதிர்ந்தன. குடுவை நீரும் சிறிது சிதறியது.

''ஐயா ! எனது குட்டிகளைக் காப்பாற்றும் பொறுப்பை எனது கணவரிடம் ஒப்படைத்து விட்டு, உடனே வந்து விடுகிறேன். இது உறுதி!'' என்றது இரண்டாவது மான். அதன் உறுதிமொழியை நம்பிய குருத்ருகன் அதனையும் செல்ல விடுத்தான்.

மூன்றாவது யாமத்தில் ஆண்மான் வந்தது. அப்போதும் அம்பு தொடுக்க முற்பட்டான். சில இலைகள் கீழே உதிர்ந்தன. குடுவை நீரில் சிறிது சிந்தியது. ''நாங்கள் ஒருவரை ஒருவர் தேடி வந்தோம். ஒருவரை மற்றொருவர் சந்திக்க இயல வில்லை. சிறிது நேரம் கொடுங்கள். எனது

குட்டிகளை அவற்றின் தாய்களிடம் ஒப்படைத்து விட்டு உடனே வந்து விடுகிறேன். இது உறுதி!'' என்றது ஆண்மான். குருத்ருகன் அதனையும் செல்ல விடுத்தான்.

நான்காவது யாமம் வந்தது. இரண்டு பெண் மான்களும், ஆண்மானும் ஆக, மூன்று மான்களும் தடாகத்தின் கரைக்கு வந்தன. மூன்று மான்களையும் வேட்டையாட முற்பட்டான் குருத்ருகன். அப்போதும் இலைகள் உதிர்ந்தன. குடுவை நீரும் சிறிது சிந்தியது.

இந்த நிகழ்ச்சி நடந்த நாள், ஒரு சிவராத்திரி நாள். வேடன் அமர்ந்திருந்த மரத்தின் அடியில் ஒரு சிவலிங்கம் இருந்தது. அந்த மரம் வில்வமரம் ! நான்கு யாமங்களிலும் குடுவை நீர் சிவலிங்கத்தின் மீது சிந்தியது ! வில்வ இலைகள் சிவலிங்கத்தின் மீது உதிர்ந்தன!

சிவராத்திரி நாளில் குருத்ருகன் உணவு புசியாமல், கண் விழித்து, நான்கு கால அபிஷேகம் செய்து, வில்வார்ச்சனை செய்ததாகக் கருதினார் சிவபெருமான். தற்செயலாக நடந்த செயல்களைச் சிவபெருமான் தமது தனிப்பெருங் கருணையினால் சிவபுண்ணியச்செயல்களாகக் கருதினார்!

உறுதிமொழியைக் காப்பாற்றத் தங்கள் உயிரைக் கொடுக்கத் தயங்காத மான்களின் மாண்பை எண்ணி வியந்த வேடன் அவை மூன்றையும் செல்ல விடுத்தான்!

சிவபெருமான் குருத்ருகனுக்குக் காட்சி அளித்து, பெரும்பதம் நல்கியருளினார். சிவராத்திரியின் சிறப்பையும், உறுதிமொழிகளைக் காப்பாற்றுவதனால் கிட்டும் பயனையும் உணர்த்தும் இந்த வரலாறு சிவமகாபுராணத்தில் இடம் பெற்றுள்ளது.

வரதராசக் கவிராயர் என்பவர் சிவராத்திரி புராணத்தைத் தமிழில் இயற்றியுள்ளார். அதில், வேதங்களில் சிறந்தது சாமவேதம்; விரதங்களில் சிறந்தது சிவராத்திரி விரதம்! என்று குறிப்பிட்டுள்ளார்.

மகாசிவராத்திரி நாளில் கீழ்க்கண்ட முறையில் வழிபாடுகள் செய்யலாம்.

முதல் யாமம் : பஞ்சகவ்ய அபிஷேகம், பொங்கல் நிவேதனம், வில்வார்ச்சனை.

இரண்டாம் யாமம் : பஞ்சாமிர்த அபிஷேகம், பாயசநிவேதனம், தாமரை அர்ச்சனை.

மூன்றாம் யாமம் : தேன் அபிஷேகம், நெய்யும் மாவும் கலந்த நிவேதனம், முல்லை மலர் அர்ச்சனை.

நான்காம் யாமம் : கருப்பஞ்சாறு அபிஷேகம், வெண்பொங்கல் நிவேதனம், நந்தியாவட்டை மலர் அர்ச்சனை.

விரிவான பூஜை செய்ய இயலாதவர்கள் சிவாலய தரிசனம் செய்தும், சிவபுராணப் பாராயணம் செய்தும், சிவபுண்ணியக் கதைகளைக் கேட்டும் சிவனருள் பெறலாம்!

# நூல் மதிப்புரை



நூல் பெயர் : சகலகாரிய சித்தி தரும் ஸ்ரீலட்சுமி நரசிம்மர் ஸ்தோத்திரம்

நூலாசிரியர் : ஏ.எம். ராஜகோபாலன், பி.ஏ.

நூல் வெளியீடு: அன்னை புத்தகாலயம்
3, சிவஞானம் ரோடு,
இரண்டாவது மாடி
பாண்டி பஜார் தபால்நிலையம் எதிரில்,
தி.நகர், சென்னை - 600 017.

விலை : ரூ. 12.00

பக்கங்கள் : 104

தென்பெண்ணை நதியின் வடகரையில் உள்ள பூவரசன் குப்பத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலட்சுமிநரசிம்மர் மகிமையை இத்தல வரலாற்று நூல் நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

தன் பக்தன் பிரகலாதனைக் காப்பாற்ற நரசிம்மாவதாரம் கொண்ட திருமால் இரண்யனைச் சம்ஹாரம் செய்தும் தம் கோபம் தணியாமல் இந்தியத் திருநாடு முழுவதும் சுற்றினார்.

அப்போது சப்தரிஷிகள் ஸ்ரீமஹாலட்சுமியை வேண்டிக் கொள்ள ஸ்ரீலட்சுமி நரசிம்மரின் மடியில் வந்து அமர்ந்து அவருடைய உக்கிரத்தைத் தணித்தார்.

ஸ்ரீ மகாலட்சுமி தம் ஒரு கண்ணால் நரசிம்மரையும், மற்றொரு கண்ணால் பக்தர்களையும் பார்த்தவாறு திருவருள் பொழியும் ஒப்பற்ற திருத்தலம் பூவரசன்குப்பன் ஸ்ரீலட்சுமி நரசிம்மர் திருத்தலம் என்பதை இந்நூல் நன்கு விவரித்து ஸ்ரீலட்சுமி நரசிம்மரை எவ்வாறு வழிபட வேண்டும் என்று எடுத்துக் காட்டுகின்றது. பக்தர்கள் பயின்று பயன்பெறத்தக்க பாராயண நூலாகும் இது.

# தவத்திரு அப்பா பைத்தியம் சுவாமிகள் !



- கவிஞர் ஈரோடு ஆற்றலரசு

தவத்திரு அப்பா பைத்தியம் சுவாமிகள் கருவூர் கோட்டை ஜமீன் பரம்பரையில் 1859-ம் ஆண்டு சித்திரை மாதம் 28ம் நாள் புனர்பூசநட்சத்திரம் அன்று அவதாரம் செய்தார். இவர் தமது 16வது வயதில் வீட்டை விட்டு வெளியேறிப் பழனிமலை அடைந்து அங்குத் தவத்திரு அழுக்கு சுவாமிகளைக் குருவாகக் கொண்டு ஞானம் கைவரப் பெற்றார்.

தம் குருநாதரின் மூலம் பலவற்றை அறிந்து கொண்டார். அவர் ஓதாதுணர்ந்தவர் ஆவார். எல்லோரையும் ஒன்று போல் பாவிப்பது, யார் எதை ஆத்மார்த்தமாகக் கேட்கின்றார்களோ அதைத் தருவது இவரது சிறப்புக் குணமாகும்.

ஏழை, எளிய மக்களின் பசியினைப் போக்க அன்னதானத்தை ஆரம்பித்தார். பழுதுற்ற ஆலயங்கள் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்தல், ஏழை எளிய மக்களுக்குத் திருமணம் நடத்தி வைத்தல், தன்னை நாடிவருவோர் உடல், மனக்குறைகளை நீக்குதல் சுவாமிகளின் அருட் செயல்களாகும்.

சுவாமிகள் தன்னைத் தானொரு பைத்தியம் என்று சொல்லுவார்கள். பக்தர்கள் அவரை ''அப்பா'' என்று அழைத்தார்கள். அன்றிலிருந்து அவருக்கு ''அப்பா பைத்தியம் சுவாமிகள்'' என்று பெயர் வந்தது. தனக்கென்று மடம் வைத்துக் கொள்பவனும், காசினை கையில் தொடுபவனும், தனக்கென்று ஒரு சீடனை வைத்துக் கொள்பவனும், நான் எனது என்று பேசுபவனும் சந்நியாசி அல்ல சம்சாரி என்று அவற்றை மறுத்தொதுக்கி வாழ்ந்தார்.

சுவாமிகள் நிறைவாக தமது 141ஆம் வயதில் சேலம் சூரமங்கலத்தில் சற்குரு மாளிகை (தரும விலாஸ்) எனுமிடத்தில் பிரமாதி ஆண்டு 11.2.2000 தை 28ம் நாள் அசுவனி நட்சத்திரத்தில் ஜீவசமாதி ஜோதியில் கலந்தார்.

சுவாமிகளின் சமாதிக் கோயில் சேலம் சூரமங்கலத்தில் விஜய ஆண்டு ஐப்பசித் திங்கள் 25ம் நாள் 11.1.2001 அன்று தெய்வத் தமிழ் முறைப்படி திருக்குட நீராட்டு விழா இனிதே நடைபெற்றது.

**அப்பா பைத்திய சாமியைத் துதிப்போருக்கு**
**ஆயிரம் திருப்பம் வரும் - என்றும்**

**தப்பாது நினைப்போர்க்குத் தானாக நலவாழ்வு**
**தழைத்தது ஆலாகிடும் !**

**எப்போதும் எண்ணிடும் எண்ணற்ற பேருக்கு**
**எந்நாளும் ஏற்றம் வரும் - அந்த**

**ஒப்பிலா மாமணி ஒளிமுகம் கண்டதும்**
**ஒருவித உணர்வு வரும் !**

**முழுநில ஒளிதனை முழுதும் விரும்பியே**
**முக்காலம் நன்குணர்ந்தார் - புவியில்**

**பழுதிலா புனர்பூசவிண்மீனில் தோன்றியே**
**பாரினில் உணவளித்தார்**

**தொழுதிடும் பேர்கட்குத் தொல்லைகள் நீக்கியே**
**தழைத்திடும் வாழ்வளித்தார் - உளத்துள்**

**அழுக்காறு இல்லாமல் அவரை நினைப்போருக்கு**
**ஆனந்த சுகமளித்தார் !**

**நோய்தனைத் தீர்த்திடும் சஞ்சீவி மூலிகை**
**நம்மிடை நின்றிருப்பார் - உலகில்**

**தாய்நலம் காத்திடும் தனிப்பெரு ஞானியாய்**
**திகழ்ந்தவர் அப்பாபைத்தியம் !**

**பாய்ந்திடும் ஆறென வற்றாத வளத்தினை**
**பல்லோர்க்குத் தந்துநின்றார் - நிதம்**

**ஓயாமல் உழைத்திடும் எளியவர் வாழ்வினை**
**ஓங்கிடச் செய்தவராம் !**

# கோபிநாத சுவாமி



திண்டுக்கல் அருகே ரெட்டியார் சத்திரப் பகுதியில் உள்ளது புகழ்மிக்க அருள்மிகு கோபிநாத சுவாமி கோயில்.

13ஆம் நூற்றாண்டில் ஆந்திராவைச் சேர்ந்த கோபிநாதன் வறட்சி ஏற்படவே தன் ஏராளமான கால்நடைகளுடன் தமிழகத்தின் தென்பகுதி நோக்கி வந்தான்.

ரெட்டியார் சத்திரப்பகுதிக்கு வந்து குன்று ஒன்றின் அடியில் தங்கி வாழ்ந்திருந்தபோது, சில ஆண்டுகளில் இங்கும் வறட்சி வாட்டியுள்ளது.

''கடவுளே ! நல்ல மழை பெய்து மாடுகளுக்கு புல் தாராளமாக கிடைத்தால் எனது உயிரையே காணிக்கை ஆக்குவேன்'' என்று வேண்டிக் கொண்டான் கோபிநாதன்.

அவன் வேண்டுகோள் பலித்தது. புல் எங்கும் முளைத்து பசுமையாக இருந்தது.

தன் காணிக்கையை எப்படியும் நிறைவேற்றி விட நினைத்த கோபிநாதன், தானே தன் பசு ஒன்றின் கொம்பின் மேல் பாய்ந்து தன் குடல் சரிய உயிரை விட்டான்.

அந்தப் பக்தனின் பெயரில் புகழ் பெற்று விளங்குவதே அருள்மிகு கோபிநாதசுவாமி ஆலயம். இங்குக் கால்நடையைக் காணிக்கையாகத் தருவதாக வேண்டிக் கொண்டால் வேண்டியவரம் உடனே கிடைக்கும்.

காலச்சுவடுகள்

# முனியனின் தியாகத்தால் கோயில் பிறந்த வரலாறு
# பெரியகுளம் காத்துநிற்கும் காவல் தெய்வம் அருள்மிகு ஸ்ரீபெரியக்கா

அ.நிறைமதி பி.எல்

தேனி மாவட்டம் பெரிய குளத்தில் புகழ் பெற்று விளங்குவது அருள்மிகு ஸ்ரீ பெரியக்கா ஆலயம்.

மேற்கு மலைத்தொடரின் மலையடி வாரத்தில் அமைந்துள்ள பெரியகுளத்தில் பெயருக் கேற்றாற்போல் பெரியகுளம் ஒன்று உள்ளது.

அடிக்கடி பெய்யும் மழை, மலை மீது விழுந்து வராக ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து வந்து பெரியகுளம் நிரம்பினாலும் அக்குளம் ஒரு போதும் உடைவதே இல்லை.

இதற்குக் காரணமாகத் திகழ்பவன் அவ்வூர்க் காவற்காரனாகத் திகழ்ந்த முனியன் என்பவன் செய்த உயிர்த்தியாகம் தான். அவனுடைய உயிர்த்தியாகம் நாம் அறிந்து கொண்டாட வேண்டிய ஒன்று.

ஒரு சமயம் ஐப்பசி மாதம் அடைமழையோ மழை. இடைவிடாது ஒரு மாதம் பெய்த பேய் மழையால் பெரியகுளம் நிரம்பி, அதன் கரை உடைந்து போகும் அளவுக்கு நீர் ததும்பிக் கொண்டிருந்தது.



குளம் உடைந்தால் கரையோரம் உள்ள தாழ்ந்த பகுதி வீடுகளில் வசிக்கும் பலருடைய வீடுகளிலும் வெள்ளம் புகுந்து மக்கள் ஏராளமானோர் பலியாகி விடக்கூடுமே!

இந்த நிலையில் என்ன செய்வது என்று தெரியவில்லையே ! என்று மனம் பதறினான் முனியன் என்ற அவ்வூர்க்காவற்காரன்.

ஊர்க்கர்ணத்திடம் விஷயத்தைச் சொல்லி ஊரிலிருக்கும் ஆட்களை எல்லாம் கூட்டி வந்து மரம், செடி, கொடிகளை வெட்டிக் குளம் உடையாத அளவிற்குச் செய்து விடுவோம் என்று அவன் எண்ணினான்.

அதே நேரத்தில் ஊருக்குள் சென்று கர்ணத்தையும் ஆட்களையும் அழைத்து வரும் வரை யாரைக் காவலுக்கு வைத்துவிட்டுச் செல்லுவது? என்று கவலையோடு அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான் முனியன்.

அப்போது அவன் எதிர்பாராதவிதமாக நடுத்தர வயது பெண்ணொருத்தி வருவதைக் கண்டான்.

''நல்ல நேரத்துக்குக் கடவுள் மாதிரி வந்தாய் அக்கா. நான் வர்ற வரைக்கும் குளம் உடையாமல் பாத்துக்கோ'' என்று முனியன் வேண்டிக் கொண்டான்.

''நீவர்ற வரைக்கும் இந்தக் குளம் உடையாது; அதற்கு நான் உறுதி'' என்று உறுதியாக உரைத்தாள் அந்தத் தெய்வ மாது.

ஊர்க்கர்ணத்தின் வீடு நோக்கி ஓடிய முனியன் அவர்கதவைப் படபடவெனத் தட்டினான்.

''சாமி ! சாமி ! பெரிய குளம் கண்மாய் உடையற மாதிரி இருக்கு''

கதவைத் திறந்த கர்ணம், முனியனிடம் ''ஆயக்கட்டு ஆளுகளைக் கூட்டிக் கொண்டு போகும் வரைக் குளம் கரை உடைந்து போனா என்னடா செய்வது'' என்று பதற்றத்துடன் கேட்டார்.

''கரை உடையாது சாமி! அக்காவைக் காவலுக்கு வச்சிட்டு வந்திருக்கேன்'' என்றான் முனியன்.

''உங்க அக்காவா? என்றான் கர்ணம்.''

''இல்லை சாமி ! குளத்தைக் காவல் காக்க ஒரு ஆளு வேணுமேன்னு நினைச்சப்ப, பளபளன்னு ஒளியோட மின்னிக்கிட்டு ஒரு அக்கா வந்துச்சு. சாமி மாதிரி வந்த அந்த அக்காவிடம் நான் வரும் வரை குளத்தைக் காவல் செய் என்று கேட்டுக் கொண்டு உங்களைக் கூப்பிட்டுப் போக வந்தேன்'' என்றான் முனியன்.

''டேய் முனியா ! சாமி மாதிரி வந்த அக்கா இல்லைடா ! சாமியே தான். நீதிரும்பிப் போனா சாமியும் போய் விடுவா ! ஊரு நன்மைக்காக நீதிரும்பிப் போகாதே ! என் வீட்டுக் கிணற்றுக்குள் விழுந்து உன் உயிரைத் தியாகம் செய்து விடு'' என்றார் கர்ணம்.

பெரியகுளத்து மக்களின் நன்மைக்காகக் கர்ணம் சொன்னபடியே கிணற்றுக்குள் விழுந்து தன் உயிரைத் தியாகம் செய்து விட்டான் ஊர்க் காவலன் முனியன்.

முனியனுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி அன்று பெரிய குளம் உடையாமல் காப்பாற்றி அருள்பாலித்தார் ஸ்ரீபெரியக்கா, இன்றும் பெரியகுளம் உடையாமல் கண்ணை இமை காப்பது போல் காப்பாற்றி வருகிறார் பெரியகுளத்தில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ பெரியக்கா எனும் போற்றற்குரிய பெண்தெய்வம்.

# உயர்வான வாழ்வு தரும் உத்தமர் கோயில்

முப்பெரும் தேவியர் உடனுறை மும்மூர்த்திகள் அருளும் இந்தியாவின் ஒரே திருத்தலம்

உலகில் வேறெந்த திருக்கோயிலிலும் இல்லாத சிறப்பாகப் படைப்புக்கடவுள் பிரம்மாவே குருபகவான் ஸ்தானத்தில் விமானத்துடன் கூடிய தனி சன்னதியில் தென்முகமாக அனுக்ரக மூர்த்தியாக அமர்ந்து அருகில் தனி சன்னதியில் சரஸ்வதிதேவியைத் தன்னுடன் கொண்டு அருள்வழங்கி வருகிறார். பிரம்மாவை வழிபடுவது மிகச்சிறந்த நற்பலன்களைத் தரும் என்பதை மகாகவி காளிதாஸ் தமது சுலோகத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''பலாநிக்ரசாரணே ஸீஜயந்தி மநீஷின கோவக்தா
தாரதம்யஸ்ய தமேகம் வேதஸம் விநா''

பொருள்:

சோதிடர்கள் கிரகங்களின் அசைவுகளைக் கொண்டு பலன்களை முன்கூட்டியே அறிவிக்கிறார்கள். ஆனால் நம்மைப் படைத்த பிரம்மாவைத் தவிர வேறு யாராலும் திட்டவட்டமாக இதுதான் நடக்கும் என்று கூற இயலாது.

மேலும் ''குருபிரம்மா - குருவிஷ்ணு குருதேவோ மஹேஸ்வரஹ'' என்ற சுலோகத்தின்படி முதல் குருவாக வணங்கப்பட வேண்டியவர் பிரம்மாவே என்பது தெளிவாகிறது.

பிரம்மாவிற்கு தனி சன்னதி எவ்வாறு ஏற்பட்டது?

ஒரு முறை பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் தம் இருவரில் யார் உயர்ந்தவர் என்று போட்டி எழுந்தது. நெடிதுயர்ந்து நின்ற சிவபெருமானின் அடியையும் (திருப்பாதத்தையும்) முடியையும் (சிரத்தையும்) யார் முதலில் கண்டு வருகிறார்களோ அவரே உயர்ந்தவர் என்று முடிவு செய்யப்பட்டது. வராக உருவம் கொண்டு விஷ்ணு, சிவனின் திருப்பாதத்தைக் கண்டுவர பூமியைத் துளைத்துக் கொண்டு சென்றார். சிவனின் பாதம் பாதாள லோகத்தையும் கடந்து கீழே சென்று கொண்டேயிருந்ததால் வராக உருவில் இருந்த விஷ்ணுவால் சிவனின் திருப்பாதத்தைக் காண இயலவில்லை.

சிவனின் திருமுடியைக் கண்டு வர பிரம்மா தன் அன்னவாகனத்தில் வானில் பறந்து சென்றார். ஏழு அண்டங்களையும் கிழித்துக் கொண்டு சிவபெருமானின் திருமுடி (சிரம்) உயர்ந்து சென்று கொண்டேயிருந்தது. பிரம்மாவால் சிவனின் திருமுடியைக் காண இயலாதபோது சிவனின் தலையில் இருந்து விழுந்த தாழம்பூ கீழே வந்து கொண்டிருந்தது. அத்தாழம்பூவிடம் பிரம்மா, சிவபெருமானின் தலைமுடியை தான் கண்டுவிட்டதாக சிவனிடம் கூறும்போது அதற்கு 'ஆம்' என சாட்சி சொல்ல வேண்டும் என்று கட்டளையிட்டார். அதன்படியே பிரம்மா சிவபெருமானிடம் பொய்யுரைக்க, தாழம்பூ அதை ஆமோதித்து பொய்சாட்சி சொல்ல சினம் கொண்ட சிவன் பிரம்மாவிற்கு ஆலயங்கள் இல்லாமல் போகட்டும் என்றும், சிவபூஜைக்கு தாழம்பூ உதவாமல் போகட்டும் என்றும் சபித்து விட்டார். எனவே பிரம்மாவுக்கு எங்குமே ஆலயங்கள் இல்லை என்ற நிலை ஏற்பட்டது.

பின் தன் பிழையை பொறுத்தருளும்படி பிரம்மா வேண்டிக் கொண்டதால் திருக்கோயிலில் நடைபெறும் தேர்த்திருவிழா உள்ளிட்ட பெருந் திருவிழாக்கள் அனைத்தும் பிரம்மாவின் பெயரால் பிரம்மோற்சவம் என்று அழைக்கப்படும் என்று சிவபெருமான் அருள் புரிந்தார். மேலும் திருக்கோயிலின் தேவ கோட்டத்தில் (கோஷ்டத்தில்) இடம் பெறவும் அருள் புரிந்தார். ஆனால் இதற்கு நேர்மாறாக வேறெங்கும் இல்லாத சிறப்பாக உத்தமர்கோவிலில் பிரம்மாவிற்கு தனி









# மகாசதாசிவமூர்த்தி

இருபத்து ஐந்து திருமுகங்களுடனும் ஐம்பது திருக்கரங்களுடனும் கயிலாய மலையில் பொன் மயமான பீடத்தில் அமர்ந்து அருள் பாலிப்பவர் மகாசதாசிவமூர்த்தி ஆவார்.

பல கோயில்களில் கோபுரங்களில் சுதை சிற்பமாக இவர் வடிக்கப் பட்டிருப்பதைக் கண்டு மகிழலாம்.



சன்னதியும், சிறப்புப் பூஜைகளும் நிகழும் காரணத்தை பிரம்மாண்ட மகாபுராணம் பின்வருமாறு விளக்குகிறது.

திருமாலின் நாபிக்கமலத்தில் தோன்றிய பிரம்மதேவர் தன் தந்தையாகிய திருமாலின் கட்டளைப்படி பகவானின் கல்யாணகுணங்களை எல்லோருக்கும் எடுத்துச் சொல்லி வந்ததுடன் அவரைத் தனது சத்யலோகத்தில் வைத்துப் பூஜை செய்து வந்தார். பிரம்மாவின் பூஜையைச் சோதிக்க விரும்பிய திருமால், கதம்பவனமாக இருந்த உத்தமர்கோயிலுக்கு வந்து ஒரு கதம்பமர உருவில் மறைந்திருந்தார்.

பெருமாளைக் காணாமல் வருந்திய பிரம்மா எங்கெங்கும் தேடி அலைந்து, இறுதியில் உத்தமர் கோவிலில் அவர் கதம்ப மரமாக இருந்ததைக் கண்டு மகிழ்ந்து தனது கமண்டல தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து வழிபட்டார். துவாதசஅட்சரத்தால் பெருமாளை ஆராதனை செய்து படைப்புத் தொழிலைப் பெற்றார். பின்னர் பெருமாளின் அருளாணைப்படி இத்தலத்திலேயே குடிகொண்டு பெருமாளின் நித்யபடி பூஜையைக் கண்ணுற்று பக்தர்களுக்கு அருள் வழங்கி வருகிறார்.

பிரம்மா படைப்புத் தொழிலைப் பெற்ற இத்தலத்தில் பிரம்மாவையும், பெருமாளையும் வழிபட்டால் வேண்டுவன அனைத்தும் பக்தர்களுக்குக் கிடைத்து வருவது கண்கூடான உண்மையாகும்.

பெருமாளை பிரம்மா அபிஷேகம் செய்த கமண்டல தீர்த்தமானது ஒரு குளமாகத் தேங்கியது. இக்குளத்தின் கரையில் கதம்ப முனிவர் செய்த கடும் தவத்திற்காக மும்மூர்த்திகளும் அவர்தம் தேவியருடன் காட்சி தந்து அருளியதால் இக்குளம் கதம்ப புஷ்கரணி என்ற பெயரில் இன்றளவும் உள்ளது.

பிரம்மாவுக்கு இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத தனிச் சிறப்பாக உற்சவமூர்த்தி இத்திருக்கோவிலில் மட்டுமே உள்ளது.

**ஞானசரஸ்வதி**

பிரம்மாவின் இடப்புறம் தனிசன்னதியில் கலைவாணி, கல்விக்கடவுள் சரஸ்வதி வீணைக்கு பதிலாக ஏட்டுச்சுவடியை ஒரு கரத்திலும ஜெபமாலையை ஒரு கரத்திலும் ஏந்தி அபய, வரத அஸ்தங்களுடன் ஞானத்தின் திசையான தெற்கு நோக்கி தென்முகமாக அமர்ந்து பக்தர்களுக்கு அருள்புரிந்து வருகிறார். மாணவர்களுக்கு நல்லறிவு, உயர்கல்வி, தேர்வில் உயர்வுடன் கூடிய வெற்றி, நல்ல உத்யோகம் ஆகியவை சரஸ்வதி தேவியை வழிபடுவதால் கைகூடி வருகிறது.

**புருஷோத்தமப் பெருமாள்**

காக்கும் கடவுளாகிய விஷ்ணு, கிழக்கு முகமாக ஆதிசேசனின் மீது பள்ளி கொண்ட நிலையில் புருஷோத்தமர் என்ற திருநாமத்துடன் சேவை சாதிக்கிறார். அவர் தனது மார்பில் மகாலட்சுமியையும், நாபியில் (கோஷ்டத்தில்) பிரம்மாவையும் கொண்டு விளங்குவது மிகச் சிறப்பான ஒன்றாகும்.

பெருமாளின் பாதத்தில் அர்த்த மண்டபத்தில் கோஷ்டத்தில் கதம்பமகரிஷி என்ற மாமுனிவர் பெருமாளை வழிபட்டவாறு நின்ற நிலையில் காணப்படுகிறார். இவரது கடும் தவத்திற்காகத் தான் இத்திருக்கோயிலில் மும்மூர்த்திகளும் காட்சி அளித்ததாக புராண வரலாறு கூறுகிறது.

**பூரணவல்லித்தாயார்**

புருஷோத்தமப் பெருமாள் சன்னதியின் வெளியில் மகாலட்சுமிக்கெனத் தனி சன்னதி உள்ளது. இத்துடன் இத்திருக்கோயிலின் முக்கிய சிறப்பம்சமாக மகாலட்சுமி பூரணவல்லித் தாயார் என்ற திருநாமத்துடன் அருள்புரிந்து வருகிறார். அன்னபூரணியின் அம்சமாக பூரணவல்லித்தாயார் விளங்குவதை பின்வரும் புராணச்செய்தி விளக்குகிறது.

பிரம்மா நான்முகன் ஆகியது - பூரணவல்லித்தாயாரால் பிச்சாண்டாரின் பிரம்மஹத்தி தோஷம் நீங்கியது

படைப்புக்கடவுள் பிரம்மா தான் படைத்த



# சோமாஸ்கந்த மூர்த்தி

சிவபெருமானுக்கும் பார்வதி தேவிக்கும் நடுவில் கந்தர் வீற்றிருக்கும் தோற்றம் சோமாஸ்கந்த மூர்த்தியாகும்.

திருவாரூர் சோமாஸ்கந்தமூர்த்தி பிரசித்தி பெற்றது. இவருக்கு அபிசேகம் செய்து வழிபட்டால் தந்தைக்கே உபதேசம் செய்யும் ஞானமுள்ள நற்புத்திரப்பேறு வாய்க்கும்.

சரஸ்வதி தேவியை தானே மணக்க விரும்பியதைத் தெரிவித்தபோது படைத்தவரே தன்னை மணப்பது நியாயமாகாதது என்று சரஸ்வதி மறுத்தார். ஆனால் குடும்ப நியதிக்காக தனக்கு மனைவியாவதற்காகவே சரஸ்வதியைத் தான் படைத்ததாகக் கூறி சரஸ்வதியின் சம்மதம் பெற்று பிரம்மா அவரை மணம் புரிந்தார். அரை மனதுடன் சம்மதித்த சரஸ்வதி தேவி, தன்னை மனைவியாக அடைந்த தோஷத்துக்கு பிரம்மா பின்னாளில் சிவபெருமானால் தண்டிக்கப் படுவார் என்று சாபம் தந்தார்.

அந்தச் சாபம் நிறைவேறும் காலம் நெருங்கியது. திருவிளையாடல் புரிந்து நீண்ட காலமான சிவபெருமான் பிரம்மாவைக் காண பிரம்மலோகத்திற்கு வந்தார். சிவபெருமானைப் போலவே ஐந்து முகம் கொண்டிருந்த பிரம்மா ஓடிவந்து ஈசனை வரவேற்று வணங்கினார். பிரம்மனின் ஐந்து திருமுகங்களில் நான்கு முகங்கள் ஈசனைப் புகழ்ந்து பாடின. ஆனால் ஐந்தாவது முகம் மட்டும் செருக்குடன் ஈசனை மதிக்காமல் அலட்சியம் செய்து நகைத்து, பிரம்மாவிற்கு அவப்பெயர் ஏற்படுத்த முனைந்து ஆணவம் கொண்டிருந்தது. பிரம்மாவின் அந்த ஐந்தாவது தலையை ஈசன் கிள்ளித் துண்டித்து தூர எறிந்தார். ஆனால் துண்டிக்கப்பட்ட தலை சிவனின் கையிலேலே ஒட்டிக் கொண்டு சிவனுக்குப் பிரம்மஹத்திதோஷம் பிடித்துக் கொண்டது. பிரம்மகபாலத்தை பிட்சா பாத்திரமாக ஏந்தி பிட்சாடனராக மாறினார் ஈசன்.

தோஷத்தால் பீடிக்கப்பட்டிருந்த பிட்சாடனரின் பிச்சைப்பாத்திரம் நிரம்பும் அளவுக்கு யாரும் பிச்சையிடவில்லை. பிச்சைப் பாத்திரம் நிரம்பினால் தான் பிரம்மஹத்தி தோஷம் விலகும் என்ற பரிகாரம் இருந்ததால் தீர்த்த யாத்திரையாக ஒவ்வோர் க்ஷேத்திரமாக அலைந்து திரிந்தார் சிவன். க்ஷேத்திராடனமாக ஒரு நாள் கதம்பவனமாகிய உத்தமர் கோயிலை வந்தடைந்தார். சேஷசயனத்திலிருந்து புருஷோத்தப்பெருமாள் கருணையுடன் பூரணவல்லித்தாயாரை நோக்க, ஊருக்கெல்லாம் அன்னமிடும் மகாலட்சுமி பூரணவல்லித் தாயாராக தன் திருக்கரங்களால் சிவனின் கையிலிருந்த பிரம்மகபாலத்தில் பிச்சையிட்டாள். அதுவரை நிரம்பாத பிச்சைப்பாத்திரம் உத்தமர்கோயிலில் நிரம்பிவழிந்தது. சிவனின் கையில் ஒட்டிக் கொண்டிருந்த பிரம்மாவின் கபாலம் மறைந்து ஈசனுக்குப் பிரம்மஹத்தி தோஷம் நீங்கி அவர் தனது மீண்ட பொலிவுடன் கைலாயம் சென்றார்.


சிவபெருமானின் தோஷம் நீங்க, அன்னமிட்ட பூரணவல்லித் தாயாரை மனமுருகி வழிபடுவதால் பக்தர்களின் இல்லத்தில் பசி, பட்டினி, பஞ்சம் நீங்கி அன்னம் உள்ளிட்ட அனைத்து ஐஸ்வர்யங்களும் பூரணமாகத் தங்கும்.

இத்தகைய மகிமை கொண்ட மும்மூர்த்திகளும் தத்தம் தேவியருடன் கோயில் கொண்டுள்ள ஒரே உத்தமமான கோயில் இந்தியாவிலேயே இது ஒன்று தான், திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் வட்டத்தில் அமைந்துள்ள இக்கோயில் யாவரும் வழிபட வேண்டிய திருக்கோயில் ஆகும்.

## 108 திவ்ய தேசங்களில் திருமாலின் திருக்கோலங்கள்

நின்ற திருக்கோலம் 60 திவ்விய தேசங்கள்

அமர்ந்த திருக்கோலம் 21 திவ்வியதேசங்கள்



பள்ளி கொண்ட திருக்கோலம் 27 திவ்விய தேசங்கள்

# திருவிளையாடல் புராணம்

இரா. அரங்கசாமி

## மெய்க் காட்டிட்ட படலம்

குலபூடண பாண்டியன் நல்லாட்சி செலுத்தி வந்த காலத்தில், அவனிடத்தில் சவுந்தர சாமந்தன் என்ற சேனைத் தலைவன் ஒருவன் பணியாற்றி வந்தான். அவன் சிவனடியார்களேயே சிவமாகத் தன் மனத்தில் மதிப்பவன். அவன் பாண்டிய மன்னனுக்குப் பெருந்துணையாக விளங்கினான்.

இப்படியிருக்கும் போது, சேதிராயன் என்ற வேடர்களின் தலைவன் ஒருவன் பல அரசர்களுடன் போரிட்டு வெற்றி பெற்ற ஆணவத்தில், பாண்டியன் மீதும் படையெடுத்துச் செல்லத் திட்டமிட்டான். இதையறிந்த குலபூடண பாண்டியன் தன் சேனைத் தலைவனாகிய சவுந்தர சாமந்தனை நோக்கி, ''நீநமது கருவூலத்தைத் திறந்து தேவையான பொருளை எடுத்துக் கொண்டுபோய் புதிதாக இன்னும் சேனைகளைச் சேர்த்துப் படைபலத்தைப் பெருக்குவாயாக'' என்று கட்டளையிட்டான்.

சவுந்தர சாமந்தன், மன்னனின் கட்டளைப்படி கருவூலத்தைத் திறந்தான். அறநெறியிலே மன்னன் தேடிக்குவித்து வைத்திருந்த திரவியக் குவியல்களில், தனது ஆவல் தீரத்தக்க அளவுக்கு, பொன்னையும், பொருளையும் எடுத்துக் கொண்டான். எல்லையில்லாத மகிழ்ச்சியுடன் திருக்கோயிலை அடைந்தான், பொற்றாமரைக் குளத்தில் நீராடி, சோமசுந்தரப் பெருமாளை வணங்கி வழிபட்டு நின்று ''அடியார்கள் நினைப்பதையெல்லாம் அப்படியே செய்து முடிக்கும் சிவபெருமானே! இதோ இத்திரவியங்கள் யாவும் உமக்கும் உமது மெய்யடியார்களுக்குமே பயன்படுவதாகுக!'' என்றான். பிறகு அத்திரவியங்கள் முழுவதையும் சிவ புண்ணிய வழிகளிலேயே செலவழித்தான்.

சிவபெருமானுக்குத் திருக்கோபுரமும், ஆயிரக்கால் மண்டபமும் எழுப்பி, பெருமானுக்கு அணிவிப்பதற்காகப் பொன், வைர அணி மணிகளும் ஏராளமாக உருவாக்கினான். ஈசனைத் தொழும் அடியார்கள் எவராயிருந்தாலும், அவர்களையெல்லாம் அழைத்து வந்து அறுசுவை நிறைந்த நல்லுணவுகளையும் அளித்து உண்ணவைத்து மகிழ்வித்தான், மகிழ்ந்தான்.

இவ்வாறு சிவபக்தச் செம்மலாக விளங்கிய சாமந்தன் அண்ணலுக்கும், அடியார்களுக்கும் ஏராளமான பொன்னை அள்ளி வழங்கிச் செலவழித்தான். பாண்டியன் தனது நிதியின் பெரும் பகுதி தண்ணீர் போலச் செலவாவதைத் தனது ஒற்றன் மூலம் அறிந்து கொண்டான்.

தளபதி சவுந்தரசாமந்தன், பாண்டியன் தன் மீது சந்தேகப்படாதவாறு அரசவையையடைந்து அரசு காரியங்களில் கலந்து கொண்டான். பார்ப்பவர்களுக்குப் பிறநாட்டு வீரர்களுக்கும் பொருளை அனுப்பி, பாண்டியனின் சேனையில் வந்து சேர்ந்து கொள்ளும்படி ஓலை விடுப்பது போலப் பாவனைகள் செய்து தெலுங்கர், கலிங்கர், விராடர், மராடர், கொங்கர். வங்கர், துருக்கர் ஆகிய பல நாட்டினருக்கும் ஓலை எழுதுவதாய் கட்டளையிட்டு நடத்தி வந்தான்.

பல நாட்கள் கடந்தும் வீரர்கள் எவருமே வரவில்லை. பாண்டியன் படையில் சேரவில்லை. அதனால் பாண்டியன் தளபதியை அழைத்து ''நாளை மாலை சூரியன் மறைவதற்க்குள், நீங்கள் ஓலைவிடுத்த பல நாட்டுப்படை வீரர்கள் அனைவரையும் மதுரைக்கு அழைக்கக் கடவீர்''. என்று கட்டளை இட்டான்.

சவுந்தர சாமந்தன் மதுரைத்திருக்கோயிலை அடைந்து, சோமசுந்தரக் கடவுளை கண்ணீர் மல்க, வணங்கி வழிபட்டு, ''பெருமானே! மன்னனின் கருவூலத்தில் இருந்து நான் எடுத்த



பெருஞ்செல்வத்தையெல்லாம் ஏற்றுக் கொண்டு, அடியேனைப் பணிசெய்ய அருளினீர். இப்போது சேனைகளைத் திரட்டும் வழியறியாது தவிக்கிறேனே!'' என்று அழுதான். அப்போது சிவபெருமானின் திருவருளால் ''மன்னன் எதிர்பார்த்திருக்கும் சேனை வீரர்களோடு நாமே நாளை நேரில் வருவோம். நீயும் வீரர்கள் வரவை எதிர் நோக்கும் பாண்டியன் அவைக்குச் சென்றிருப்பாயாக!'' என்று விண்ணொலிகேட்டது.

இதைக் கேட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்து, சோமசுந்தரப் பெருமானுக்கு நன்றி கூறிய சவுந்தர சாமந்தன் தனது இல்லத்தை அடைந்து ''எப்பொழுது விடியும்'' என்று எண்ணி அடிக்கடி நாழிகையை எண்ணியெண்ணிச் சிவபெருமானின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

வேதங்களாலும், அரி, அயனாலும் காண முடியாத சிவபெருமான் தம் அன்பனுக்குக் காட்சி தர எண்ணிக் குதிரை மீது எழுந்தருளினார். அவ்வருட்படை எழுச்சியை வரவேற்பதைப் போலக் கதிரவனும் கிழக்கில் தோன்றினான். சாமந்தன் கண் விழித்து எழுந்து திருக்கோயிலை அடைந்து பொற்றாமரைக் குளத்தில் நீராடிப் பின்னர் சோமசுந்தரக் கடவுளை வழிபட்டு அரசவைக்குச்சென்றான்.

சிவபெருமான், சங்கு கன்னன் முதலிய சிவகணங்களும், குண்டோதரன் முதலிய பூத வீராகளும் வீரக்கழல் பூண்டு சேனை வடிவம் கொண்டு பின் தொடரவும் அந்த வீரர்கள் திருக் கைகளில் பலவகையான போர்க் கருவிகளை ஏந்தவும் அணிவகுத்து வந்தார். நந்தி, மாகாளன், பிருங்கி, நிகும்பன், கும்போதரன் முதலிய சிவகணத் தலைவர்கள் அனைவரும் போர்க் கவசங்களைத் தரித்தும், தீருநீறு அணிந்தும், கைகளில் வாளேந்திக் குதிரை வீரர்களாகச் சிவபெருமானைச் சூழ்ந்து திரண்டு எழுந்தனர். பலவகையான வாத்தியங்களின் ஒலியும், வீரர்களின் ஒலியும் குதிரைகளின் கனைப்பு ஒலியும் சேர்ந்து பேரொலியாக எழுந்தன.

சவுந்தர சாமந்தன் குலபூடணபாண்டியனின் முன்சென்று சேனைகள் வருவதை அறிவித்தான். உடனே அரசன் மகிழ்ந்தான். அரண்மனை வாயிலுக்குச் சென்று அங்குள்ள மண்டபத்தின் அரியணை மீது அமர்ந்து தனது பகைவனான சேதிராயனை இனி வெற்றி பெற்று விடலாம் என்ற நம்பிக்கையில், மகிழ்ச்சியுடன் சேனைவீரர்களின் சிறப்புகளை நோக்கினான்.

பிறகு, ''இவர்கள் எந்த எந்த தேசத்தவர்கள்'' என்று கேட்டான். தளபதி சவுந்தரசாமந்தன் அணி அணியாகச் சென்ற வீரர்களைக் காட்டி ''அரசே! இவர்கள் பலநாட்டினர்.'' என்று பல தேசங்களின் பெயர்களையும் அவர்களுடைய வீரத்தையும், அவர்களின் அணிவகுப்புச் சிறப்பையும் காட்டித்

## சிவாலயத்தில் காவடி



தேனி மாவட்டம் அல்லி நகரம் பனசலாற்றங்கரையில் அமைந்திருப்பது ஸ்ரீவீரப் பிரம்மலிங்கம் ஆலயம். தமிழ்வருடப் பிறப்பில் இவ்வாலயத்திற்கு வரும் பக்தர்கள் பால்காவடி - பன்னீர்காவடி - புஷ்பக்காவடிகள் என ஆயிரக்கணக்கான காவடிகளும் அலகும் குத்தி வருவது மிகவும் விசேடமாகும்.

தெரிவித்தான். பிறகு ''இத்தனை நாடுகளிலிருந்து வீரர்களை இங்கே வரவழைத்து அணிவகுக்கச் செய்த சாமர்த்தியம் ஒன்றும் பெரிதல்ல. எல்லாம் தங்கள் பொருளை வாரி வாரிக் கொடுத்துச் செலவு செய்ததால்தான் இவர்கள் யாவரும் இங்கே வரமுடிந்தது'' எனக் கூறினான்.

அரசன், தூரத்தில் குதிரை மீது ஏறி, அதனைச் செலுத்துகின்ற குதிரை வீரனாகிய சோமசுந்தரக்கடவுளைச் சுட்டிக்காட்டி ''அவர் யார்?'' என்று கேட்டான். அதைக் கேட்ட சாமந்தன் ''அரசே, இப்பெரிய அணிவகுப்பில் தாங்கள் குறிப்பிடும் வீரரை யார் என்று எப்படி அறிந்து கூறுவேன்?'' என்றான். பாண்டியன் ''அவரை இங்கே அழைத்து வா'' என்றான். அந்தக் குதிரை வீரரும் அரசன் முன்பு வந்தார்.

பாண்டியன் அவரது அழகிய தோற்றத்தைக் கண்டு மகிழ்ந்து நவமணிகள் பதித்த அணிகளையும், பொன்னாடைகளையும் அவரிடம் கொடுத்தான். குதிரை வீரரான சோமசுந்தரக்கடவுள், தன் அன்பனான சவுந்தரசாமந்தனின் அன்புக்குக் கட்டுப்பட்டு, பிறகு தமது குதிரையைப் பலவிதங்களில் நடத்திக் காண்பித்து, பின் வீரர்களின் சேனை வெள்ளத்தில் மறைந்தார்.

அப்போது ஒற்றன் ஒருவன் ஓடிவந்து பாண்டியனை வணங்கி, ''சேதிராயன் வேட்டைக்குச் சென்ற இடத்தில் புலியால் தாக்கப்பட்டு இறந்துவிட்டான்'' என்று கூறினான். முரசுகள் முழங்கிய சேனையைக் கண்டு மகிழ்ச்சியுற்ற பாண்டியன், மேலும் மகிழ்ச்சியுற்றுத் தனது சேனைத் தலைவனாகிய சவுந்தர சாமந்தனுக்குச் சிறப்புகள் பலவும் செய்து கௌரவித்தான். பிறகு ''சேனைகளைத் தத்தமது நாட்டிற்குச் செல்லுமாறு விடை தந்து அனுப்புக'' என்று ஆணையிட்டான்.

அதன்படியே சவுந்தரசாமந்தனும் சேனைகளைத் தத்தமக்கு உரிய நாடுகளுக்குச் செல்லப் பணிப்பது போல பாவனை செய்து விடையளித்தான். மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளும் அங்கிருந்தபடியே தமது வீரர்களுடன் திடீரென்று மறைந்தருளினார்.

# மகாபாரதம்

முனைவர் த. அமிர்தலிங்கம்

22


கருட வியூகத்தின் கண்ணாக நிற்கும் வீடுமரை அர்த்தசந்திர வியூகத்தின் இடக் கொம்பில் நிற்கும் அர்ச்சுனன் நெருங்கிப் போரிட, அர்த்தசந்திர வியூகத்தின் வலக் கோடியில் நின்றிருக்கும் வீமன் துரியோதனனை நெருங்கிப் போரிடுகின்றான். வீமனால் துரியோதனனுக்குத் துன்பம் நேரிடுமோ என்று வீடுமர், வீமன் பக்கம் திரும்ப, அர்ச்சுனன் அப்பொழுது துரோணர், கிருதவர்மா, அசுவத்தாமா, கிருபர் ஆகியோர் மேல் அம்புகளைப் பொழிய, கலையாது எனக் கருதப்பட்ட கருட வியூகம் போர் ஆரம்பித்த சற்று நேரத்திற்கெல்லாம் கலைந்து போய் விடுகிறது.

துரியோதனனுடன் வீமன் அன்றைக்கு ஆற்றிடும் போர் மிக அற்புதமாக இருக்கிறது. அவனுடைய ''சத்துரு காதினி'' என்ற கதாயுதம் எதிரிகளுக்கு எமனாகி எதிர்ப்பட்டவர்களை எல்லாம் கொல்லுகின்றது. முதல்நாள் போரில் அடைந்த தோல்விக்குப் பழி தீர்த்துக் கொள்ள விரும்பிய வீமனின் ஆத்திரத்திற்கு ஆற்ற மாட்டாமல் துரியோதனனும் அவனுடைய தம்பிமார்களும் புறம் கொடுத்து ஓட, வீமனை எதிர்த்து வலிய தன் யானைப் படையுடன் வந்து மோதுகின்றான் கலிங்க மன்னன் சக்கரதேவன்,

**''உக்ரமாக வீமன் வந்த உறுதிகண்டு அநேகபோர்**
**விக்ரமாம தத்த டக்கை வேழவீரர் தம்முடன்**
**வக்ரசாப மழைபொ ழிந்து வடகலிங்க மன்னவன்**
**சக்ரதேவன் முகிலெ றிந்த வுருமெனத் தலைப்பெய்தான்''**

- இரண்டாம் போர்ச்சருக்கம் 12

வீமன் ஒருவனே பதினாயிரம் யானை பலம்



கொண்டவன். அவன் இடும்பன், பகாசூரன், ஜராசந்தன், கீசகன் முதலான இராட்சத பலம் படைத்தவர்களையெல்லாம் தன்னுடைய புஜபல பராக்கிரமத்தால் வெற்றி கொண்டவன்.

பகாசூரனையும் மற்றமற்ற வீரர்களையும் வெற்றி கொண்டிருப்பவனாகிய வீமனைச் சக்கர தேவனுடைய யானைப்படை என்ன செயது விட முடியும்?

யானைப்படைகள் தன்னுடன் மோத வந்ததும், வீமனுக்கு முன்னையிலும் உற்சாகம் பதின் மடங்கு அதிகரிக்கிறது. தன்னுடைய வலிமை வாய்ந்த கரங்களால் யானைகளின் துதிக்கையைப் பிடித்துக் கரகரவெனத் தலைக்கு மேலே சுற்றி, மற்ற யானைகளின் மேலும், கலிங்க மன்னன் மேலும் அவனுடன் வந்த பகை மன்னர்கள் மேலும் வீசி, அவர்களை எல்லாம் கதி கலங்க வைக்கிறான்.

**''கதிக்கிடுந் தேரினின் றிழிந்து காலிங்கன்**
**மதிக்கு மும் மதகரி வந்த யாவையும்**
**து திக் கை வன் கரங் களாற் சுற் றி எற்றினான்**
**விதிக்கொரு விதியனான் வீம சேனனே''**

- இரண்டாம் போர்ச்சருக்கம் 13

ஒரு காலத்தில் மலைகள் எல்லாம் சிறகு களையுடையனவாக இருந்துள்ளன. அவை தாம் விரும்பிய போது விரும்பிய இடத்திற்குப் பறந்து போய் அங்கங்கே அமர்ந்த போது, அங்கிருந்த ஊர்களும் மக்களும் நாசமாகியுள்ளனர். மலைகளால் நேர்ந்த இந்தத் துன்பத்தை முனிவர்கள் தேவேந்திரனிடம் எடுத்துக் கூற, அவனும் தன் வச்சிராயுதத்தால் மலைகளின் சிறகுகளை எல்லாம் வெட்டி வீழ்த்தி, அவை ஒரே இடத்தில் நிலையாக நிற்குமாறு செய்துள்ளான். தேவேந்திரனின் வச்சிராயுதத்தால் சிறகுகள் வெட்டப்படாத நிலையில் மலைகள் எவ்வாறு பறந்தனவோ அவ்வாறே வீமனால் வீசியெறியப் பட்ட யானைகளும் பறக்கின்றன என்று அக்காட்சியை அழகுற வருணித்துள்ளார் வில்லிபுத்தூரார்.

**''கழனி பொலங் கழற் காளை கைகளால்**
**எழஎழ மதகரி எடுத்து வீசலின்**
**விழுவன வன்றி மேல் விசையிற் போவன**
**பழையகற் சிறகுடன் பறப்ப போன்றவே''**

- இரண்டாம் போர்ச்சருக்கம் 17

இவ்வாறு யானைப் படைகளையெல்லாம் நாசப்படுத்தித் தன்னுடைய மாவீரத்தால் வீமன் இன்றைக்குத் துரியோதனன் படைகளை எல்லாம் கதிகலங்க வைக்கிறான். அவனுடைய தினவெடுத்த தோள் வலிமையால் அவனை எதிர்த்து வந்த கலிங்க மன்னன் சக்கரதேவனும் அவனுடைய மைந்தர் களும், அவனுடைய அளவிலாத சேனைகளும் கூண்டோடு கயிலாயம் செல்கின்றனர்.

தம் படைகளுக்கு வீமனால் ஏற்பட்ட மாபெரும் நாசத்தைத் தடுக்க வீடுமரே விரைந்து வந்து வீமனோடு மோதுகின்றார். வீமன் தன்னுடைய தேரிலிருந்து ஒரு வேலாயுதத்தை எடுத்து, வீடுமரின் தோளைக் குறி பார்த்து வீசுகின்றான். வீடுமர் தன்னை எதிர் கொண்ட வீமனின் வேலை தானும் ஒரு தோமரம் எடுத்து வீசி வெட்டி வீழ்த்தி விடுகிறார். தோமரம் என்பது இரும்பினால் செய்யப்பெற்ற உலக்கையின் வடிவினால் அமைந்த ஒரு ஆயுதமாகும்.

வீடுமர் தன்னுடைய வில்லெடுத்து அம்புகளைச் செலுத்தி, வீமனின் தேரில் பூட்டி இருக்கும் குதிரைகள் நான்கையும் ஒரே நேரத்தில் கொன்று விடுகிறார். வீமனும் தன்னுடைய கதாயுதத்தை எடுத்துப் பாய்ந்து சென்று ஒரே அடியால் வீடுமரின் தேர்ப்பாகனை அடித்து சாய்த்து விடுகிறான். அடுத்துக் கதாயுதத்தால் வீடுமரையும் ஓங்கி அடிக்க வீமன் முற்படுகையில், வீடுமரைச் சார்ந்த துணைப் படைகள் எல்லாம் ஒருசேர வந்து வீமனை வளைத்து, அவன் மேல் ஆயுதங்களைச் செலுத்து கின்றன. வீமனோ சற்றும் மலைத்திடாமல் தான் ஒரு கையில் வைத்திருக்கும் கதாயுதத்தால், பகைவர்களின் தலையை மோதியும், மறு கையினால் பகைவர்களின் தேர்களைத் தூக்கிப் பந்தாடியும் தன்னுடைய வீரசாகசங்களைக் காட்டுகின்றான்.

இவ்வாறான வீர சாகசங்களை வீமன் செய்ய, அவனுக்குத் துணையாக அபிமன்யுவும் சேர்ந்து கொண்டு எதிரிகள் மேல் வில்லை வளைத்துச், சீறிச் செல்லும் அம்புகளைச் சரமாறிப் பொழிகின்றான். வீமனும் அபிமன்யுவுமாகச் சேர்ந்து செய்கிற போரினால் ஊழிக்காலம் வந்து உற்றதோ என்று அஞ்சி ஓடுகின்றனர்துரியோதனனின் வீரர்கள்.

அஞ்சி ஓடுகின்ற வீரர்களை ஓடா வண்ணம் தடுத்து நிறுத்தித் துரியோதனன் கடுங் கோபத்துடன் மறுபடியும் போர் செய்யுமாறு ஆணையிட, அவ்வாறே அவர்கள் எல்லாம் வந்து வீமனையும், அபிமன்யுவையும் வளைத்து நின்று போர் செய்கின்றனர். அதே நேரத்தில் கண்ணபெருமான் தன்னுடைய தேரையும் ஓட்டி வந்து, வீமனும், அபிமன்யுவும் போர் புரியும் இடத்திற்குக் கொண்டு வந்து நிறுத்த, அவ்விருவருடன் அர்ச்சுனனும் சேர்ந்து கொள்கிறான். வீமன் ஒருவனுக்கே ஆற்ற மாட்டாத துரியோதனனின் அற்பப்படை,


## அகோரஅத்திர மூர்த்தி



தக்க யாகத்தை அழிக்கக் கொண்ட வீரபத்திரத் திருக்கோலமே அகோரஅத்திரமூர்த்தி திருக்கோலம் ஆகும்.

திருவெண்காட்டில் சிறப்புற்று விளங்கும் அகோர அத்திர மூர்த்திக்கு அபிடேகம் செய்து வழிபட சத்துருஜெயம் பெறலாம்.

# கஜயுக்த மூர்த்தி



தாருகாபுரத்து முனிவர்கள் வேள்வி செய்து அனுப்பிய கஜாசுரனை வதைத்தழித்து அவ்யானையின் தோலைத் தம் உடம்பில் போர்த்திய திருக்கோலம் கஜயுக்தமூர்த்தி ஆகும்.

திருவழுவூரில் உள்ள கஜசம்காரமூர்த்திக்கு அபிசேகம் செய்து வழிபட்டால் பில்லிசூனிய பயம் நீங்கி யமபயம் நீங்கி வாழலாம்.

அபிமன்யுவும் அர்ச்சுனனும் புலியும் அதன் வலிய குட்டியும் என வந்து சேர்ந்து போர்புரிய அத் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுகிறது.

நிவாத கவசர் எனும் அசுரர்கள் மூன்று கோடி பேரையும், காலகேயர் எனும் அசுரர் அறுபதினாயிரம் பேரையும் தான் ஒருவனாகவே தனித்து நின்று வெற்றி கொண்ட மாபெரும் வில்வீரன் அர்ச்சுனன். தந்தைப்புலி எட்டடி பாய்ந்தால் குட்டிப்புலி பதினாறடி பாயும் என்பதற்கொப்ப அர்ச்சுனன் பெயர் சொல்லப் பிறந்த மாபெரும் வீரன் அபிமன்யு; இவர்களுடன் பதினாயிரம் மதயானைகளின் பலம் ஒருங்கு கொண்ட மாவீரன் வீமன்; இம்மூவரும் ஒன்று சேர்ந்து போரிடுவார்களானால் அவர்களை வெல்ல மூவுலகத்திலும் யாரும் இருக்க முடியாது என்பதே இன்றைக்கு அனைவரும் கண்கூடாகக் காண நேர்கின்ற உண்மை.

அதனால்தான் வீடுமர் உள்ளிட்ட துரியோதனனின் படைகள் எல்லாமும் தலை தப்பித்தால் போதும் எனத் தம்முடைய பாசறையை நோக்கி ஓடுகின்றனர். சூரியனும் அந்த நேரம் அஸ்தமனம் ஆகத் தொடங்குவது அவர்களுக்குப் பெருத்த ஆறுதலாகவே அமைகிறது எனலாம்.

தான் இனி தலை காட்டினால் அர்ச்சுனன், தன்னையும் கொல்லக் கூடும் என்பதாக அஞ்சி மேலை வானத்தில் ஓடி மறைய முற்பட்டான் சூரியன் என்பதாக சூரிய அஸ்தமனத்தை வருணிக்கிறார் வில்லிபுத்தூரார்.

இவ்வாறு இரண்டாம் நாள் போர் கலிங்க மன்னன் உள்ளிட்ட துரியோதனனின் கணக்கற்ற படைகள் அழிவு பெறுவதோடு நிறைவு பெறுகிறது.

துரியோதனன் இரண்டாம் நாள் போரில் தனக்கேற்பட்ட பெருத்த தோல்வியைக் கண்டு தன்னுடைய தானைத் தளபதியான வீடுமரையே கோபித்துக் கொள்கிறான்.

''பரசுராமரை வென்ற வீடுமரே! உம் வீரம் எங்கே போயிற்று? அர்ச்சுனன் மேல் பாசம் காட்டி, பாண்டவர் மேல் பரிவு காட்டிப், பதுங்கிக் கொண்டதோ, உம்முடைய வீரம்? இதுதானா உம்முடைய செஞ்சோற்றுக் கடன்?'' என்று வீடுமரையே பழித்து ஏசுகின்றான் துரியோதனன். அவ்வாறே அவனைச் சார்ந்த மன்னர்களை எல்லாம் கூட மிரட்டுகின்றான். ''நாளைய போரில் பாண்டவர்களுக்கு அஞ்சி யாரேனும் புறம் கொடுப்பீர்களானால் உங்களை நானே கொன்று விடுவேன்''

துரியோதனனின் இத்தகைய கடும் கோபத்திற்காளான வீடுமரும் மற்ற மற்ற மன்னர்களும் மூன்றாம் நாள் போரில் பாண்டவரிகளிடம் போரிட்டு அவனுக்கு மனமகிழ்வு உண்டாகும் வகையில் பாண்டவர்தளை வெற்றி கொள்கிறார்களா? அல்லது மாண்டு மடிகிறார்களா? என்பதை இனி விரிவாகக் காண்போம்.

முதல் நாள் போரில் பாண்டவர் அணியில் உத்தரனும் சுவேதனும், மாண்டுபட இரண்டாம் நாள் போரில் பழிக்குப் பழி என்ற முறையில் மிக உக்கிரமாக வீமனும், அர்ச்சுனனும், அபிமன்யுவும் போரிட்டுத் துரியோதனனின் படைகளைச் சேதப்படுத்தியதைக் கண்டோம்.

முதல் நாள் போரில் வெற்றி கண்டு ஆரவாரித்த துரியோதனன், இரண்டாம் நாள் போரில் கலிங்க மன்னன் சக்கரதேவனும், அவனுடைய புதல்வர்களும, அளவிலாத சேனைகளும் வீமனின் கதைக்கும், அர்ச்சுனன் அபிமன்யு இருவரின் கணைகளுக்கும் பலியாகத் தோல்வியால் துவண்டு போய் விடுகிறான்.

நாளைய போரில் பாண்டவர்களைப் பதிலுக்குப் பதில் நாசப்படுத்தி ஆக வேண்டும் என்றுதுரியோதனன் வீடுமருக்கும் துரோணருக்கும் மற்ற மன்னர்களுக்கும் கட்டளையிட்டு விட்டு அன்றைய இரவுப் பொழுதைப் பாசறையில் அமைதியின்றிக் கழிக்கிறான்.

பொழுது விடிகிறது. மூன்றாம் நாள் போரும் தொடங்குகிறது. இரண்டாம் நாள் போரில் வகுத்திருந்த கருட வியூகத்தையே மறுபடியும் வீடுமர் அமைக்கின்றார். அர்த்தசந்திர வியூகத்தையே அமைக்கச்செய்கிறார்கண்ணபெருமான்.

> ''ஏலா அமரின் மூன்றா நாள் இரண்டு
> படையுந்திரண்டேறக்
> காலார் திண்டேர் வீடுமனும் வகுத்தான்
> கருங்காரூட வியூகம்



## சார்த்தூலஹர மூர்த்தி

தாருகாபுரத்து முனிவர்கள் வேள்வியில் உண்டாக்கி அனுப்பிய புலியை வதைத்தழித்து அதன் தோலை தம் உடம்பில் போர்த்திய திருக்கோலம் சார்த்தூலஹரமூர்த்தி எனப்படும்.

திருவழுவூரில் உள்ள இம்மூர்த்தியை அபிசேகம் செய்து வழிபட பில்லி சூன்யம் நிவர்த்தி ஆகும்.

**மேலார் வென்றிப் பாண்டவர்தம்**
**வெஞ்சேனையைக் கொண்டெஞ்சாமற்**
**தோலா அர்த்தசந்தரப் பேர் வியூகம்**
**வகுத்தான் துளவோனே''**

- மூன்றாம் போர்ச்சருக்கம் 12

பெயருக்குத்தான் யாகசேனன் பாண்டவர்களின் தளபதியே தவிர பாண்டவர்கள் படையை நடத்தும் சூத்ரதாரி கண்ணபெருமானே என்பது நமக்குத் தெரிந்த ஒன்றுதான். அதனால்தான் அர்த்தசந்திர வியூகத்தைக் கண்ணபெருமானே அமைத்ததாகக் கூறி வில்லிபுத்தூரார் ''அர்த்த சந்தரப்பேர் வியூகம் வகுத்தான் துளவோனே'' எனப் பாடி இருக்கக் காண்கிறோம்.

இருதரப்புப் படைகளும் இருபெரும் கடல்கள் மோதிக் கலப்பதைப் போல் ஆரவாரித்துக் கலந்து போர் புரியத் தொடங்குகின்றன. துரியோதனனின் வசைக்கு ஆளான வீடுமரும். துரோணரும், துரியோதனன் இன்று தாம் ஆற்றும் வீரப் போரினால் மனமகிழ்ச்சி கொள்ளச் செய்து விட வேண்டும் என்ற ஆவேசத்தோடு போரிடுகிறார்கள்.

காண்டீபத்தின் ஆற்றலினால் முந்தின நாள் தம்மை விரட்டி விரட்டியடித்த வீரனாகிய அர்ச்சுனனையும், கண்ண பெருமானையும் வளைத்துக் கொண்டு வீடுமரும் துரோணரும் ஒருபுறத்தில் போரிட்டுக் கொண்டிருக்க துரியோதனனும், அவனுடைய தம்பிமார்களும் சகுனியும் சேர்ந்து கொண்டு மறுபுறம் வீமனுடன் சமர் செய்கின்றனர். எண்ணிக்கையில் மிகுந்த யானைக் கூட்டம் ஒன்று சிங்கம் ஒன்றை வளைத்துக் கொண்டால் எப்படி இருக்குமோ அப்படியிருக்கிறதாம் வீமனைத் துரியோதனாதியர்கள் வளைத்து நிற்கும் காட்சி.

**''சூரர்க்கெல்லாம் முதலெண்ணும்**
**துரியோதனனுந் தம்பியரும்**
**ஆரக்கவிகைக் காந்தாரன் முதலாவுள்ள**
**அவனிபருஞ்**
**சேரத்திரண்டு கரிகளோடு சிங்கம்**
**வளைத்ததெனச்சிங்க**
**வீரத்துவசனின்றுழிப்போய் வளைத்தார்**
**சமரம் விளைத்தாரே''**

மூன்றாம் நாள் போர்ச்சருக்கம். 15

அபிமன்யு எப்படி தன் தந்தையைக் காட்டிலும் ஆற்றல் மிக்க வீரனோ, அப்படி கடோத்கஜனும் தந்தை வீமனையும் விஞ்சிய மாவீரன். தந்தையொருவரைச் சுற்றி துரியோதனாதியர்கள் கூட்டமே வளைத்து நிற்க, தாவிக் குவித்து வரும் கடோத்கஜனும், தன்னுடைய கதையினால் அனைவரையும் மோதி விரட்ட நேரமாகக்கூடும் என்பதால், வில்லினில் அம்புகளைத் தொடுத்துச் சீறும் அம்புகளால் அனைவரையும் சிதறி ஓடச் செய்கிறான்.

துரியோதனனைச் சூழ்ந்து நின்று காவல் செய்யும் கணக்கற்ற வீரர்களின் தலைகளைச் சீவிக்கொண்டு பறக்கின்றன கடோத்கஜன் விடும் அம்புகள். ஆகாயமே தெரியவில்லை. எங்கு நோக்கினும் கடோத்கஜனின் அம்புகளால் சிதறுண்ணும் துரியோதனனின் படை வீரர்களின் தலைகளே தெரிகின்றன. அத்தலைகளிலிருந்து கொட்டும் இரத்தமே வெள்ளப் பெருக்கினைப் போல அந்தக் குருசேத்திரப் போர்க்களம் முழுதும் ஓடிக் கொண்டும் இருக்கிறது.

பிறைச் சந்திரன் வடிவில் அமைந்த கடோத்கஜனின் அம்புகள், துரியோதனனின் தேர்க்கொடியை வீழ்த்தித் தேரில் பூட்டியிருக்கும் குதிரைகளை வீழ்த்தி, இரத்தினம் பதித்த துரியோதனனின் பொற்கவசத்தை ஊடுருவி துரியோதனனையும் தாக்க, அவனும் அந்தக்கணமே மூர்ச்சித்து விழுகிறான்.

**''துவசம்பிளந்து தேருருந் துரகம் பிளந்து**
**சுடர்மணிப்பொற்**
**கவசம் பிளந்து மார்பகமும் பிளந்துருவக்**
**கடோற்கசன்தான்**
**நவசந்திரமா முனைவாளி தொடுத்தான்**
**தொடுத்த நாழிகையின்**
**அவசம் பிறந்து தம்பியர் முன் விழுந்தான்**
**ஒருவர்க்கழியாதான்''**

அண்ணன் கடோத்கஜனுக்குத் துணையாக அங்கு வேகமாக வந்து சேர்ந்துக்கொள்ளும் தம்பி அபிமன்யு, தானும் ஒரு வேல் எடுத்து துரியோதனனின் தேர்ப்பாகன் மீது செலுத்த அவனும் மடிந்து சாய்கின்றான்.

இவ்வாறு கடோத்கஜனும் அபிமன்யுவுமாகச் சேர்ந்து கொண்டு, வீமச்சிங்கத்தை வளைத்து நின்ற துரியோதனன் யானைக் கூட்டத்தாதை விரட்டி

# சண்டேசஅனுக்கிரகமூர்த்தி



சிவபூசையைச் சிதைத்த தம் தந்தையை விசாரசருமர் தண்டிக்க, அவர்தம் பூசையை விருப்பத்துடன் ஏற்று ''நம் தொண்டர்கள் அனைவருக்கும் உம்மையே தலைவன் ஆக்கினோம். நாம் ஏற்றுக் கொண்ட அமுதம், பரிவட்டம், மலர்கள் அனைத்தையும் உனக்கே தந்தோம்'' என்று கூறிச் சிவபெருமான் தாம் சடையில் அணிந்திருந்த கொன்றை மாலையை அவருக்குச் சூட்டிச் சண்டேசுர பதவியருளிய திருக்கோலம் ''சண்டேச அனுக்கிரக மூர்த்தி'' ஆகும்.

திருவாய்ப்பாடி சண்டேசஅனுக்கிரக மூர்த்தியை வழிபட சிவப்பதம் வாய்க்கும்.

யடித்துக் கொண்டிருக்க துரியோதனன் சாய்ந்தான் என்ற சேதி போய் எட்டுகிறது. வீடுமருக்கு.

அர்ச்சுனனுடன் போர் புரிவதை விட்டுவிட்டு உடனே ஓடிவருகிறார் வீடுமர் துரியோதனன் இருக்கும் இடத்திற்கு. துரியோதனனை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு அவனுடைய புண்பட்ட மார்பைத் தடவிக் கொடுத்து அவனுடைய மயக்கம் தெளிவதற்கு மருந்தையும் கொணர்ந்து அவனுக்கு வாயில் ஊட்டுகிறார் வீடுமர். துரியோதனனும் மருந்தினை உட்கொண்ட அளவில் மயக்கம் நீங்கி எழுகிறான்.

''துரியோதனா! சற்றே நீபாதுகாப்பாக இருந்து இளைப்பாறு. உன்னைக் காயப்படுத்திய பாண்டவர்களுக்கு நான் பாடம் புகட்டி வருகிறேன்'' என்பதாகக் கூறி வீடுமர் தம் வில்லுடன் மீண்டும் போர் புரியத் தொடங்குகிறார்.

தன்னுடைய காவலை மீறிப் பாண்டவர்கள் துரியோதனனைத் தாக்கிக்காயப்படுத்தும் அளவிற்குப் போய் விட்டதே என்ற கவலை வீடுமருக்கு. இதற்காகவும் போர் முடிந்த இரவில் பாசறையில் வைத்துத் தன்னை என்னென்ன வைவானோ துரியோதனன் என்ற பயமும் அதில் கலந்து கொண்டது. பாண்டவர் படைகளை இனியும் சும்மா விடலாகாது என்ற வெறி, அவருக்கு மிகுந்து விட அவருடைய வில்லிலிருந்து கிளம்பிடும் அம்புகள் அக்கினியைப்போல் சிவக்கின்றன. புயலினைப் போல் சீறுகின்றன.

கோபத்தில் கொதிக்கும் வீடுமரை அப்பொழுது காணும் அனைவரும், அவருடைய தோற்றத்தைக் கண்டே அஞ்சி நடுங்குகிறார்கள். அவருடைய கையில் இருப்பது வில்லல்ல, மேருமலை, இவரும் வீடுமர் அல்ல, திரிபுரத்தை அழிக்க எழுந்த பரமசிவன் என்பதாக பாண்டவர் படை வீரர்கள் பலரும் நடுங்கி ஓடுகின்றனர்.

திருப்பாற்கடலைக் கடைந்தபோது மந்தரமலை சுழன்றதைப் போல வீடுமரும், சுழன்று சுழன்று பாண்டவர் படை வீரர்களின் மார்புகளிலும், தோள்களிலும் முகங்களிலும், கண்களிலும் அம்புகளை எய்து அவர்களைக் கொன்று குவிக்கத் தொடங்குகிறார். வீடுமரின் வீரத்திற்கும், கோபாவேசத்திற்கும் பாண்டவர் படையின் பெரும் பகுதி செத்து மடிய நேரிடுகிறது. வீடுமரிடமிருந்து பாண்டவர் படைகளைக் காக்க வேண்டும் என்ற உணர்வு அன்றைக்கு ஏனோ அர்ச்சுனனிடம் ஏற்படவில்லை.

வீடுமர் இருக்கும் இடம் நோக்கிச் செல்லாமலே, மற்றொரு பக்கமாக அர்ச்சுனன் படைவீரர்களுடன் போர் செய்து கொண்டிருக்க கண்ணபெருமான் வீடுமரை நோக்கிப் பலமுறையும் தம்முடைய தேரைத் திருப்பி ஓட்ட முயன்றும் அர்ச்சுனன் வேண்டாம் எனத் தடுக்க, கண்ண பெருமானுக்கே அர்ச்சுனன்மேல் கோபம் உண்டாகிவிடுகிறது. ''என்ன அர்ச்சுனா, என்ன உனக்கு நேர்ந்தது? வீடுமர் அங்கே நம்முடைய படைகளை நாசப்படுத்திக் கொண்டிருக்க, இங்கே நீஏதோ போர் புரிவதைப் போல பாவனை செய்து கொண்டிருக்கிறாயே தவிர வீடுமர் மேல் ஏன் அம்பை எய்ய மறுக்கிறாய்? வீடுமர் இருக்கும் இடம் நோக்கித் தேரையும் செலுத்த வேண்டாம் எனத் தடுக்கிறாய். இதுதானா உன் வீரம்? இனியும் உன்னை நம்பிப் பயனில்லை. நானே வீடுமரை எதிர்த்துப் போர் செய்கிறேன்'' என்பதாகக் கூறி அர்ச்சுனனுடைய பதிலுக்காகவும் காத்திராமல் தம்முடைய சக்ராயுதத்தை ஏந்தித் தேரிலிருந்து தரையில் குதிக்கிறார் கண்ணபெருமான்.

(தொடரும்)

# திருமந்திர உபதேசம்

திருமந்திரச்செல்வர் டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)

திருமந்திரத்தில் முதல் தந்திரத்தில் உபதேசம் என்கிற பகுதியில் வரும் முதல் இரண்டு பாடல்களில் திருமூல நாயனார் சிவபெருமான், மேல் நிலையில் இருந்து இறங்கி, தமது உண்மை நிலையினை மாற்றிக் கொண்டு, தமது சக்தியை இயக்குவித்து, உயிர்களின் உய்திக்காக, அருளாட்சி செய்கிறார் என்று விளக்கினார்.

இறைவன் சொரூப நிலையில் (தன் உண்மைநிலை) ஒருவனாக உள்ளமையும், சார்புடைய நிலையில் (தடத்த நிலையில்) உயிர்களை நடத்திச் செல்ல அவைகளுடன் கலந்து இருக்கும் தன்மையையும் அருளாளர்கள் தத்துவங்களாக பல வகைகளில் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

சிவப்பரம்பொருள் ஒன்றே ! ''சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை; அவனொடு ஒப்பார் இங்கும் யாவரும் இல்லை'' என்று திருமூலர் பெருமான் தெளிவாக்கி விட்டார்.

கடவுள் என்பது வெறும் கற்பனைப் பொருள் அல்ல. கடவுளின் தன்மைகளையும் பண்புகளையும் கோடிட்டுக் காண்பிக்கும் போது கற்பனைக் கெட்டாத தன்மையனாகப் பேசினாலும், மனதிற்கும் அறிவுக்கும், வாக்கிற்கும், தர்க்கத்திற்கும் அப்பால்பட்ட பொருள் என்றிருந்தாலும் தமிழினம் தொன்று தொட்டு நிலை நாட்டிவருவது கடவுள் ஒரு அனுபவப் பொருள் என்பது தான்.

புலன்கள் வழியாக அனுபவமும் அறிவும் பெறப்பட்டாலும், கடவுள் அனுபவம் எனப்படுவது உணர்வு நிலையில் பெறப்படுவது என்று தெளிவுபடுத்தி இந்த உணர்வு என்பது உயிரின் தெளிந்த நிலை என்றும் அருளாளர்கள், தோத்திரங்களிலும், சாத்திரங்களிலும் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

**''உணர்வும் அவனே உயிரும் அவனே''** என்கிறார் திருமூலர்.

**''சிந்தை தெளியத் தெளிய வல்லார்கட்குச்**
**சிந்தை யினுள்ளே சிவன் இருந்தானே''**

என்பதும் திருமூலருடைய அனுபவ விளக்கம்.

சிவபெருமான் வாக்கும், மனமும் ஒடுங்கிய நிலையில் மறைந்திருந்து தோன்றும் பொருள். ஆகவே அவனை நோக்குவதற்கான ஒழுக்கங்களைச் சரிவர மேற்கொள்ளுங்கள். அப்போது அவன் மிக நுண்ணிய பொருளாக வெளிப்படுவான். அவ்வாறு உங்கள் அனுபவத்திற்கு வந்த பிறகு அவன் போவதில்லை. புதியதாகப் புகுவதும் இல்லை. அவனுக்கு என்றும் அழிவில்லை. எனவே தோற்றமும் இல்லை. அவனை நன்கு பார்த்து, நமதாக்கிக் கொண்டால் நன்மைகள் பலவும் பெறலாம். இவ்வாறு அறிவுரை வழங்குகிறார் திருமூலர் பெருமான்.

**''வாக்கும் மனமும் மறைந்த மறைபொருள்**
**நோக்குமின் நோக்கப்படும் பொருள் நுண்ணிது**
**போக்கொன்றும் இல்லை வரவில்லை கேடில்லை**
**ஆக்கமும் அத்தனை ஆய்ந்து கொள்வார்க்கே''**

(திருமந்திரம்)

இவ்வாறு நோக்கப்படும் பொருள் எத்தகையது? ''பதி அனாதி'' என்றார். ஆதியும் அந்தமும் இல்லாதது. எல்லா பொருள்களையும், எல்லா உயிர்களையும், எல்லா கடவுளர்களையும் சங்கார காலத்தில் தன்னுள் ஒடுக்கிக் கொள்ளக் கூடிய எல்லாவற்றிற்கும் மேலானவன்.

எல்லாவற்றையும் கடந்த நிலையில் உள்ளான். ஆயினும், எல்லா உலகங்களிலும் நிறைந்து நின்று, உயிர்களை இறப்பு-பிறப்பு ஆகிய சூழலிலிருந்து விடுவிக்க அருள்புரிகின்றான். அளப்பதற்கரிய ஆற்றல்களைக் கொண்டவன். தானே எல்லாவற்றையும் அறியும் அறிவுடையவன்.

பிறர் அறிவித்து, அவன் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை அனைத்து பொருட்களுக்கும் ஆதாரமாக நின்று, அவற்றைத் தாங்குபவன். உயிர்களுடைய மலங்களை, அவை அறியாமலேயே மாற்றும் ஆற்றலுடையவன்.

**''பரனாய்ப் பராபரனாகி அப்பாற்சென்று**
**வரனாய் வழக்கற ஒண்சுடர் தானாய்த்**
**தானாய்த் தனாதென ஆற்ற வொண்ணா**
**அரனாய் உலகில் அருள் புரிந்தானே''**

இவ்வாறெல்லாம் சொல்லும்போது சிவபெருமானை அறிவினால் கண்டு கொள்ள முடியும் என்று கருதினால், அதுவும் சரியாகாது. பார்ப்பவர்களுடைய பக்குவம், பார்க்கும் பொருளுடைய தன்மையைத் தெளிவுபடுத்துகிறது. சிவமாம் தன்மையைப் பெற்ற அருளாளர்கள் உலகத்தையும் சிவமாகவே பார்க்கிறார்கள். அவர்கள் சதாசிவ நிலையைக் கடந்தவர்கள், நம்மைப் போன்றவர்கள். தத்துவபரீதியாகக் கருதும், உருவ, அருஉருவ, அருவநிலைகள் அருளாளர்களுக்கில்லை. நிட்கலம் என்பது அருவத்திருமேனி சகலம் என்பது உருவத்திருமேனி. சதாசிவன் அருஉருவத் திருமேனி கொண்டவன்.

சிவத்துடன் கலந்த சான்றோர்கள் இந்த நிலைகளையெல்லாம் தன்முள் அனுபவமாகப் பெற்றவர்கள். பாவனையல்லாத, உண்மைப் பொருளாக ஒரு அதிசய பொருளாக - அனுபவப் பொருளாக சிவபெருமான் விளங்குவான் என்கிறார்

திருமூலர். ''அனுபவக் காமம் போல் கற்பனையின்றிக் கலந்து நின்றானே'' என்கிறார் திருமூலர்.

இன்பத்தை கற்பனை செய்து கொள்ளலாம். அனுபவிக்கவும் செய்யலாம், இறை இன்பம் அனுபவ வகைப்பட்டதாயிற்றே!

**''தற்பர மல்லன் சதாசிவன் தானல்லன்**
**நிட்கள மங்லன் சகள நிலையல்லன்**
**அற்புதமாகி அனுபவக் காமம் போல்**
**கற்பனையின்றி கலந்து நின்றானே''**

(திருமூலர்)

அனுபவம் என்றும், அனுபவிக்கப்படும் பொருள் என்றும் இருந்தால் அனுபவிக்கும் பொருள் என்று ஒன்று அமைய வேண்டும். அதுதான், இங்கு, பசுவென்று சொல்லப்படுகின்ற உயிர் அல்லது ஆன்மாவகும்.

ஆதியும் அந்தமும் இல்லாத பரம் பொருளை அனுபவிக்க ஒரு பொருள் வேண்டுமென்றால் அதுவும் ஆதியும் அந்தமும் அற்றதாக இருக்கவேண்டும். எனவே பதியினைப்போல் பசு அனாதி என்றார். பசு அநாதி எனற காரணத்தினாலே அது பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. உடலோடு உயிர் சேர்க்கப்படும்போது பிறப்பென்றும், உடலை விட்டுப் பிரியும் போது இறப்பு என்றும் நடைமுறைப்படுத்தி விட்டோம்.

பாசத்தால் கட்டப்பட்டது பசு. ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களே பாசத்தின் கூறுகளாகும். ஆண்வம் மூலமலம், சகசமலம் என்றும சொல்வார்கள். என்று உயிர் இருந்ததோ அன்று முதல் ஆணவம் உயிரைக் கட்டுப்படுத்தி விட்டது. ஆணவ பந்தத்தால் உயிர் தனது வியாபக நிலையை இழந்து அணுத்தன்மை எய்தி விட்டது. அப்போது தன்நிலைமறந்து, தன் முனைப்பை வளர்த்துக் கொண்டு தனது தலைவனையும் மறந்து, உயிரானது தன் இச்சையால் செயல்பாட்டில் இறங்குகிறது. அதுவே கன்மம்.

செயல்களுக்கு ஏற்ப பயனையையும் துய்த்தாக வேண்டும். துய்ப்புக்கு உதவும் வகையில் மாயையால் செதுக்கப்பட்ட உலகப் பொருள்களும் உதவத் தொடங்குகின்றன. அதுவே மாயை. கன்மமும், மாயையும் மலங்கள்தான். ஆகந்துக மலம் என்பார்கள். ஏனெனில் அவை உயிரைப் புலன் வழி செலுத்தி உலகத்தோடு இணைத்து, பொய்யை மெய்யாகக் கருதும்படி தூண்டுகின்றன. இருந்த போதிலும், கன்மம் மாயை ஆகியவற்றின் சேர்க்கையால் உயிருக்கு சிறிது வெளிச்சம் கிடைக்கின்றது. எனவே இவற்றை ''மாயாதனு'' என்பார்கள். இருந்தாலும் அவை பசுவாகிய உயிரை இறைவனிடமிருந்து அகற்றி இறைவனை மறைய வைக்கின்றன. எனவே, திருமூலரும்

**''மாயை மறைக்க மறைந்த மறைப் பொருள்**
**மாயை மறைய வெளிப்படும் அப்பொருள்''**

(திருமந்திரம்)

என்றார். பசு என்பது என்ன? திருமூலர் வேடிக்கையாகப் பதில் சொல்கிறார். பசுமாடு ஒன்றின் மயிரை எடுத்து, அதனைப் பல நூறு ஆயிரம் கூறுகளாக வெட்டிப் பிரித்தால் அவற்றின் ஒரு கூற்றின் அளவே உயிரின் அளவாகும். இது ஒரு வேடிக்கையான பதில், நம்மை சிந்திக்க வைக்கச் சொன்னபதில். இந்த நீள, அகல, கன அளவுகள் பருப்பொருளுக்கானவை. நுடபமான பொருள் நிலையில் இந்த அளவுகள் பொருந்தாது.

இது எதைக் காட்டுகிறது? பசு என்பது பருப்பொருள் அல்ல, அது ஒரு அதி சூக்கு மப்பொருள். நீள, அகல, கன அளவுகளால் உயிருக்கு உருவம் சமைக்க முடியாது.

உயிரின் தன்மையை எப்படி அடையாளம் கண்டுகொள்வது. இங்கே சான்றோர்கள் எல்லோரும் நமக்கு எடுத்து அருள்வது பசு அல்லது உயிர் ஒரு அறிவுப் பொருள், உயிர் அறிவு வடிவம். ஆணவச் சேர்க்கை காரணமாக இதை நாம் அறிந்து கொள்வதில்லை இறைவனுடைய திருவருளால் தான் இந்த உண்மை உள்ளத்தில் புலனாகிறது. தன் முனைப்பு நமக்குத்தரும் அறிவு அறிவாகாது. உண்மை அறிவு என்பது உயிரின் நிலை. அந்த அறிவு நிலைபேறுடைய அறிவு அதற்கு அழிவும் இல்லை. ஆக்கமும் இல்லை. இந்த அறிவே உயிரின் அறிவாகிறது. இந்த அறிவே அறிவுக் கருவிகளுக்கு அறிவிக்கவும் செய்கிறது. உயிர் என்றால் என்ன என்று பிறர் கேட்கும் போது அது ஒரு அறிவுப் பொருள் என்றே விடை கூற வேண்டும்.

**''அறிவு வடிவு என்று அறியாத என்னை**
**அறிவு வடிவு என்று அருள்செய்தான் நந்தி**
**அறிவு வடிவு என்று அருளால் அறிந்தேன்**
**அறிவு வடிவு என்று அற்ந்திருந்தேனே''**

(திருமந்திரம்)

**''அறிவுக் கழிவில்லை ஆக்கமும் இல்லை**
**அறிவுக் கறிவல்லது ஆதாரம் இல்லை**
**அறிவே அறிவை அறிகின்றது என்றிட்டு**
**அறைகின்ற மறை ஈறுகள் தாமே''**

(திருமந்திரம்)

(தொடரும்)

## கார்அடையான் நோன்பு

கணவனும் மனைவியும் என்றும் இணை பிரியாதிருக்க வரம் வேண்டி நோற்கப்படும் நோன்பு கார்அடையான் நோன்பு ஆகும்.

மாசி மாதம் முடிவுற்று பங்குனி ஆரம்பமாகும் நாளில் மாங்கல்ய பலம் வேண்டி மாதர் நோற்கும் நோன்பாகும் இது.

கற்பிற் சிறந்த சாவித்திரி தன் கணவன் சத்தியவானின் உயிரை மீட்டது இந்நாளே ஆகும்.





### தாமிரபரணி நதி ஓரம் அமைந்த

# நவ திருப்பதிகள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

நவதிருப்பதிகளில் நான்காவது இடம் பெறும் திருப்புளியங்குடி ஸ்ரீவைகுண்டம் தூத்துக்குடி சாலையில் திருவரகுணமங்கைக்குக் கிழக்கே ஒரு கி.மீ. தொலைவில் உள்ளது.

இங்கு மூலவர் பூமி பாலகர், தாயார் ஸ்ரீமலர் மகள் நாச்சியார், ஸ்ரீ நிலமகள் நாச்சியார்.

உற்சவருக்குக் காய்சினவேந்தர், காசினி வேந்தர் என்பது திருநாமம்.

குழந்தைப் பேறு வேண்டி அருள்மிகு பூமி பாலரிடம் வேண்டிக் கொண்டால் உடனே பலன் கிடைக்கும் என்பது இத்திவ்விய தேசமகிமையாகும்.

நவதிருப்பதியில் ஐந்தாவது இடத்தைப் பெறுவது திருக்குருகூர் என்ற ஆழ்வார் திருநகரி ஆகும். ஸ்ரீ வைகுண்டத்திற்குக் கிழக்கே 5 கி.மீ. தொலைவில் உள்ள இந்தத் திருத்தலம்தான் நம்மாழ்வார் அவதாரத்தலம் ஆகும்.

ஆதியில் முதன் முதலில் தோன்றிய தலம் என்பதால் ஆதிசேத்திரம் என்ற பெருமை கொண்டது இத்திருத்தலம் ஆகும்.

பிரம்மாவிற்குக் குருவாகத் திருமால் உபதேசம் செய்தபடியால் குருகூர்.

திருமகள் வழிபட்ட தலம் ஆதலால் திருநகரி. நம்மாழ்வார் தோன்றிய மகிமை கொண்ட தலம் ஆதலால் ஆழ்வார் திருநகரி.

வராக அவதாரம் எடுத்துப் பூமியைத் தோண்டிச் சென்ற வராகப் பெருமாள் கோயில் கொண்ட ஊர் ஆகையால் வராகசேத்திரம்.

ஆதிசேடன் உறங்காப் புளியாக வாழ்வதால் சேஷசேத்திரம்.

இவ்வாறு பலவேறு திருநாமங்களைக் கொண்டுச் சிறப்புறத் திகழும் இத்திருத்தலத்தை வழிபடுவது அநேக கோடி புண்ணியங்களைத் தரும் என்பது திண்ணம்.

நம்மாழ்வார் பூத உடலும் இங்குப் பள்ளிப் படுத்தித் தனிச் சந்நிதியாகத் திகழ்வது யாவரும் தரிசிக்க வேண்டிய அற்புதமாகும்.

நவதிருப்பதியில் ஆறாவது இடம் பெறுவது தென் திருப்பேரை. ஆழ்வார் திருநகரிக்குக் கிழக்கே 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

மூலவர் மகர நெடுங்குழைக்காதர், தாயார் திருப்பேரை நாச்சியார் மற்றும் குழைக்காதர் வல்லி.

துர்வாசமுனிவர் தரிசிக்க வந்தபோது திருமாலின் மடியில் அமர்ந்திருந்த பூமிதேவி துர்வாசமுனிவரை மதிக்காமல் இருந்தபடியால் பூமிதேவி பொலிவின்றிப் போகச் சபித்து விட்டார் துர்வாசர்.

சாபவிமோசனம் பெற பூமிதேவி தாமிரபரணி நதிக்கரையில் தவம் செய்தபோது ஆற்றில் இரண்டு மீன் வடிவமுள்ள பொற் குண்டலங்கள் கிடைத்தன.

பூமிதேவியிடம் இருந்து இரண்டு குண்டலங் களையும் வாங்கித் தம் காதுகளில் அணிந்து கொண்ட பெருமாள் மகர நெடுங்குழைக்காதர் ஆனார். பூமிதேவியும் பழைய பொலிவு பெற்ற படியால் திருப்பேரை என்ற நாமம் கொண்டார்.

ஸ்ரீவைகுண்டம் - தூத்துக்குடி சாலையில் திருப்புளியங்குடிக்குக் கிழக்கே இரட்டை திருப்பதி என அழைக்கப்படும் தொலைவில்லி மங்கலம் அமைந்து விளங்குகின்றது.

தொலைவில்லி மங்கலத்தில் வடக்குக் கோயில், தெற்குக் கோயில் என இரு திவ்விய தேசங்கள் உள்ளன.

வடக்குத் திருக்கோயிலின் மூலவர் ஸ்ரீஅரவிந்தலோசனர், தாயார் கருந்தடங்கண்ணி, தொலைவில்லி மங்கலத்தாயார்.

தெற்குக் கோயிலின் மூலவர் தேவர்பிரான், தாயார் திருமகள் நாச்சியார், நிலமகள் நாச்சியார்.

வடக்குத் திருக்கோயிலின் மூலவரான ஸ்ரீஅரவிந்தலோசனரைத் தாமரை மலர்களால் அர்ச்சித்து வழிபட்டால் வேண்டிய வரங்களை வேண்டியவாறே பெறலாம் என்று தலவரலாறு கூறுகின்றது.

குபேர சாபத்தால் தராசாகவும் (துலை) வில்லாகவும் மாறிய இரு தேவர்கள் : ஆத்ரேய சுப்ரபர் என்ற ரிஷி யாகம் செய்ய மண்ணைத் தோண்டிய போது அவை ஆணாகவும், பெண்ணாகவும் மாறிய திருத்தலம் இது ஆதலால் தொலைவில்லி மங்கலம் என வழங்கப்படுகின்றது.

ஆத்ரேய சுப்ரபர் யாகத்தை வெகு விமர்சையாக நடத்தி அதில் திரண்டு வந்த பலனை அவிர்ப்பாகமாகத் தேவர்களுக்குக் கொடுத்தார். திருமால் தேவர்களுக்குக் காட்சி அளித்தபடியால் மூலவர், தேவர்பிரான் என அழைக்கப்படுகின்றார்.

பூமிக்கு அதிபதியாகிய இந்திரன், நீருக்கு அதிபதியான வருணன், காற்றிற்கு அதிபதியான வாயு ஆகியோர் இத்திருத்தலத்தில் திருமாலின் காட்சி பெற்று மாட்சி பெற்றுள்ளதாகத் தலவரலாறு கூறுகின்றது.

நவதிருப்பதியில் ஒன்பதாவது இடத்தைப் பெற்றுள்ளது பெருங்குளம் என்ற திருக்குளந்தை தலமாகும்.

ஸ்ரீவைகுண்டம் - தூத்துக்குடி சாலையில் உள்ளது.

இத்திவ்விய தேசத்தில் வசித்து வந்த வேத சாரண்- குமுதவல்லி தம்பதியினரின் தவப் புதல்வியான கமலாவதி பெருமாளையே மணம் புரிவேன் என்று தவம் புரிந்து மூலவரான வேங்கட வாணரைத் திருமணம் கொண்டு அவர் மார்பில் இடம் பெற்று விளங்குவதாகத் தலவரலாறு கூறுகின்றது.



# பெரியது எது?

**டாக்டர் பு.ஏ. இராமையா,இ.ஆ.ப.,**
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை,
தலைமைச் செயலகம்

உலகம் தோன்றிய நாள் முதல் இன்று வரை பெரியது எது? சிறியது எது? என்ற வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்து கொண்டே தான் இருக்கின்றன. நான் பெரியவன், நீபெரியவன் என்ற ஆணவமும் மனித வாழ்க்கையின் அடி நாதத்தையே அசைத்துக் கொண்டிருப்பது இன்று வரை நடந்து கொண்டு தானிருக்கிறது.

மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் கணக்கில் அடங்கா கருவூலங்களையும் வைத்திருப்பவன் தான் இச்சமுதாயத்தில் பெரியவன் என்று மதிக்கப்படுகிறான்.

விழுமிய குணங்கள் பல அமையப் பெற்று இருந்தாலும் பொருள் இல்லாதவன் சமுதாயத்தில் புறக்கணிப் படுகிறான். அவனைச் சிறியவன் என்று இந்த உலகம் எள்ளி நகையாடுகின்றது. பெரியவன் எவன்? சிறியவன் எவன்? பெரியது எது? சிறியது எது? என்று காண்பதற்கு வழியானது தெய்வ ஞானிகளால் உலகத்திற்கு அறிவிக்கப்பட்டும் கூட இன்றும் அந்த ஏற்றத் தாழ்வுகள் மனித வர்க்கத்தை மாசு படுத்திக் கொண்டே தான் இருக்கின்றன.

உலகம் எல்லாம் உவந்து ஏற்றுக் கொள்ளக் கூடிய கந்தபுராணம் சிவநூல் ; இராமாயணம் அன்பு நூல்; மகாபாரதம் அறநூல்; சிலப்பதிகாரம் விதி நூல்; சிந்தாமணி இன்ப நூல்; பெரியபுராணம் அருள் நூல்.

இந்த அருள் நூலைப் பாடிய இறையனார் சேக்கிழார், பெரியவன் யார்? சிறியவன் யார்? என்பதை மிகவும் தெளிவாக உலகிற்குப் பறைசாற்றியதாக வரலாறு ஒன்று உண்டு.

சோழ வள நாடு சோறுடைத்து என்று சொல்லக்கூடிய சீர் மிகுந்த நன்னாட்டில் அநபாயச் சோழன் என்ற மாமன்னன் ஆண்டு வந்தான். அன்பும் அறநெறியும் வாய்மையும் தூய்மையும் கொண்ட அம் மாமன்னனிடம் சேக்கிழார் பெருமானின் தந்தையார் அமைச்சராக இருந்தார். அம்மன்னனுக்கு அளவில்லாத அரசஞானம் இருந்த போதும் கூட மலையினும் பெரிது எது? உலகினும் பெரியது எது? கடலினும் பெரியது எது? என்ற வினாக்களுக்கு விடை தெரியாமல் அந்த வினாக்களுக்கு விடை காண வேண்டுமாய் அமைச்சரைப் பணித்தார்.

அமைச்சரோ வீட்டிற்கு வந்து விடை பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தார். ஆனால் தெளிவானவிடை கிடைக்காமல் திகைத்துக் கொண்டிருந்தார். அவர் முகம் வாட்ட முற்றிருந்தது. அருண்மொழித்தேவர் என்ற இயற்பெயர் படைத்த சேக்கிழார் தன் தந்தையின் வாட்டத்தைக் கண்ணுற்று மிகவும் கலங்கியவராய் தன் தந்தையிடம் சென்று அவரது மனச்சஞ்சலத்திற்கான காரணத்தை வினவினார்.

தந்தை தனயனிடம் தான் மனதில் வைத்து சிந்தித்துக் கொண்டிருந்த அந்த வினாக்களை தெரிவித்தார். அதைக் கேட்ட சேக்கிழார் புன்முறுவலுடன் ஏடும் எழுத்தாணியும் கையில் எடுத்து திருவள்ளுவப் பெருமானின் திருக்குறளின் மூன்று குறட்பாக்களை விடையாக எழுதி தந்தையிடம் கொடுத்தார்.

சேக்கிழார் பெருமானின் தந்தையார் அந்த விடைகளை அரசபெருமானிடம் கொடுத்தார். விடையைப் படித்த அம்மன்னன் வியந்தார். அமைச்சரைப் பெரிதும் பாராட்டினார். இப்பாராட்டைப் பெற்ற அமைச்சர் அரசனிடம், அரசே, இந்த விடை அடியேன் கண்ட விடை அல்ல. எனது புதல்வன் அருண்மொழித்தேவன் கண்ட விடை என்றார். இதைக் கேட்ட மன்னன் அதிசயித்து எல்லா வகையான விருதுகளும் கொடுத்தனுப்பி அவரை வரவழைத்து மிகவும் உபசரித்து அவருக்கு முதன் மந்திரி பதவி அளித்ததாக வரலாறு சொல்லுகின்றது. எது பெரியது என்பதை,

**''நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப்பெரிது''** *(124)*

**''காலத்தி னாற்செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது''** *(102)*

**''பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**



நன்மை கடலிற் பெரிது'' (103)

என்னும் பாக்கள் மூலம் மிகவும் அருமையாக எடுத்து உரைக்கின்றார்.

அது போல செந்தமிழ்க்கிழவிக்கும், தமிழ்க் குழவியாம் முருகனுக்கும் இதுபோன்ற ஒரு தர்க்க வாதம் ஏற்பட்டது. அப்பொழுது முருகபெருமான் தாயே உலகில் பெரியது எது என்று ஒளவையிடம் வினவினார்.

''பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது''

என்றார் ஒளவைப் பெருமாட்டியார்.

முருகப் பெருமான் அதனைக் கேட்டு, ''ஓ ! புவனந்தான் பெரியதோ?'' என்றார்.

''புவனமோ நான்முகன் படைப்பு'' என்று தமிழ்க்கிழவி கூறினார்.

அப்படியானால், நான்முகன் தான் பெரியவனோ என்று வினவினார் முருகவேள்.

இல்லை, ''நான்முகனோ கரியமால் உந்தியில் வந்தோன்'' என்று தமிழ்ப்பாட்டி கூறினார்.

ஓ ! அப்படியாயின் கரியமால் பெரியவரோ? என்று கேட்டார், தமிழ்க் கடவுள்.

இல்லை, இல்லை ''கரியமாலோ அலைகடல் துயின்றோன்'' என்று கூறினார் ஒளவையார்.

அலைகடல் பெரியது என்று கூறுகின்றாயா? என்று கேட்டார் செந்தமிழ்ப் பிரியர்.

இல்லை, கடலையும் குறுமுனி உண்டாரோ என்று ஒளவையார் கூறியதும், குறுமுனி பெரியவரோ? என்று கேட்டார் முருகவேள்.

இல்லை, ''குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்'' என்று ஒளவையார் கூறினார்.

''கலசம் பெரியதோ?''

கலசமோ புவியிற் சிறுமண்.

புவி பெரியதா?

புவியும் உலகைத் தாங்கும் அரவினுக்கு ஒரு தலைப்பாரம் தானே?

அப்படியா? அரவமாகிய ஆதிசேடன் தான் பெரியவனோ?

அதுவும் இல்லை. அந்த ''அரவம் உமையவள் சிறுவிரல் மோதிரம்'' தான்.

பின்னே பெரியவர் யார்? உமையவள் பெரியவளோ ? என்று வினவினார் வேலவர்.

அப்படியும் இல்லை. ஏனெனில், ''உமை இறைவர் பாகத்து ஒடுக்கம்''.

அவ்வாறாயின், இறைவர்தாமே பெரியவர்? என்றார் இளம்பூரனர்.

இல்லை, இல்லை. ''இறைவரோ, தொண்டருள்ளத்து ஒடுக்கம், தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!'' என்றார் ஒளவைார்.

அடியார்களின் பெருமையே அளவிட முடியாதது. பதினாயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகளைக் கொண்ட இராமாயணம், பாரதம், கந்தபுராணம் என்று நூல்களுக்குப் பெரிய புராணம் என்று பெயர் வரவில்லை. சுமார் நாலாயிரம் பாடல்கள் உள்ள திருத்தொண்டர் புராணத்துக்கே பெரிய புராணம் என்று பெயர் வந்தது. உலகிலே எல்லாவற்றைக் காட்டிலும் பெரிது அடியார் பெருமையே!

உயர்ந்தது எது தாழ்ந்தது எது என்று சங்க இலக்கியமான புறநானூறிலும் விடை கூறப்பட்டுள்ளது. ஒரு பொருளைக் கொடு என்ற இரப்பது இழிந்தது. அவ்வாறு இரந்தோர்க்கு ஈயேன் என்று மறுப்பது, அதைவிட இழிந்தது. பெற்றுக் கொள் என்று இல்லாதவனுக்கு கொடுப்பது உயர்ந்தது. அவ்வாறு கொடுத்ததை வேண்டாம் என்று மறுப்பது அதைவிட உயர்ந்தது. அதனைப் புறநானூறு,

''ஈஎன இரத்தல் இழிந்தன்று; அதன்எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்றுஃ
கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன்எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று''

என்று அழகாக எடுத்தியம்புகின்றது. ஒளவைப் பெருமாட்டியார்,

''சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையில் மேதினியில்
இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி''

என்று நல்வழியில் உலக நியதியைப் பறைசாற்றுவார். ஆக நற்குணங்கள் என வகைப்படுத்தப்படும் ஈகை, கருணை, கொடை, அன்பு, இரக்கம், பிறன்கேடு சூழாமை போன்ற குணங்கள் எல்லாம் தான் உலகில் பெரியது என்று அறிஞர்களும் வரலாறுகளும் வரையறுத்துக் கூறி உள்ளன.

## மனிதருக்கு மட்டும் நரை ஏன்?

வேறு எந்தப் பிராணிக்கும் இல்லாத நரையை உனக்கு இறைவன் தந்தது எதன் பொருட்டு என்று சற்றுச்சிந்தித்துப்பார்.



ஏனைய பிராணிகள் உண்பதற்கும் உறங்குவதற்கும் மட்டுமே ஏற்பட்டவை.

மனிதனாகிய நீ உன்னில் உறையும் உத்தமனை அடைய வந்தாய்.

அதை மறந்தவர்க்கு ஓர் உணர்ச்சி வரும் பொருட்டே இறைவன் நரையைத் தந்தான். நரைக்கத் தொடங்கும் போதாவது உன் ஆவி ஈடேறும் நெறியிற் செல்.

- அருளரசு டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

# தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - கொங்கணச் சித்தர்

**கொங்கு மண்டலம்:**

கொங்கணச் சித்தர் போகரின் மாணாக்கருள் ஒருவர். மூன்றாக இருந்த தமிழ் மண்டலம், திருமூலர் காலத்தில் ஐந்தாக இருந்தது. 'தமிழ் மண்டலம் ஐந்தும்' என்பது அவரது பதிவு. அவ்வைந்துள் ஒன்று கொங்கு மண்டலம். அது சேர நாட்டின் ஒரு பகுதி என்பது தெளிவு.

பல, பெருங்கவிஞர்களும், அருளாளர்களும் அவதரித்த திருமண் அது. கொங்கு மண்டலத்தில், ஊதியூர் மலையில் வாழ்ந்திருந்த இவர் கொங்கணர் என்று அழைக்கப் பெற்றார். சித்தர்களுக்கே உரிய இரசவாதத்தில் இவர் வல்லவராகத் திகழ்ந்தார். சமகாலத்தில் ஏனைய சித்தர்களும் வியக்கவல்ல அட்டமாசித்திகள் கைவரப் பெற்றவராக இவர் வாழ்ந்திருந்தார்.

**வரலாற்றுப் பார்வை:**

தம் மீது எச்சமிட்ட ஒரு கொக்கினை, இவர் சினந்து நோக்க அது எரிந்து சாம்பலானது. இதே சினத்தை இவர் ஒரு பத்தினிப் பெண்ணிடம் காட்டியபோது, இவர் ஆற்றல் பிழைத்தது.

**''கொக்கென நினைத்தாயோ கொங்கணவா''**

என்று அப்பெண் உரைத்தபின், சினம் நீங்கி,





ஞானம் தலைப்பட்டார் இவர் என்று ஒரு செவி வழிக் கதை கேட்கப்படுகிறது.

வள்ளுவரின் துணைவியார் வாசுகி என்பாரிடம் இவர் செருக்கடங்கினார் என்றும் ஒரு கதை உண்டு. வள்ளுவர் காலத்துக்குப் பிற்பட்டவர் இவர் என்பது உறுதி. எனவே, அக்கதை ஏற்குமாறு இல்லை. கொங்கு மண்டல சதகம் இவர் வரலாறு குறித்து சில பதிவுகளைக் கொண்டுள்ளது. சென்னையை அடுத்த திருமழிசையில் அவதரித்த திருமழிசைஆழ்வாருடன், இவர் நட்பு பூண்டு ஒழுகினார் என்று கூறப்படுகிறது. இதனை உறுதி செய்தால், இவர் காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு என்பது உறுதியாகும்.

**நூல்கள்:**

கொங்கணச் சித்தர் 'புளிஞர்' என்று அழைக்கப்படும் மலைவாழ் இனத்தினர் என்று தெரிகிறது. தஞ்சாவூர், மேலை வீதியில் கொங்கணேஸ்வர் ஆலயம் என்று பெயரில் சிவாலயம் ஒன்று உள்ளது. இவ்வாலயச் சிவலிங்கம் கொங்கணச் சித்தரால் எழுந்தருள்விக்கப் பெற்றது என்பர். இவர் இயற்றியனவாகப் பல நூல்களும், சில தனிப் பாடல்களும் கிடைத்துள்ளன. கொங்கணர் வாலைக் கும்மி, கொங்கணத் தேவர் மாலை, கொங்கணர் தியானம், கொங்கணர் வாக்கியம், துருசு குரு முப்பத்தொன்று, கொங்கணர் குளிகை, கொங்கணர் ஞானம் நூறு, கொங்கணர் திரிகாண்டம், கொங்கணர் கடைக் காண்டம், முப்பூதீட்சை, குணவாகடம் என்பன குறிக்கத் தக்க இவர் படைப்புக்கள். வாலைக்கும்மியும், குணவாகடமும் பெரிதும் தமிழ் மக்களுக்கு அறிமுகமானவை. இவர் நூல்கள் மருத்துவம், இரசவாதம், யோகம் குறித்த அரிய செய்திகளைத் தாங்கியுள்ளன. கொங்கணச்சித்தர், கொங்கண நாதர், கொங்கணதேவர் என இவர் பலவாறு அழைக்கப்படுகிறார்.

**வாலைக்கும்மி:**

கொங்கணர் நூல்களுள் சிறந்த ஒன்று வாலைக்கும்மி. இதனுள் 111 கும்மிப் பாடல்கள் அமைந்துள்ளன. வாலை என்பது உமையம்மையைக் குறித்து வரும் சித்தர் மரபுக் குறியீடாகும். நூலின் தொடக்கத்தில் விநாயகர் காப்பு ஒன்று காணப்படுகிறது. வெண்பா யாப்பில் அமைந்த அரிய பாடல் இது.

**''கல்வி நிறை வாலைப்பெண் காதலியென்**
**றோதுகின்ற**
**செல்வியின் மேல் கும்மிதனைச்**

# இடபாரூடமூர்த்தி

திருமாலின் விருப்பப்படி அவரை இடப வாகனமாக்கிச் சிவபெருமான் தம் தேவியுடன் வீற்றிருக்கும் மூர்த்தி இடபாரூட மூர்த்தி ஆகும்.

திருவாடுவதுறையில் உள்ள இடபாரூட மூர்த்தியை அபிடேகம் செய்து வழிபட்டால் பொற்கிழி பெறலாம்.



செப்புதற்கே - நல்விசய
நாதனின் சொல் வேதனைஞ்சு போதன்
மிஞ்சி மானகஞ்ச
பாதம் வஞ்சநெஞ்சினில்வைப் போம்.''

தொடர்ந்து, சரஸ்வதி, சிவன், முருகன், திருமால், நந்தீசர் துதிகள் அமைந்துள்ளன. எட்டாவது பாடல் முதலாகக் கும்மி நூல் தொடங்கி நடையிடுகிறது. கலைமகளைக் கொங்கணச்சித்தர்,

**''தத்தமித் தோமென ஆடும் சரஸ்வதி பத்தினி''**

எனக் குறிக்கிறார். சரஸ்வதி என்ற முதல் ஆட்சியாக இது அமைகிறது. சிவனை,

**'கங்கையணி சிவ சம்புவாம் சத்குரு'**

எனச் சித்தர் போற்றுகிறார். முருகப் பெருமானை இவர்

**'மானைப் பெண்ணாக்கிய வள்ளிக்**
**இசைந்திடும் மால்முருகேசன்'**

என்கிறார். 'காண்டீபமாம் பணிபூண்டவன்; வைகுந்தம் ஆண்டவன்' என்று திருமால் போற்றப்படுகிறார்.

**'சிந்தையில் முந்திநல் விந்தையாய்**
**வந்திடும் நந்தீசர்'**

என நந்தியம்பெருமான் சுட்டப்படுகிறார்.

**வாலை சிறப்புரைத்தல்:**

தில்லையின் எல்லையில் உமை ஆடிய ஆட்டம்; யாதொரு பற்றுக் கோடுமின்றி அன்னை உலகைப் படைக்கும் ஆற்றல்; வாலைப் பெண் சத்தியாகவும், சடாதரியாகவும் திகழ்பவள்; சித்தர்களால் போற்றி வணங்கப்படுபவள்; எங்கும் நிறைந்தவள்; ஞானப்பெண்; அருள் சோதிப் பெண்; ஆண்டிப் பெண்; இராசபாண்டிப் பெண்; அந்தரி, சுந்தரி என்றெல்லாம் அம்மையை இந்நூல் பலபட அடையாளப்படுத்திப் போற்றுகின்றது. சைவத்தின் உன்னதமான ஐந்தெழுத்தும் அம்மையும் வேறெல்லர் என்கிறார் கொங்கணர்.

**'ஆதியில் ஐந்தெழுத் தாயினாள் வாலைப் பெண்'**

என்றும், ஐந்தெழுத்துள்

**''ஊமைஎழுத்தே உடலாச்சு - மற்றும்**
**ஓமென் றெழுத்தே உயிராச்சு''**

என்று எடுத்துரைத்து ''ஓம் நமசிவாய'' என்பதில் அம்மை உடல் ஈறு, உயிர் ஈறு என்றும் சித்தர் அடையாளப்படுத்துகிறார்.

**'செகப் படைத்ததும் அஞ்செழுத்தாம்**
**பின்னும்**
**சிவன் படைத்ததும் அஞ்செழுத்தாம்'**

என்று எழுத்தைந்தின் சிறப்புரைக்கிறார். திருமந்திரத்தில் ஐந்தெழுத்துக் குறித்து வரும் விளக்கங்களைத் தழுவியதாகச் சித்தரின் இப்பதிவு அமைகிறது.

**உடல் பேண வேண்டுதல்:**

சித்தர்கள் பலரும் மனித உடம்பை இழிவானது என்று உரைத்தனர். திருமூலர் தான் முதன் முதல் உடம்பின் சிறப்பினை எடுத்துரைத்தார்.

**'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்'**

**'உடம்பை வளர்த்தேன் உயிர்**
**வளர்த்தேனே'**


**'உடம்பினை யான் இருந்து**
**ஓம்புகின்றேனே'**

என்றெல்லாம் வரும் திருமந்திரப் பதிவுகளை ஏற்றுப் போற்றுவார் போல் கொங்கணச் சித்தர்

**''ஊத்தைச் சடலமென் றெண்ணா தேஇதை**
**உப்பிட்ட பாண்டமென் றெண்ணாதே**
**பார்த்த பேருக்கே ஊத்தையில்**
**லைஇதைப்**
**பார்த்துக் கொள் உன்ற னுடலுக்குள்ளே''**

என்று, உடலுக்குள் உத்தமனாகிய இறைவன் உறைவதை அறியுமாறு பணித்தார்.

சித்தர் நெறிக்கே உரிய பூடகப் பகுதிகள் பல கொங்கணர் பாடல்களில் காணப்படுகின்றன. அவை பலவும் விரிவாக ஆராயப்பட வேண்டுவன. இத்தகு நன்ஞானக் கருவூலங்கள் கண்டு கொள்வாரின்றி அழிந்து வருவது கவலைக்குரியது.



# நாச்சியார் கோயில் கல் கருடன்

ஏ. கிருஷ்ணன்

**நாச்சியார் திருக்கோயில் எனும் திவ்விய தேசம்**

இத்தலம் தென் தமிழ்நாட்டில் சோழ மண்டலத்தில் உள்ளது. இதனை திருநறையூர் என்று ஆழ்வார் மங்களாசாஸனம் செய்துள்ளார் திருமங்கையாழ்வார் 100 பாசுரங்களை இத் தலத்திற்கே புகழ் பாடியுள்ளார் என்பது விசேஷ மாகும்.

**மூலவர் :** ஸ்ரீனிவாசபெருமாள் இரு திருக்கைகளில் திருவாழி, திருசங்குகளை சற்று முன் நீட்டியபடி ஏந்தி கிழக்கு முகமாய் நின்ற கோலத்தில் சேவை சாதிக்கிறார்: இவர் பிரம்மனால் நாள்தோறும் பூஜிக்கப்படுவர் என்று வரலாறு கூறப்படுகிறது.

நாச்சியார் மூலவர் பெருமாளின் வலப் பக்கத்தில் தமது வலது திருக்கையில் வரத முத்திரையுடன் இடது திருக்கையைத் தொங்க விட்டுக் கொண்டு நின்ற திருக்கோலத்தில் காட்சி அளிக்கிறார். மேலும் நாச்சியார், மூலவர் பெருமாளுடன் மூலஸ்தானத்திலேயே நின்ற திருக்கோலத்துடன் இருப்பது மற்ற எந்த திவ்ய தேசத்திலும் காண முடியாத ஒன்றாகும்.

இவருக்கு நம்பிக்கை நாச்சியார், வஞ்சுளவல்லி தாயார் என்ற திருநாமம் உள்ளது. திருநட்சத்திரம் பங்குனி மாதம் உத்திரம் ஆகும்.

**உற்சவர் நாச்சியார்**

மூலஸ்தான நாச்சியாரின் திருநாமங்களே உள்ளது. இவரது வலது திருக்கையில் கிளிச் செண்டு உள்ளது. இடது திருக்கை தொங்கவிடப் பட்டிருக்கும். மேலும் மூலஸ்தானத்தில் ஸ்ரீனிவாசப் பெருமாளுக்கு வலப்பக்கத்தில் பிரம்மன், ஸங்கர் வீணன் என்ற பெருமாளும், இடது பக்கத்தில் வரிசையாக அனிருத்தன், பிரத்யும்னன் மற்றும் சாம்பன் என்ற புருஷோத்தமன் ஆகியோர் நின்ற கோலத்தில் காணலாம். (சாம்பன் என்ற ஆழ்வார் அருளிச் செயலில் குறிப்பிடப்பட்டவர்)

**கல்கருடன் சந்நிதி :**

பக்ஷிராஜன் என்று அழைக்கப்படும் கல் கருடனுக்கு இத்தலத்தில் தனிச்சிறப்பு உள்ளது போல் வேறு எங்கும் காண இயலாது. மேலும் கருடனின் தனிக் கோயில் மூலஸ்தானத்திற்குக் கீழே மஹா மண்டபத்தில் தெற்கு நோக்கியுள்ளது. இவருக்குப் பக்ஷிராஜன், பெரிய திருவடி, புள்ளரசர், மங்களாலயன் என்ற பல பெயர்களும் உண்டு. சாளக்கிராம சிலை வடிவில் வாகன அமைப்பில் நீள சிறகும், நீள முடியும், நீண்டு வளர்ந்த திருமேனியும் கொண்டு பெருந்தோளுடனும் மிகவும் கம்பீரமாகக் காட்சி தருகிறார்.

**வரலாறு :**

ஒரு ஊரில் ஓர் சிறந்த சிற்பி ஆகம முறைப்படி ஒரு கருடன் உருவம் செதுக்கி வந்தாராம். முடிவில் இரு பக்கங்களிலும் சிறகுகளைச் செதுக்கிப் பிராணப்பிரதிட்டை செய்தாராம். உடனே உயிர் பெற்ற கருடன் வானத்தில் பறந்து விட்டாராம். உடனே அச்சமுற்ற சிற்பி தன் கையில் இருந்த கல் உளியை எடுத்துக் கருடன் மேல் எறிந்தாராம். மூக்கில் அடிபட்ட கருடன் உடனே நாச்சியார் கோயிலில் இறங்கி விட்டாராம். கலியுக வரதராய் அக்கருடன் இறங்கி அமர்ந்த இத்தலமே நாச்சியார் கோயில் கருடன் என கூறப்படுகிறது. இவரது திருநட்சத்திரம் சுவாதி ஆனதால் அன்று கருடனுக்கு அர்ச்சனை செய்து வருகிறார்கள்.

இவர் வருடம் இருமுறை பெருமாளை தாங்கியவாறு எழுந்தருளுகிறார். அவை மார்கழி திருவிழாவில் நான்காம் திருநாளும், பங்குனி மாதம் நான்காம் திருநாளுமாகும்.

இவர் பெருமாளை தாங்கிக் கொண்டு வாகன மண்டபத்துக்கு புறப்படும் நேரம், முதலில் ஸ்ரீபாதம் தாங்குவோர் மொத்தம் நால்வராகவும், பின் ஒரு பக்கத்தில் 4 பேர் வீதம் 16 பேரும் கொண்டவராகவும் பின் படிகளில் இறங்கி அருளும் போது கணக்கற்றவர்களும் ஸ்ரீபாதம் தாங்கி செல்வது காணக் கண்கொள்ளாக் காட்சி ஆகும். பின் திரும்ப எழுந்தருளியுள்ள இடத்துக்கு போகும் பொழுது ஸ்ரீபாதம் தாங்கும் ஆட்கள் போகப் போக குறைவாகக் காணுவது காணலாம்.

வரும் பொழுது கனம் அதிகமாகவும், போகும் பொழுது மிக குறைவாகவும் உள்ளது. எம் பெருமாள் இவர் மீது அமர்ந்து உலாவரும் பொழுது தாயார் வஞ்சுளவல்லியும் வெள்ளி அன்ன வாகனத்தில் உடன் எழுந்தருளுவதும் காணலாம்.

கருட ஆழ்வாருக்கு அமுதகலசம் என்ற கொழுக்கட்டைப் பணியாரம் படைத்தால் நினைத்த

காரியம் கைகூடும் என்பது கூறப்படுகிறது. மேலும் இவருக்கு புஷ்ப அலங்காரங்கள் செய்தால் எல்லா விருப்பங்களும் நிறைவேறுகின்றன. இவரது நட்சத்திரம் சுவாதி. அன்று அர்ச்சனை செய்வது மிகவும் விசேஷம்.

**அருள்மிகு சக்கரத்தாழ்வார் சன்னதி:**

இத்தலத்தில்கருடனுக்குத் தனி சிறப்பு உள்ளது போல் திருமாலின் வலது திருக்கையில் விளங்கும் சக்கரம் என்ற சக்கரத்தாழ்வாருக்கு தனி சிறப்பு உள்ளது. இவரது ஆலயம் கோவிலின் உள்ளே நான்காவது சுற்றில் காணலாம். இதன் பின் பக்கம் சிங்கப்பெருமாள் தரிசனம் காணலாம். இவரைக் காலையிலும் மாலையிலும் வழிபடுவது எல்லா நலன்களும் தரும் என்பது விசேஷமாகும்.

இவ்விடம் 5 தீர்த்தங்கள் உள்ளன. அவை மணிமுக்தாநதி, அனிருத்த தீர்த்தம், பிரத்யும்னன் தீர்த்தம், சாம்ப தீர்த்தம், சங்கர்ஷண தீர்த்தம் ஆகும். மேலும் சூரிய கிரகணம், சந்திர கிரகணம், புரட்டாசி அமாவாசை, திருவோணம் முதலிய நாட்களில் நீராடினால் மிக விசேஷமான சிறப்பாகும். இவ்விடம் தலவிருஷங்கள் மகிழமரம், அரசமரம், நீர்நொச்சி, வில்வமரம் என புனித தல விருஷங்கள் உள்ளன காணலாம். மேலும் இக்கோயிலில் 6 சுற்றுக்கள் உள்ளன. முக்கியமாக இந்தச் சுற்றுக்களில் ஆலயத்திற்கு எதிரில் பெருமாள் திருத்தேரையும், தேர்மண்டபத்தையும் காணலாம்.

அதன்பிறகு, 16 கால் மண்டபம் கொடிமரம், பலிபீடம், கருடன் கோயில், திருமங்கை ஆழ்வார் சன்னதியும் உள்ளது. மேலும் எல்லாத் தலங்களிலும் வடக்கில் தான் பரமபதவாசல் உள்ளது. ஆனால் இத்தலத்தில் தெற்கு சுற்றில் தெற்கு நோக்கியவாறு பரமபதவாசல் உள்ளது காணலாம்.

இரண்டாம் கோபுர வாயிலில் அருள்மிகு நவநீதக் கண்ணன் தரிசனம் பார்க்கலாம். நூற்றுக் கால் மண்டபத்தின் வடபால் நடுவில் சீதை, இலக்குவன், அனுமன் இவர்களுடன் அருள்மிகு ராமன் காட்சி தருகிறார். அதன் வடபுறம் அனுமன் ஆலயம், யோக நரசிம்மர், திருச்சக்கரத்தாழ்வார் சன்னதிகளையும் காணலாம். இது போல் பல சன்னதிகளையும் இந்த 6 சுற்றுக்களில் காணலாம் என்பது விசேஷமாகும்.

**கோபுரங்கள்:**

எல்லா சந்நிதிகளுக்கும் விமானங்கள் உண்டு. 16 கோபுரங்களைக் காணலாம். பெரிய கோபுரம் 5 அடுக்குகளை கொண்டதாகும். இதன் உயரம் 76 அடி உள்ளது. இதன் தெற்கில் கீழ் விமானத்துடன் ஒட்டிய ஸ்ரீதாமோதர் பிள்ளையார் சன்னதி உள்ளது காணலாம். மேலும் இக்கோயில் வைகாநஸ ஆகமவிதிப்படி கோயில் பூஜைகள் நடைபெறுகிறது. இவ்விடம் தனி நாச்சியார் கோயில் கிடையாது. அது போல் ஆண்டாளுக்கும் தனிக்கோயில் இல்லை.

**திருவிழாக்கள்:**

சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் வரை உள்ள காலத்தில் எல்லா உத்ஸவங்களும் நடைபெறுகிறது.

## தான்தோன்றி மலைக்கோயில்

திண்டுக்கல் - கரூர் சாலையில் இம்மலைக் கோவில் உள்ளது. ஏழடி உயரமும் நான்கடி அகலமும் கொண்ட மூலவர் கல்யாண வேங்கட ரமணசுவாமி. இவருக்குத் தான் தோன்றிப் பெருமாள் எனும் திருநாமமும் உண்டு.

மலைக்கோவிலுக்கு மூன்று பாதைகளும், படிகளும் இருப்பது சிறப்பு.



சித்திரைமாதம்:

திருவாதிரை நட்சத்திர நாளில் உடையவர் சன்னதிக்குப் பெருமாளும், தாயாரும் எழுந்தருளுதல். உடையவர் நட்சத்திரம் திருவாதிரை ஆகும்.

வைகாசி:

வைகாசி விசாகத்தன்று வஸந்தோத்ஸவ - தினத்தின் போது சாற்று முறையின் போது பெருமாளுடன் நம்மாழ்வாரும் கூடப் புறப்பாடு ஆகிறார். வஸந்தோத்ஸவம் 10 நாட்கள் நடைபெறுகிறது.

ஆடி:

பவித்திரோத்ஸவம், சுக்கில பட்சம் துவாதசி அன்று தீர்த்தவாரி 5 நாட்கள் உண்டு.

சுவாதி- நக்ஷத்திரத்தன்று (பட்சிராஜன் திருவிழா) பெருமாளும்தாயாரும்கருடன்மேல் எழுந்தருளுதல்.

ஆவணி:

விசாகத்தன்று திருக்கல்யாண மஹோத்ஸவம்.

புரட்டாசி:

நவராத்திரி திருவிழா (9நாட்கள்நடைபெறுகிறது)

ஐப்பசி:

ஸ்ரீமணவாள மாமுனிகளின் மூல நட்சத்திர திருவிழா 10 நாட்கள் உள்ளது. சாற்று முறையன்று பெருமாள் மாமுனிகளின் சந்நிதிக்கு எழுந்தருளி பிறகு சேஷவாகனத்தில் மாமுனிவருடன் திருவீதி புறப்பாடு உண்டு.

கார்த்திகை:

திருக்கார்த்திகை நாளில் தீபோத்ஸவம், ஆழ்வார் புறப்பாடு ஆகிறார்.

மார்கழி:

வைகுண்ட ஏகாதசி, பகல்பத்து, இராப்பத்து இருபது நாட்கள் நடைபெறுகிறது.

பங்குனி:

பௌர்ணமியன்று திருத்தேர், பிரம்மோத்ஸவம், நான்காம் நாள் கல்கருடன் தரிசனம், ஸ்ரீராமநவமி உத்ஸவம், ஸ்ரீராமன் புறப்பாடு நடைபெறுகிறது.



# திருநீறு தந்த கைமேல் பலன்!

(நீதிக் கதை)

பூங்குளம் என்ற கிராமத்தில் கந்தசாமி என்ற நெசவாளி இருந்தான். அவன் மிகப்பாடுபட்டு உழைத்தும் கஷ்டம் தீர்ந்தபாடில்லை

ஒருநாள் அவன் மனைவி கண்ணம்மா, ''என்னங்க நம்ம ஊருக்கு ஒரு சாமியார் வந்திருக்கிறாராம். எல்லோரும் போய் கும்பிட்டு வாராங்க... நீங்களும் போய், நம்ம கஷ்டம் எப்ப தீருமுன்னு கேட்டுட்டு வாங்க'', என்றாள்.

கந்தசாமியும் சாமியாரைப் பார்த்துச் சாஷ்டாங்கமாகக் கும்பிட்டுத் தன் கஷ்டம் தீரவழி கேட்டான். ''நீநாள்தோறும் காலையில் குளித்துப் பூஜை செய்து பாடுபடு, வறுமை அகலும்'' என்றார்சாமியார்.

''எனக்கு அதற்கெல்லாம் நேரம் ஏது?'' என்றான் கந்தசாமி. ''சரி, அப்படியானால் திருநீறிட்ட யாரையாவது பார்த்துப் பின் உணவருந்து'' என்றார்சாமியார்.

''சரி, அது தான் எனக்குச் சுலபம். யாராவது திருநீறு இட்டவர்கள் தென்படாமலா போவார்கள்! நான் அப்படியே தினமும் செய்கிறேன்'' என்றான் கந்தசாமி.

கந்தசாமி சாமியார் சொன்னபடியே தினமும் திருநீறு இட்டவரைப் பார்த்த பிறகு உணவு அருந்தினான். ஒரு நாள் திருநீறு அணிந்தவர் ஒருவரும் அவன் கண்களுக்கு தென்படவில்லை.

''கண்ணம்மா! இன்றொரு நாள் மட்டும் திருநீறு அணிந்தவரைக் காணாமல் தான் சாப்பிடுகின்றேனே! பசி வயிற்றைக் கிள்ளுகிறது'' என்றான்.

''ஊஹூம் கூடாது. சாமி குத்தம் வந்து சேரும்'' என்று மறுத்தாள் கண்ணம்மா. ''பக்கத்துத் தெருவில் இருக்கும் அப்பண்ணா, நாளும் பூசைசெய்ய தவறுவதே இல்லை. அவரைப் போய் பார்த்து வாருங்கள்'' என்றாள்.

கந்தசாமி பக்கத்துத் தெருவிற்கு ஓடினான். அப்பண்ணா வீடு பூட்டியிருந்தது, ஏதோ வேலையாகப் பக்கத்து ஊருக்குப் போயிருந்தார் அவர்.

ஏமாற்றத்துடன் திரும்பி வந்த கந்தசாமி ''கண்ணம்மா! இப்போது என்ன செய்வது?'' என்றான்.

''நம்ம கிராமத்தின் கடைசியில் குடிசைபோட்டிருக்கும் குயவர் ஆசாரமானவர், நான் பலமுறை பார்த்திருக்கிறேன், அவர் நெற்றியில் திருநீறு அணியாமல் இருந்ததே இல்லை. ஓடிப் போய் அவரைப் பார்த்து வந்து விடுங்கள்'' என்றாள்.

அதன்படி அங்கு ஓடினான். பானைகள் செய்வதற்காக மண்ணைத் தோண்டிக் கொண்டிருந்த குயவர் ''டிங்'' என்ற சத்தம் கேட்க மேலும் தோண்டினார்.

''ஆ! ஒரு பானை நிறைய தங்க காசுகள்!''

கந்தசாமி குயவரைத் தேடிவந்தவன், தூரத்திலிருந்தே அவருடைய நெற்றியில் திருநீற்றைப் பார்த்து விட்டான். ''ஆஹா! பார்த்து விட்டேன்'' என்று திருநீற்றைப் பார்த்த களிப்பில் வீட்டிற்கு திரும்பி ஓட முற்பட்டான்.

''இந்தாப்பா நில்லு'', என்று விரட்டினார் குயவர்.


''பார்த்து விட்டேனே!'' என்று மீண்டும் மீண்டும் சத்தமிட்டான், கந்தசாமி.

கந்தசாமியை அதற்குள் ஓடிப்பிடித்த குயவர், ''ஆமாம்பா, பார்த்துட்டே ! நான் இல்லேன்னா சொல்றேன்.

ஒரு குடம் தங்கக்காசு தான் கிடைத்தது யாரிடத்திலும் சொல்லாதே! ஆளுக்குப் பாதி இரகசியமாக வச்சுக்கலாம்,'' என்றார் குயவர்.

அப்போது தான் கந்தசாமிக்குத் தங்கக்காசு புதையல் கிடைத்த விவரமே புரிந்தது.

''திருநீற்றை அணிந்தவரை தினமும் பார்த்து உணவுண்ண ஆரம்பித்த போதே இப்படியொரு அதிர்ஷ்டமா?''



''தினமும் கோயிலுக்கே போய் சாமி கும்பிட்டு வந்தால் எத்தகைய அதிர்ஷ்டம் வாய்க்கும்'' எனறு சிந்தித்த கந்தசாமி அன்றிலிருந்து தினமும் கோயிலுக்குப் போக ஆரம்பித்தான்.

அவனுடைய பக்தியைப் போலவே வாழ்வும் பிரகாசிக்க பூரித்துப் போனாள் கண்ணம்மா.

# எது பாடல் பெற்ற தலம் ? திருவிசயமங்கையா? கோவிந்தப்புத்தூரா?



''கொள்ளிடக்கரை
கோவந்தப்புத்தூரில்
வெள்விடைக்கருள்
செய் விசயமங்கை''
-அப்பர்

''கோதனம் வழிபடக் குலவு
நான்மறைவேதியர்
தொழுதெழு விசயமங்கை''
-சம்பந்தர்.

பேராசிரியர். டாக்டர். இல. தியாகராஜன்
வரலாற்றுத் துறைத் தலைவர்,
அரசுக் கல்லூரி, அரியலூர்.

அப்பர், சம்பந்தர்,சுந்தரர் ஆகிய மூவராலும் தேவாரப் பதிகங்கள் பாடப்பெற்று வழிபடப் பெற்ற திருக்கோயில்களைப் பாடல் பெற்ற தலங்கள் என்று குறிப்பிடுவது சைவ சமய மரபு. அவ்வாறு பாடல் பெற்றனவாக 274 தலங்கள் உள்ளன. இவற்றில் சோழ நாட்டில் காவிரிக்கு வடகரையில் 63 தலங்களும், தென்கரையில் 127 தலங்களும் உள்ளன.

இவற்றில் தேவாரத் தொகுப்பு நூல்களில் காவிரி வடகரைத் தலங்களில் 47வது தலமாக குறிப்பிடப்படுவது திருவிசயமங்கை என்ற தலமாகும். பாபநாசம் வட்டத்தில் கொள்ளிட ஆற்றின் தென்கரையில் திருவைகாவூருக்கு அருகில்



திருவிசயமங்கை அமைந்துள்ளது.

ஆனால் ஆன்மீக அன்பர்களிடையே திருவிசயமங்கையும் அங்குள்ள விசயநாதர் கோயிலும்தான் அப்பர், சம்பந்தர் ஆகியோரால் பாடப்பெற்ற உண்மையான தலமா? அல்லது கொள்ளிடத்தின் வடகரையில் அமைந்துள்ள கோவிந்தப்புத்தூரும், அங்குள்ள கல்வெட்டுக் களில் விசையமங்கை உடைய நாயனார் கோயில், ஸ்ரீவிஜ்யமங்கலத்து மகாதேவர் கோயில் என்றும் குறிப்பிடப் படுவதுமான அருள்மிகு மங்களாம்பிகை உடனுறை கங்காஜடாதீஸ்வரர் கோயில்தான் உண்மையான பாடல் பெற்றதலமா? என்பது குறித்து பெரிய அளவில் ஐயப்பாடு நிலவுகிறது.

பெரம்பலூர் மாவட்டம் உடையார் பாளையம் வட்டத்தில் கோவிந்தப்புத்தூர் என்ற ஊர் உள்ளது. கொள்ளிட ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள இவ்வூரை அரியலூரிலிருந்து வி. கைகாட்டி, நாகமங்கலம், விக்கிரமங்கலம் ஆகிய ஊர்கள் வழியாகச் சென்றடையலாம். இவ்வூரை அடுத்து ஸ்ரீபுரந்தான் என்ற வரலாற்றுச் சிறப்புடைய ஊரும் உள்ளது.


கோவிந்தப்புத்தூரில் உள்ள கங்கா ஜடாதீஸ்வரர் கோயிலும் இவ்வூரும்தான் அப்பர், சம்பந்தர் ஆகியோரால் பாடப்பெற்றுள்ள விசயமங்கை என்று இவ்வூர்மக்களும் ஆய்வாளர்களும் கூறுகின்றனர்.

இதற்காக முழுமையான ஆதாரங்களைத் திரட்டுவதற்காகத் தீவிர கள ஆய்வுப்பணிகளை இரண்டு ஊர்களிலும் மேற்கொண்டோம். கோவிந்தப்புத்தூர்க் கோயிலில் உள்ள அனைத்துக் கல்வெட்டுக்கள், சிற்பங்கள், ஊர்ப்பெயர்கள், புராண இதிகாசச் செய்திகள், தேவாரப்பதிகங்கள் உள்ளிட்ட அனைத்துவகைத் தரவுகளும் சேகரிக்கப்பெற்று நுணுகி ஆராய்ந்ததன் விளைவாக கிடைத்துள்ள முடிவுகளை ஆன்மீக உலகத்தின்முன் இங்கு வைத்துள்ளேன்.

**திருவிசயமங்கைக் கோயிலின் அமைப்பு**

பாபநாசம் வட்டத்தில் மண்ணியாற்றின் வடகரையில் வரிசையாக உள்ள கொந்தகை, அதியம்பநல்லூர், கீழமாஞ்சேரி ஊரையடுத்து திருவிசயமங்கை உள்ளது. இவ்வூரை அடுத்து மேலமாஞ்சேரி, மண்ணிக்கரை, திருவைகாவூர் ஆகிய ஊர்கள் உள்ளன. திருவிசயமங்கையி லிருந்து வடக்கே இரண்டு கி.மீ. தொலைவில் கொள்ளிடம் ஓடுகிறது. மண்ணியாற்றங் கரையில் உள்ள கீழமாஞ்சேரி பஸ் நிறுத்தத்தில் இறங்கி சிறிது தூரம் நடந்தால் விஜயமங்கை கோயிலை அடையலாம்.

கோயிலைச் சுற்றிலும் 50, 60 வீடுகளே உள்ளன. கோயிலுக்குமுன் சிறிய குளம் உள்ளது. இது



**மாசி மாதத்தில் நாயன்மார்கள் ஆழ்வார் நட்சத்திரங்கள்**

எறிபத்தர் - அத்தம்

காரியார் - பூராடம்

கோச்செங்க சோழர் - சதயம்

குலசேகராழ்வார் - புனர்பூசம்


## அர்த்தநாரீசுவரமூர்த்தி



சிவபெருமானார் உமாதேவியைத் தம் வாம பாகத்தில் கொண்டு விளங்கும் திருக்கோலம் அர்த்த நாரீசுவரமூர்த்தி ஆகும்.

திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரரை அபிசேகம் செய்து வழிபட குடும்ப ஒற்றுமை ஓங்கும்.

அர்ச்சுனத் தீர்த்தம் எனப்படுகிறது. செங்கல்லால் ஆன சுற்று மதிலுடன் உள்ள இக்கோயிலின் கருவறை, அர்த்த மண்டபம் மட்டும் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. மகா மண்டபம், அம்மன் சன்னதி ஆகியவை செங்கல்லால் ஆனது. விஜயநாதர், மங்களாம்பிகை என இறைவனும், இறைவியும் அழைக்கப்படுகின்றனர். சிவலிங்கத்தின் மேல் ஒரு தழும்பு உள்ளதாகவும் இது அர்ச்சுனனுடன் இறைவன் போரிட்டதால் ஏற்பட்ட காயத்தின் வடு என்றும் கூறப்படுகிறது.



நாகர வடிவ விமானத்துடன் கட்டப்பட்டுள்ள இக்கோயிலில் கல்வெட்டுக்கள் ஏதுமில்லை.

பிற்காலச் சோழர் காலத்து தட்சிணாமூர்த்தி சிற்பம் மட்டும் உள்ளது. பல்வேறு வகையான துண்டுக்கற்களைக் கொண்டு கோயிலின் கருவறைக் கட்டிடப்பகுதிகள் கட்டப்பட்டுள்ளன. திருவிசய மங்கை என்னும் ஊர்ப்பெயர் தவிர வேறு சான்றுகள் ஏதும் இங்கு இல்லை. இவ்வூருக்கு அருகில் திருப்புறம்பியமும், திருவைகாவூரும் உள்ளன. அவ்வூர்களில் 150க்கும் அதிகமான கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றிலும் திருவிசயமங்கையைப் பற்றிய குறிப்புகள் இல்லை.

வசிஷ்டகோத்திரத்து கண்ணப்பக் குருக்கள் இக்கோயிலில் பூஜைகள் செய்து வருகிறார். கொள்ளிடத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் இங்கிருந்தபடியே அக்கரையில் உள்ள கோவிந்தபுத்தூர் இறைவனை அப்பரும், சம்பந்தரும் பாடியதாக ஒரு செவிவழிச் செய்தி கூறப்படுகிறது. திருச்சி தாயுமானவர் உழவாரப்பணி மன்றத்தினர் இக்கோயிலை 2003 ல் திருப்பணி செய்துள்ளனர்.


**கோவிந்தபுத்தூர்க் கோயிலின் அமைப்பு:**

கங்காஜடாதீஸ்வரர் கோயில் இரண்டு பிரகாரங்களுடன் கிழக்கு நோக்கியவண்ணம் கட்டப் பெற்றுள்ளது. இக்கோயிலின் முதல் கோபுரவாயிலில் பாதி மட்டுமே கட்டப் பெற்றுள்ளது. கோபுரச் சுவர்களில் சிவலிங்கத்தின் மீது பசுவொன்று பாலைப் பொழிந்து வழிபடும் காட்சி சிற்பமாக செதுக்கப் பட்டுள்ளது.

வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் விசாலமான இரண்டாம் பிரகாரம் உள்ளது. இதன் வலப்பக்கம் அம்மன் சன்னதி - தெற்கு நோக்கியபடி நின்ற கோலத்தில் அருள்மிகு மங்களாம்பிகையின் தரிசனம். இடப்பக்கம் இடிந்து போய்விட்ட மடப்பள்ளியின் மீதிச் சுவர்கள். மூலவரை நோக்கியபடி நந்தி, பலிபீடம், கொடிமர பீடம் ஆகியன உள்ளன. கொடிமரம் இல்லை. அம்மன் சன்னதியையொட்டி சிறிய வாகன மண்டபம் உள்ளது. விழாக்காலங்களில் சுவாமியை எழுந்தருளச் செய்ய இது கட்டப் பட்டுள்ளது. இக்கட்டிடமும் இடிந்த சுவர்களுடன் காட்சியளிக்கிறது.

இரண்டாம் கோபுர வாயிலும் சுற்று மதில் சுவர்களும் கருங்கல் திருப்பணிகளாகவுள்ளன. வாயிலின் இடப்பக்கமுள்ள கோபுர விநாயகரை வணங்கி உள்ளே செல்கிறோம். விசாலமான மகாமண்டபம், கூரையில் புராணங்களைச் சித்தரிக்கும் ஓவியங்கள். சனிமூலையில் நவக்கிரக சன்னதி. இதன் பின்புறம் சந்திரன், சூரியன், பைரவர் ஆகிய சிற்பங்கள் உள்ளன. வடக்குப் பக்கம் தெற்கு நோக்கியபடி அம்பலத்தில் ஆடும் நடராஜர் சன்னதி மற்றும் பொருள்கள் வைப்பறைகள் உள்ளன.

இம்மண்டபத்தைத் தாண்டி உருண்டையான பெரிய தூண்கள் கொண்ட முன்மண்டபம் உள்ளது. இதை அடுத்து உள்ளே சென்றால் கங்காஜடாதீசர் சிவலிங்கத் திருமேனியராய் எழுந்தருளி நிற்கும் மூலஸ்தான தரிசனம். சுவாமியை வணங்கிவிட்டு



முன் மண்டபத் தெற்குவாயில் வழியாக வெளியே வந்தால் முதல் திருச்சுற்று மாளிகையுடன் கூடிய முதற்பிரகாரம்.

இத்திருச்சுற்று மாளிகையின் வடக்கு, தெற்கு, மேற்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் வரிசையாக தூண்களை நிறுத்தி திண்ணை போன்ற உயரமான நடைமாளிகை அமைக்கப் பட்டுள்ளது. தெற்குப் பக்கத்தில் சப்தமாதர்கள், துர்க்கை, மற்றும் பழைய தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட உதிரி சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. தென்மேற்கு மூலையில் ஸ்தல விநாயகர் சன்னதி. மேற்கில் முருகன் சன்னதி, வடமேற்கு மூலையில் ஸ்தலபுராணத்தை விளக்கும் வகையில் பசு சிவலிங்கத்திற்குப் பால் பொழிந்து வழிபடும் காட்சி கதைசிற்பங்களாக வடிவமைக்கப் பட்டுள்ளது. வடக்குப் பக்கத்தில் தெற்கு நோக்கியபடி வள்ளிதேவ சேனையுடன் நின்ற கோலத்தில் அருள் பாலிக்கும் மற்றொரு முருகன் சன்னதியும் உள்ளது.

கருவறைக்கும் அர்த்த மண்டபத்திற்கும் இடையே சண்டிகேஸ்வரர் சன்னதி, அதனருகே திருமஞ்சனக்கிணறு ஆகியவை அமைந்துள்ளது. மூலவர் கோயிலானது கருங்கல் திருப்பணியால் ஆன கருவறை, அர்த்தமண்டபம், முன் மண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகளுடனும் செங்கல் சுதையால் ஆன வேசரவிமானக் கட்டிடப் பகுதி களுடன் உள்ளது. கருவறையின் வெளிச்சுவர் தேவகோஷ்டங்கிகளில் தட்சிணாமூர்த்தி (தெற்கு), விஷ்ணு (மேற்கு), பிரம்மா (வடக்கு) ஆகிய சிற்பங்கள் உள்ளன. அர்த்த மண்டபத்தின் வடக்குச் சுவரில் துர்க்கையும், தெற்குப் பக்கத்தில் விநாயகரும் காட்சி தருகின்றனர். அர்த்த மண்டபச் சுவர்களில் பக்கத்திற்கு இரண்டு கோஷ்டங்கள் வீதம் குடையப் பெற்று வடக்கில் பிக்ஷாடனர், காலாரிமூர்த்தியும் தெற்கில் ஆடவல்லான் சிற்பங்களும் உள்ளன. ஒரு கோஷ்டம் மட்டும் காலியாகவுள்ளது.

**ஊரும் பேரும்**

ஒரு காலத்தில் இவ்வூர் காடாக விளங்கியது. இங்குள்ள வில்வமரத்தின் அடியில் இருந்த புற்றில் சுயம்புவாகத் தோன்றியிருந்த சிவலிங்கத்தின் மீது தேவலோகப் பசுவான காமதேனு வந்து தானாகப் பாலைப் பொழிந்து வழிபட்டது என்பதால் இவ்வூருக்கு கோ-வந்த-புற்றூர் என்றப் பெயர் ஏற்பட்டு அதுவே பிறகு கோவந்தப்புத்தூர் என ஆயிற்று என்று அன்பர்கள் கூறுகிறார்கள்.

கி.பி. 7ம் நூற்றாண்டில் முதலாம் மகேந்திர வர்ம பல்லவரின் காலத்தில் வாழ்ந்த திருநாவுக்கரசர் இவ்வூர் அமைவிடத்தையும் பெயரையும் கூறும் போது "கொள்ளிடக்கரை கோவந்தப்புத்தூர்"

## ஆதிகுரு அருள்மிகு தட்சிணா மூர்த்தி



தென்முகக் கடவுளான தட்சிணாமூர்த்தி எல்லா தலங்களிலும் சனகாதி முனிவர்கள் நால்வருடன் அமர்ந்து அருள் பாலிப்பது போன்று இருக்கும்- ஆனால் திருச்சி தாயுமானவர் சுவாமித் திருத்தலத்தில் எட்டு முனிவர்களுக்கு (சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர், சிவயோகமாமுனி, பதஞ்சலி, வியாக்ரமர், திருமூலர்) உபதேசம் செய்து தர்ப்பாசனத்தில் அமர்ந்து அருள்பாலிப்பது வேறு எந்த தலங்களிலும் இல்லாத சிறப்பாகும், இத்தலத் தட்சிணாமூர்த்தியை வணங்கினால் கல்வியும் ஞானமும் கிடைக்கும்

என்று பாடியுள்ளார். அதே போல பசு பால் பொழிந்து வழிபட்ட செய்தியை சம்பந்தர் பாடும் பொழுது "கோதனம் வழிபடக் குலவு நான்மறை வேதியர் தொழுதெழு" என்று குறிப்பிடுகிறார்.

இன்னம்பூரில் கி.பி. 1372ல் எழுதப் பெற்றுள்ள விஜயநகர மன்னர் கம்பணரின் கல்வெட்டு இவ்வூர்ப் பெயரைக் கோவிந்தப் புத்தூர் என்றும், இது கோவிந்தப்புத்தூர் நாட்டின் தலைநகரமாக இருந்தது என்றும் குறிப்பிடுகின்றது. மேலும் இக்கோயிலின் மதிற் சுவரில் வைத்து கட்டப்பட்டுள்ள கல்லில் உள்ள பிற்காலத்திய கல்வெட்டிலும் கோவிந்தபுத்தூர் என்று எழுதப்பட்டுள்ளது.



**ஆகவே கோவிந்தப்புத்தூரே விசயமங்கை**

கொள்ளிட ஆற்றின் வடக்குக் கரையில் அமைந்துள்ள இக்கோவிந்தப்புத்தூர்தான் விசயமங்கை என்றும், இவ்வூரில் தான் பாண்டுவின் மகன் பார்த்தன் எனும் விஜயன் சிவபெருமானை வழிபட்டுப் பாசுபத அஸ்திரம் பெற்றான் என்பதால் இவ்வூருக்கு விஜயமங்கலம், விஜயமங்கை என்றப் பெயரும் இங்குள்ள கோயில்




திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசியன்று சொர்க்கவாசல் திறப்புவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. அறநிலையத் துறையின் கூடுதல் ஆணையாளர் திருமிகு **எஸ்.கனகய்யா பி.எஸ்.சி., பி.எல்** அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இறைவனுக்கு விஜயமங்கலத்து மகாதேவர் என்றப் பெயரும் ஏற்பட்டது என்று ஆன்றோர்கள் கூறுகின்றனர். இச்செய்தியை அப்பர் தமது பாடல்களின் மூலம் உறுதிசெய்வதைப் பின்வரும் பதிகவரிகள் உணர்த்துகின்றன.

''பாண்டுவின் மகன் பார்த்தன் பணி செய்து
வேண்டு நல்வரவுகொள் விசயமங்கை''

''கொள்ளிடக்கரை கோவந்தப் புத்தூரில்
வெள்விடைக்கருள் செய் விசய மங்கையே''

கோவிந்தப்புத்தூரில் விசயமங்கை கோயில் அமைந்துள்ளதை. இப்பதிகவரிகள் உணர்த்து கின்றன. கோ தனம் வந்து வழிபட்டதால் கோவந்தப்புத்தூர் என்ற பெயர் ஏற்பட்டதை,

''கோதனம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தொழுதெழு விசயமங்கையே''

எனும் சம்பந்தரின் பாடல் வரிகளும் உணர்த்துகின்றன.

**கல்வெட்டுத்தரும் கோயில் பெயர்கள்**

இக்கோயிலில் கி.பி. 929 முதல் 1430 வரை எழுதப் பெற்றுள்ள 75க்கும் அதிகமான கல்வெட்டுக்களும் உள்ளன. இவை சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர் ஆட்சிக் காலங்களில் எழுதப் பெற்றவையாகும். இவற்றில் காலத்தால் முந்தியது கி.பி. 929ல் எழுதப் பெற்ற முதலாம் பராந்தகச் சோழரின் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு இவ்வூர்ப் பெயரையும் கோயிலையும் குறிப்பிடும் போது,

''வடகரை பிரம்மதேயம் பெரிய ஸ்ரீ வானவன் மாதேவிச்
சதுர்வேதிமங்கலத்து ஸ்ரீவிஜயமங்கலத்து மகாதேவர்''

என்று கூறுகிறது.

மேலும் கி.பி. 922 முதல் 1430 வரை எழுதப் பெற்றுள்ள கல்வெட்டுகளில் இவ்வூர்ப் பெயரும், கோயில் பெயரும் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

''ஸ்ரீவிஜயமங்கலத்து மகாதேவர்'' (கி.பி. 929, 980)

''ஸ்ரீவிஜயமங்கலமுடைய பரமஸ்வாமி'' (கி.பி. 988)

''ஸ்ரீ விஜயமங்கலமுடைய மகாதேவர் கோயில்'' (கி.பி. 1022, 1139)

''உடையார் திரு விசையமங்கையுடையார் கோயில்'' (கி.பி. 1324)

''திரு விசையமங்கையுடைய நாயனார் கோயில்'' (கி.பி. 1248, 1429)

கல்வெட்டுத்தரும் இப்பெயர்களிலிருந்து அப்பர், சம்பந்தர்பாடிய பதிகங்கள்கூறும் திருவிசயமங்கை என்ற கோயில் கோவிந்தப் புத்தூரிலுள்ள சிவன்கோயிலே என்பதைத் தெள்ளத்தெளிவாக அறியலாம்.


சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } திருமிகு **த. பிச்சாண்டி**, இ.ஆ.ப., ஆணையர்.
: தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13

ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,

அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929

# அருள்மிகு சுகவனேசுவரர் சுவாமி திருக்கோயில்



சேலம் நகர் - 636 001.

தொலைபேசி: 0427 - 2450954



## தங்கரதத் திருப்பணி

அருள்மிகு சுகவனேசுவரர் சுவாமி மற்றும் சொர்ணாம்பிகை அம்மனுக்கு ரூ. 64- இலட்சம் மதிப்பீட்டில் தங்கரதத் திருப்பணி துவங்கப்பட்டுள்ளது. இத்திருப்பணிக்கு நன்கொடை வழங்கி இறையருள் பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஆலயத் திருவிழாக்கள் விவரம்.

| | | |
|---|---|---|
| 1. சித்திரை | - | சுவாமி அம்பாளுக்குத் தங்கநாகாபரணம், தங்கக்கவசம் சாத்துப்படி |
| 2. வைகாசி | - | விசாகத் தேர் திருவிழா 10 நாள் உற்சவம் |
| 3. ஆனி | - | ஆனி உத்திர நடராஜர் தரிசனம் (ஆனி திருமஞ்சன உற்சவம்) |
| 4. ஆடி | - | ஆடிப்பூரத் திருநாள் உற்சவம் |
| 5. ஆவணி | - | விநாயக சதுர்த்தி உற்சவம், ஆவணி மூல உற்சவம் |
| 6. புரட்டாசி | - | நவராத்திரி உற்சவம் |
| 7. ஐப்பசி | - | கந்தர் சஷ்டி, அன்னாபிஷேகம், நிறைமணிவிழா |
| 8. கார்த்திகை | - | திருக்கார்த்திகை தீபம் |
| 9. மார்கழி | - | ஆருத்ரா தரிசனம் 10 நாள் உற்சவம் |
| 10. தை | - | தைப்பூசத் திருவிழா |
| 11. மாசி | - | மஹா சிவராத்திரி உற்சவம் |
| 12. பங்குனி | - | உத்திரத் திருவிழா |

## தானத்தில் சிறந்தது அன்னதானம்

1) பக்தர்கள் தங்களுடைய பிறந்தநாள், திருமணநாள், குழந்தைகளின் பிறந்தநாள் மற்றும் விரும்பிய நாட்களில் தானத்தில் சிறந்த அன்னதானத்திற்கு நாள் 1க்கு ரூ.1250/- செலுத்தியும் (நாள் 1க்கு 100 பக்தர்களுக்கு மதிய உணவு அளித்தல்) அன்னதான நிரந்தரக் கட்டளைக்கு ரூ.15,000/- செலுத்தியும் பங்கேற்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2) இதன் உபகோயில் அருள்மிகு காசிவிசுவநாதர் சுவாமி திருக்கோயிலில் அன்னதானத்திற்கு நாள் 1க்கு ரூ.600/- செலுத்தியும் (நாள் 1க்கு 50 பக்தர்களுக்கு மதிய உணவு அளித்தல்) நிரந்தரக் கட்டளைக்கு 7500/- செலுத்தியும் பங்கேற்க அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் மொத்தமாக வைப்பு நிதி (Corpus Fund) ஏற்படுத்தவும் நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. இதற்கு வருமான வரிச்சட்டம் 80ஜி ன் படி 50% வரிவிலக்கு உண்டு.

நன்கொடையாக அரிசி, காய்கறி மற்றும் இதரப் பொருட்களும் வழங்கலாம். அன்னதானம் வழங்க விரும்புவோர் திருக்கோயில் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

Vist Our Web Site :- www.Sugavaneshwarartemple.info

E.Mail ID:- eswaransalem@sancernet.in


ஜே.வி.கே.ஜெயவேல் — அறங்காவலர் குழுத்தலைவர்

நா.புகழேந்தி பி.ஏ.,பி.எல். — உதவி ஆணையாளர்/செயல் அலுவலர்.

அறங்காவலர்கள்:

எஸ்.கந்தசாமி ஏ.குமரேசன் எம்.இராஜமூர்த்தி என்.ஜமுனாராணி.

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08



# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

## தைப்பூசத்திருவிழா அழைப்பிதழ்

பழனி. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் 2006 ஆம் ஆண்டு தைப்பூசத் திருவிழா வருகிற 05-02-2006 ஆம் நாள் தொடங்கி 14-02-2006 ஆம் நாள் முடிய நடைபெற உள்ளது.

### முக்கிய திருநாட்கள் விபரம்

05-02-2006 கொடியேற்றம் - காலை 9.00 மணி முதல் 10.30 மணிக்குள்.

10-02-2006 திருக்கல்யாணம் - காலை 6.30 மணிக்கு மேல் 8.00 மணிக்குள். வெள்ளி ரதம் புறப்பாடு இரவு 8.30 மணிக்கு.

11-02-2006 தைப்பூசம் திருத்தேர் மாலை 4.30 மணிக்கு.

14-02-2006 இரவு தெப்பத்தேர் - திருவிழா நிறைவடைதல்.

### தரிசன வழி விபரங்கள்

| | | |
|---|---|---|
| 1. பொது தரிசனம் வழி | - | கட்டணம் இல்லை |
| 2. சிறப்பு அனுமதி வழி | - | ரூ.20/- |
| 3. தனிவழி சிறப்புக் கட்டணம் | - | ரூ.200/- |

### பஞ்சாமிர்தம்

இத்திருக்கோயிலில் விசேசபிரசாதமான அபிசேகப் பஞ்சாமிர்தம், மலை வாழைப்பழம், முதல்தரமான கரும்புச் சர்க்கரை, பேரீச்சை, நெய், கல்கண்டு, தேன், ஏலக்காய் முதலிய பொருட்களைத் தரமான முறையில் இயந்திரம் மூலமாகச் சுத்தமாகத் தயாரிக்கப்பட்டு சுகாதாரமான டப்பாக்களில் அடைக்கப்பட்டு 500-கிராம் எடை உள்ளது ரூ.25/- மற்றும் 30/- வீதம் திருக்கோயில் பஞ்சாமிர்த விற்பனை நிலையங்களான 1. மலைக்கோயில் தெற்கு வெளிப்பிரகாரம் 2. மலைக்கோயில் வடக்கு வெளிப்பிரகாரம், 3. வின்ச் நிலையம் அருகில் - மேற்கு கிரிவீதியில், 4. மங்கம்மாள் மண்டபம் அருகில், மற்றும் 5. பாதவிநாயகர் கோயில் ஆகிய ஐந்து விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இறையன்பர்கள் பஞ்சாமிர்தப் பிரசாதத்தைப் பெற்று இறையருள் பெற அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### அன்னதானம்.

இத்திருக்கோயிலில் அன்னதானத்திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. பக்தர்கள் ரூ.2500/- செலுத்தினால் ஒரு நாளைக்கு மட்டும் 200 நபர்களுக்கும், ரூ.1500/- செலுத்தினால் ஒரு நாளைக்கு மட்டும் 100 நபர்களுக்கும் உபயதாரர்கள் பெயரில் மலைக்கோயிலில் அன்னதானம் பக்தர்களுக்கு வழங்கப்படும். மேலும் ரூ.25,000/- டெபாசிட் செலுத்தி 200 நபர்களுக்கு அல்லது ரூ.15,000/ டெபாசிட் செலுத்தி 100 நபர்களுக்குக் குறிப்பிட்ட ஒரு நாளைக்கு மட்டும் அன்னதானம் வழங்க அன்னதானக் கட்டளையில் பங்கு பெறலாம்.

### பக்தர்களுக்கு சிறப்பான ஏற்பாடுகள்

1. பழனி நகராட்சிப்பள்ளியில் தற்காலிகப் பேருந்து நிலையம் - கிழக்கு கிரிவீதியில் திருக்கோயில் தற்காலிகப் பேருந்து நிலையம் - சிறப்புப் பேருந்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
2. பாதயாத்திரை வழித்தடங்களில் நிழற்பந்தல், குடிநீர் வசதி, மின்வசதி, குளியல் அறை மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
3. ரெட்டியார் சத்திரம், ஒட்டன் சத்திரம், சத்திரப்பட்டி, ஆயக்குடி ஆகிய இடங்களில் உள்ள காவடி மண்டபங்கள், புதுதாராபுரம் - தாச்சநாயக்கன்பட்டி தங்கும் மண்டபம் ஆகிய இடங்களில் குளியல், கழிப்பறை வசதிகளுடன் பாதயாத்திரை பக்தர்கள் தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சாலையோரங்களில் நிழற்பந்தல் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
4. பாதயாத்திரை வழித்தடங்களில் நடமாடும் மருத்துவ வசதிகள் முதலுதவி வசதியுடன் - அனைத்து இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
5. மலைக்கோயில், குடமுழுக்கு நினைவரங்கம் மற்றும் பல இடங்களில் அன்னதான வசதி செய்யப்பட்டுள்ளது.
6. வடக்குக் கிரிவீதியிலுள்ள குடமுழுக்கு நினைவரங்கில் பக்தர்களுக்கு 8.2.2006ம் தேதி முதல் 14.2.2006 தேதி முடிய மாலை 6.00 மணி முதல் இரவு 10.00மணி முடிய கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
7. நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் அறைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.
8. பக்தர்கள் வசதிக்காகக் கம்பிவட ஊர்தி மற்றும் வின்ச் இயக்கப்படுகிறது.

எஸ்.வி.பாலசுப்பிரமணியம்,
அறங்காவலர் குழுத் தலைவர்

த.சுந்தரம்,பி.ஏ.பி.எல்
இணை ஆணையர்/நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

கே.எஸ்.என்.வேணுகோபாலு, வி.ஜெயபால், ஆர்.பி.பரமசிவம், சி.கௌரியம்மாள்